சர்வார்த்த

சிற்பசிந்தாமணி

ஜோதிஷம்

வீராசாமி முதலியார் இயற்றியது.

இந்நூல் கிடைக்குமிடம்:—

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

41, வெங்கடராமய்யர் தெரு,

ஜி. டி. சென்னை.

உ

பரமபதி துணை

சர்வார்த்த

சிற்பசிந்தாமணி

ஜோதிஷருக்கும் மற்ற ஏனையோருக்கும் மிக எளிதில்
உபயோகமாகும்படி

ஜோதீஷம்

வீராசாமி முதலியாரவர்கள்

இயற்றியது.

பதிப்பாளர்:

B. இரத்தின நாயகர் & ஸன்ஸ்,

சென்னை.

பதிப்
புரிமை.

1941

விலை
ரூ. 2-8-0.

திருமகள் விலாச அச்சு நிலையம்,
சென்னை :—1941.

முன்னுரை

மாக்ஷிமைதங்கிய கனவான்களுக்கும், தனவான்களுக்கும், கற்றோருக்கும், மற்றோருக்கும், பெரும்பாலும் அறிவிப்பது யாதெனில்:—

நம் தமிழ் நாட்டில் இதற்குமுந்தி வித்வத்திறம் பொருந்திய சிகாமணிகள் அநேக விதமாகிய மனையடி சாஸ்திரம்போல் இன்னும் அநேக சாஸ்திரங்கள் வெளியிட்டிருப்பதை பார்த்தீர்கள். அவைகளெல்லாம் வெண்பாவாகவும், விருத்தமாகவும் செய்து விட்டு மறைந்தார். அவைகள் கற்றவர்க்கே தவிர மற்றவருக்குக் கிஞ்சித்தாகிலும் இடங் கிடைப்பதரிது. ஆகையால் என் குருவின் அருட்பிரசாதத்தாலும் தெய்வீக அனுகூலத்தாலும் எனது சிற்றறிவினாலும் முன்னோர்கள் செய்த எட்டுப் பிரதிகளை ஆராய்ந்து குணாதிசயங்களைப் பகர்ந்து தகுந்த செந்தமிழ்ச் சொற்களால் வசனரூபமாக "சர்வார்த்த சிற்பசிந்தாமணி" யெனப் பெயரமைத்து வெளிப்படுத்தினேன், ஆனால் இதிற்செப்பிய முக்கிய கருத்துகள் யாதெனில்,

அமிர்த சித்தயோகம், நட்சத்திரபலன், தெய்வீகப்பூசை செய்யும் விதி, ஆதாயப் பொருத்தம், ஆதாயச்சிலவு, இராசிப் பொருத்தம், இலக்கினபலன், இராகுசாரம், ஈசான்ய பலன், உத்திராதி நட்சத்திரம், கதவு நிலைநிறுத்தல், கிணற்றின் ஆழக்குறி, கிணற்றின் அனுபவம், கிணறிருக்குந்திசை, மண்பார்க்கும் நிதானம், குருசாரம், குளிகை காலம் பார்க்க, கூபவிதி, பசுக்களைக் கட்டும்விதி, கெற்பப்பொருத்தம், கெற்பகிரகம், கேட்டை நட்சத்திரம், கோயில் கோபுரம் கூடம் மனை அளவும், சமதிவட்டமான ஓர் பள்ளஞ் செய்து அதிற்பூவும் தண்ணீரும்விட்டுக் குறிபார்க்க, சந்து குத்தல், சந்திரபலன், சப்த கிரகங்களிற் சூரியசாரம், சனிசாரம், சல்லியம் பதினாறுக்கும் சாதிப்பொருத்தம், சிற்பரிலக்கணம், சித்திரை நட்சத்திரம், சுபகாரியங்கள் செய்ய வேண்டியதற்கு மூன்றுவிதமான நட்சத்திரங்கள், சுக்கில பக்ஷத்திதி, சுக்கிரவாரம், சுவர்பிளப்பு அல்லது புத்து சூசிகாசங்கராந்தி நிர்ணயம், சூத்திரபலன், செலவு பொருத்தம், சென்ம நட்சத்திரம் பார்க்கும்நிலை, சென்மகேந்திர கிரக பலன், க்ஷேத்திர ஆரூடம், சோடசமனைப் பொருத்தம் பார்க்குதல், திசையறிந்து வாசக்கால் வைக்க, துல்யசமம்

உயரங்கொள்ள தென்பாக பலாபலன் தெற்கு முகமான கிரக மாகியும் ஒன்று மிச்சமாகவரின், தேவதைகள் இருப்பிடமறியும் யந்திரம், தேவாலயச்சிற்பம், தோஷநிவர்த்தி குத்தங்கள், நல்ல நாள், நவக்கிரக பலன், வாசற்கால் வைக்கும் நிர்ணயம், நான்கு வருணத்தார் கிரகதிசை, நால்வகை வருணத்தார் வாசஞ் செய்ய மனைலட்சணம், நிருதிமூலையின் பலன், நிலநீளம் வைக்கும் விதி, நிலைவைக்க நீர் உண்டென்பது பொது விதியாக உணர்த்தி உடனே மடங்காநீர் உண்டென்றும் கீழ்நீருண்டென்றும் பிரித்து உணர்த்தும், நூலணியும் விதி, நேத்திரபலன் பஞ்சகோள் நின்ற தோஷம், பஞ்சகபலன், பக்கநோக்கு நாள், புதசாரம், பூமியைச் சோதித்து வீடுகட்டும் நிதானம், பூதபலன், பூமிசல்லியம், பெண் மரம் பேழை வைக்க பொருத்தங்கள், மனைக்கேகும்போது சகுனம் பார்க்குதல், மனையில் நிற்கும்போது சகுனம் பார்க்குதல், மனை உயர்வு தாழ்வுலக்ஷணம், மண்சுவை, மனைப்பொருத்தம், மனைமுகூர்த்தஞ் செய்ய மாதம், மண்வெட்டி சகுனம் மனை தோஷம், மனைக்கோல ஆகாதநாள், மனை முகூர்த்தம் மனை களில் இராஜயோகம், மனைமூகூர்த்த காலத்தில் குழியில் நீர்விட வேண்டியது, மனைமுகூர்த்தஞ் செய்யுமிடத்து சூன்னியம், மரம், மரங்கள்வெட்ட திதி, மரங்கள் வெட்டும் விதி, மனைப் பொருத்தம் பார்க்க, மனையகலம் வைக்க வேண்டிய அடிகள், மாடுமுதலானது கொள்ளல் அல்லது கொடுத்தல், முகூர்த்தஞ் செய்யுமிடம், மூலைக்குத்தாகாது, மேற்குப் பலாபலன், வயது பொருத்தம், வயது பலன், வம்சபலன், வாயுமூலை பலாபலன், வாஸ்து புருஷன் நித்திரை விடுதல், வாரபலன், விசால லக்ஷணம், விக்கிரகஞ் செய்ய லட்சணம், வீடுகட்டுகிற நிலம், வீட்டின் சுவர் அளவுவிதி, வீடுகட்ட மண், வீட்டின் சாலை, வேறு கிரகப்பிர வேசம், யோகினி அறிவது, யோகினிப் பொருத்தம், யோனிப் பலனறிவது, யோகபல னறிவது இப்படியாக இந்நூலில் முக்கிய மாகிய பல அம்சங்களை விளக்கி யுள்ளேன். ஆதலால், இந்நூல் பலருக்கும் மிக்க உதவியா யிருக்கு மென்பது எனது கருத்து.

நேயர்களே! இந்தக் கிரந்தத்தில் ஏதாகிலும் பிழைகளிருந் தால் அதை அன்னம் எப்படி ஜலத்தைப் போக்கிப் பாலையுண்ணு கிறதோ! அதுபோலாக இதில் இருக்கப்பட்ட நற்குறிப்புகளை யெடுத்துக்கொண்டு எம்மை ஆதரிப்பீரென உங்கள் ஆதரவை கோருகின்றேன்.

இப்படிக்கு,

வீராசாமி முதலியார்,

விஷய அகராதி

விஷயம்.	பக்கம்.

விஷயம்.	பக்கம்.

முற்றிற்று.

உ

பரமபதி துணை

விஸ்வகர்மாவாகிய மயனேன்பவர்

இயற்றிய

சர்வார்த்த சிற்பசிந்தாமணி

கடவுள் வணக்கம்

விருத்தம்

வேதநான்மறைகளாகி விளங்குமும்மூர்த்தியாகிப்
பூதலந்தனைப்படைத்த புண்ணியன்றுளைப்போற்றி
தீதிலாமயனுர்சொன்ன சிற்பசாஸ்திரமாநூலை
நீதியாய்த்தமிழினாலே நிலைபடவுரைக்கலுற்றேன்.

சிவசுப்பிரமணியர் துதி

கட்டளைக் கலித்துறை

பூமா தவிமண வாளனும் வேதனும் பொன்னுலகந்
தாமா ளுமிந்திர ரண்டர் குழாங்களுந் தாழ்ந்திறைஞ்சுங்
காமாப் பொருற்றடமு ரூழ்தணி காசலக் கந்தபிரான்
றாமாத் திருவடி யென்றுமிந் நூற்குத் துணைசெயுமே.

பரமசிவ வணக்கம்

அறுசீர்க் கழிநெடில் விருத்தம்

பங்கயன் மாலு மீரேழ் புவனமுந் தேடிக் காணுத்
துங்கவெண் குணமு ளானற் றெல்லுல கினைத்தி னுள்ளுந்
தங்கியெள் ளெண்ணெய் போலத் தழைத்து பூரணம தாகி
யங்கிங்கெ னுமலெங்கு மாம்பொரு ளகத்தி லேற் பாம்.

பராசத்தி வணக்கம்

ஷை வேறு சந்தம்

பெண்மையெனப் பெயர்படைத்துப் பேர்பதிநா லுலகு
தனைப் பெற்றதில்வாழ், நுண்மைமக காதிமுதனூழில்வரைப்

பலவுயிரு ளொசிதலின்றித், திண்மையுடன் சஞ்சரித்துச் சீர போக முந்துய்க்கச் செறிந்தே யூட்டும், வண்மை சிதா காச வெளி மருவுபரா சத்தியையாம் வணங்குவோமே.

திருமால் வணக்கம்

அகிலவுல கங்கட்கு மாதார மாயமிழ்த வளகமாகி, நிகில வுயிர் களையாயு நியதியாய்காத்தருளு நீலவண்ணன், றுகிரிதழ் வாய் மலர்களைத் தூயவுரங்கொண்டு ததிதுஞ்சுதற்செய், திகிரி காச் சீடதான்றன்றிருவடியை யெந்நாளுஞ் சிந்தைசெய்வாம்.

திருமகள் வணக்கம்

கலி விருத்தம்

பொற்பு சிலம்புக் கில்லினும் பொய்யிலா
கற்பு வாய்ந்தநற் காரிகை பாலினுந்
தற்ப ரனருட் சாரும்பு மானிட
நற்கு ணத்தோடு நாடும்பொ னேத்துவாம்.

கலைமகள் வணக்கம்

எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

ஆதிமொழி லாரணத்தின் றனையையாகி யறிவுடையோர்க்கரித்தாமம் பகமுமாகித் தீதகற்பாவலர்களகத் தேர்த்தியாகித் தெள்ளியமும் மூன்றுவியா காரணமாகிக் கோதகல்வை கரிமுதன் மூன்றுணலாகிக் குலவுகின்ற வேழ்சுரமச்சுவையுமாகிக் காதலுடனே மலரோன் முகம்வாழெந்தாய்க் கலைமகளற் கஞ்சத்தாட் கருத்திலேற்பாம்.

அவை யடக்கம்

வாழைப்பழமும் நெய்யும் பாலும் கற்கண்டும் சர்க்கரையும் கலந்தஅசனத்தில் கற்கிடந்தால்,அந்தக்கற்களைமாத்திரம் நீக்கி இன்பமாகக் கொள்ளுதல் போல், புல்லறிவாளனாகிய யான்சொல்லு மிந்நூலிற்பிழைபுரினும், மேலோர் அக்குற்றங்களைக் களைந்து சிரேஷ்டமாகக்கொள்வது பெரியோர் கடமை.

சிற்பர் இலக்கணம்

யக்ஞோபவீதம் பஞ்சகச்சை உத்தரீயம் கர்ணகுண்டலம் பவித்திரம் கந்தாக்ஷதை ஜபமாலிகை உருத்திராக்ஷம் இவை முதலியனவைகளோடு தெய்வபூசையும் நித்திய நைமித்

திய கருமங்களையும் உடையவனாகியும், பொறுமையும் அடக்கமும் நல்லமனமும் சற்குணமும் பொருந்தியிருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட சிற்பாசாரியன்றி வேறு ஜாதியர்கள் தேவாலயம் நகரம் கிராமம் கிரகம் தடாகம் கூபம் மாடமாளிகை முதலியவைகளை செய்தால் அரசருக்கும் கர்த்தாவுக்கும் தோஷமுண்டாவதோடு, மனசஞ்சலத்தையும் விளைவித்துக்கொண்டே யிருக்கும்.

இதுவுமது

வேதங்களின் சாரமும் நானாவித மந்திர தந்திரங்களும், முத்திரை லட்சணங்களும்; நல்ல வாக்கும் வர்ணாசிர தர்மம் ஆசார கிரமங்களும், சுகுண சுகஞான விவேகங்களும், ஜல லக்ஷணங்களும் பொருந்தியவனாகியும், குல சிரேஷ்டனாகியும், மரம் செங்கல் கல் சுதை நவலோகம் மண் செடி சக்கரை தந்த கிரியையும் எந்திரவிதியும் சித்திரவிதானமும் தெரிந்துக்கொள்பவன் சிற்பன்.

மனைக்கேகும்போது சகுனம்

மனைக்கோல வேண்டுமென்று யாதாமொருவர் வந்து அழைக்க அவரோடு சிற்பாசாரி காமரூபியாகிய ஸ்திரீகள் நிறைகுடம் வண்ணான் தயிர்பால் அன்னம் மதுக்குடம் அரசன் வேசி கரும்பு இரட்டைப் பிராமணர்கள் எதிற்படினும், காக்கை நரி கிளி வேங்கை முயல் கோழி கொக்கு மயில் ஓந்தி பசு நாரை செம்போத்து இவைகள் வலமாகினும், கருடன் வானரம் மூஞ்சூரு பன்றி கீரிப்பிள்ளை எலி கலைமான் கூகை வலியன் ஆந்தை காடி நாய் உடும்பு இவைகள் இடமாகினும் நன்று. விரித்தலைவர் மொட்டத்தலையர் செம்பட்ட மயிர் உடையவர் நொண்டி ஒற்றைக்கண்ணன் குருடன் அமங்கலை தடிகம்புடையவர் கவலையுடையோர் தபசி சன்னியாசி ஒத்தைப்பிராமணன் கன்னியாஸ்திரீ மூக்கில்லாதவன் வெறுங்குடம் எண்ணெய்க்குடம் செக்கான் நாவிதன் குஷ்ரவியாதி பிடித்தோன் விறகுகட்டு இவைகள் எதிர்படில் மிகுந்த துன்பமுண்டாம்.

மனையில் நிற்கும்போது சகுனம்

சிற்பியும் அம் மனைக்கு எஜமானும் அம்மனையில் சென்று நிற்குங்காலை கௌளிமுன்பு வலமாகச் சொல்லில் அழ

கியது பின்பு இடமாகச்சொல்லில், அம்மனைக்குறியவன் அரசர்களுக்கும் பிரியனுய்ப் புத்திரகளத்திரத்துடன் சுகித்து வாழ்வார்.

வெள்ளைப்புருவும் வெள்ளைப் பசுவும் வெள்ளை ரிஷபமும் தங்கள் மனையில் நின்றபோது காணில் உத்தமம்.

மேற்சொல்லிய இருவரும் மனையிற் சென்று நின்றபோது எறும்புகள் ஒழுங்குவிட்டுப் பலவாராய்ச் சிதரினும், செல்லுகள் பரவியிருக்கினும், வண்டுகள் பூமியைத் துளைக்கினும், ஒணுன் யெதிர்படினும் மனைகோல லாகாது.

மேற்சொல்லிய யிருவரும் மனையில் நிற்கும்போது பாரண்டை வலத்திற்பாடி வலத்திலிருந்து இடத்திற் போந்து வழியுமாகில், மனைக்கு எசமானுக்குத் துன்பங்கள் நீங்கி நன்மை யுண்டாகும்.

குடியன் வலையன் சுடுகாட்டாண்டி மூடவன் செக்கான் மூக்கரையன் கூனன் குருடன் இவர்களை எதிற்காணில் மனைகோல நசிந்துபோம்.

மதுக்குடம் மாமிசம் பால் நெய் தண்ணீர் நல்லபுடவை மங்கிலியஸ்திரீ நிறைகுடம் யானை தேர் ஒற்றையாள் புரவி இவைகள் எதிர்க்காணில் உத்தமம்.

மனை உயர்வுதாழ்வு இலட்சணம்

சூரியனென்பது கிழக்கு, சந்திரனென்பது வடக்கு, இவ்விரண்டு திக்குந் தாழ்ந்து தெற்கும் மேற்கும் உயர்ந்திருக்கும் பூமி சுகத்தைக் கொடுக்கும்.

நான்கு வருணத்தார் கிரகதிசை

பிராமணருக்கு தெற்கு, அரசர்க்கு மேற்கு, வணிகருக்கு வடக்கு, சூத்திரருக்கு கிழக்கு, குடியிருப்பாராகில் இலட்சுமீகரம் பொருந்தி வாழ்வார்கள் நடுபீரமஸ்தானமாகக் கொள்க.

மண்சுவை

இனிப்பாகியமண் பிரமகுலத்தவர்களுக்காகும்
துவர்ப்பாகியமண் க்ஷத்திரியகுலத்தவர்களுக்காகும்
புளிப்பாகியமண் வைசியகுலத்தவர்களுக்காகும்
கசப்பாகியமண் சூத்திரகுலத்தவர்களுக்காகும்.

நால்வகை வருணத்தார் வாசஞ்செய்ய மனைலட்சணம்

தென்சார்பாய் வடக்குப் பார்த்த வாசல் மனை மறையோர்க்காம். மேல்சார்பாய் கிழக்குப் பார்த்த வாசல் மனை அரசர்களுக்காம். வடசார்பாய் கிழக்குப் பார்த்த வாசல் மனை வைசியர்க்காம். கீழ்சார்பாய் மேற்குப் பார்த்த வாசல் மனை சூத்திருக்காம்.

தானும் தன்கிளை முதலானவர்களும் வாசஞ்செய்யு மிலக்கணம்

தன்னிற் பெரியவர்களுக்கும், குருக்களுக்கும் தாய் தந்தைகட்குந் தன் கிளைஞருக்கும் மூத்தவருக்கும் தெற்கு மேற்கு தானிருக்கலாகாது. அவர்களைத் தெற்கு மேற்கு வைக்க நன்று.

இருந்த மனைக்குத் தெற்கே குப்பை கொட்டவும், தென் மேற்கு மூலையில் வைக்கோர் போர்கட்டவும், மேற்கில் எருமைத்தொழ மியற்றவும், வடமேற்கில் தானியதொம்மை யமைக்கவும், வடக்கில் பசுதொழுவம் கட்டவும் உத்தமம்.

வடகிழக்கில் அடுக்களை வீடுகட்டவும், கிழக்கில் மாட்டுக்கொட்டில் வைக்கவும், தென்கிழக்கில் பொக்கிஷ வீடியற்றவும் உத்தமம்.

கிழக்கு திக்கில் குளிக்கு மிடமும், அக்கினிமூலையில் சமையல்பண்ணு மிடமும், தெற்கில் சயனஸ்தலமும், நிருதி மூலையில் சகல சாஸ்திர முதலானதும் வைக்குமிடமும், மேற்கில் போசனம் புசிக்கும் வீடும், வாயுமூலையில் பசுத் தொழுவமும், வடக்கில் தனதானிய வீடும், ஈசானிய மூலையில் பூசைவீடும் கட்ட ராஜயோக முண்டாகும்,

ஞாயிறு பரணியும், திங்கள் சித்திரையும், செவ்வாய் உத்திராடமும், புதன் அவிட்டமும், வியாழம் கேட்டையும், வெள்ளி பூராடமும், சனி ரேவதையும் கூடினல் ஆகாது. இந்த நாட்களில் விவாகஞ்செய்யில் கைம்பெண்ணும். மனைக் கோலில் பாழாம். வழிபோகில் மரணமாம். ருதுவானல் மலடியாம். பிள்ளை பிறக்கிற் சாவாம்.

.. ஜெனன நாளுக்கு 2-4-6-8-9 இந்நாள் நன்றும். 1-3-5-7 இந்த நாள்கள் பொருந்தாது. மற்றவை பொருந்து மென்க. இப்படி ஒன்பதொன்பதாம் 2-7 நாளையும் பிரித்துக்கொள்வது.

சந்திரனையும் சூரியனையும் பரிவேட மிட்டிருந்த நாளும், கொடிய வாரமும், மந்தாரம், மழைதூறல், கிரணந் தீண்டல், பொல்லாத நாள், நட்சத்திரங்கள் குரு சுக்கிரபாடு விஷ கடிகை அஷ்டமி உவா இருத்தை இவை யாகாவென்று நீக்கி, மற்ற நாட்களில் முகூர்த்தங் கொள்கவும்.

வெள்ளி யெதிரும் வலக்கண்ணும் மூடமும் ஆகாது; மனைகோலினும் குடிபுகினும் தீதாம். வெள்ளி யின்னும் இடக்கண்ணுமாகில் மிகவும் உத்தமம்.

யோகினி யறிவது

பூர்வபட்சம் பிரதமைமுதல் பிரதமை கிழக்கு துதியை வடக்கு திருதியை அக்கினி சதுர்த்திநிருதி பஞ்சமி தெற்கு சஷ்டி மேற்கு, சத்தமிவாயுவு அஷ்டமி ஈசான்னியம் அக்கினிமூலை நவமி ஆகாசம் தசமி பாதாளம் ஏகாதசி கிழக்கு துவாதசி வடக்கு திரையோதசி அக்கினி சதுர்த்தி நிருதி பௌர்ணமி தெற்கு பின்னும் அமரபட்ச பிரதமை மேற்கு துவிதியை வாயுவு திருதியை ஈசானியம் சதுர்த்தி ஆகாசம் பஞ்சமி பாதாளம் பின்னும் சஷ்டி கிழக்கு சத்தமி வடக்கு, அஷ்டமி அக்கினி, நவமி நிருதி, தசமி தெற்கு, ஏகாதசி மேற்கு, துவாதசி வாயுவு, திரையோதசி ஈசானியம், சதுர்த்தி ஆகாசம், அமாவாசை பாதாளம் நிற்கும். இந்த யோகினி முன்னும் இடமும் யாத்திரை முதலான எவற்றிற்கும் தீயது. பின்னும் வலமும் நல்லது.

சுபகாரியங்கள் செய்யவேண்டியதற்கு மூன்றுவிதமான சில நட்சத்திரங்க ளறிய

1-வது, உரோகணி ஆதிரை பூசம் உத்திரம் ஓணம் அவிட்டம் சதையம் இவை 7-ம் ஊர்த்துவமுகம். இதில் ஸ்தம்பப்பிரதிஷ்டை பட்டாபிஷேகம் உத்தியோகத்திற் பிரவேசித்தல் இராஜ தெரிசனம் வியாபாரம் வீடு ஆபரணம் மெத்தைமேல் வாசக்கால் தூண்துவசம் தோப்பு சாலை மரம் முதலியவை வைக்கவும். மற்றுமிவை முதலாகிய சுபங்கள் செய்யவும். அபிவிருத்தியாய் வருமென்றறிய வேண்டியது.

2-வது, அசுவனி மிருகசிரம் புனர்பூசம் அஸ்தம் சித்திரை சுவாதி அனுஷம் கேட்டை ரேவதி இவை 9-ம் திரிமுகம். இவைகளில் சுவர்வைக்கப் பயிரிட நிலம்வாங்க பசு எருது எருமை குதிரை யானை வண்டி முதலானவை வாங்கவும்

பொன்னேர் கட்டியுழவும் விரை விதைக்கவும் பசு முதலான துக்கு கொட்டாரங்கட்டவும் யாத்திரை போகவும் ஏரி வாய்க்கால் வெட்டவும் நிலத்துக்கு வரப்பு கட்டவும் இவை முதலாகிய சுபகாரியங்கள் செய்ய உத்தமம்.

வீட்டினுள் ஏற்பட்டிருக்கின்ற அஷ்டபாகங்களின் உபயோக பலன்கள் அறிய

ஈசானியபாக பலாபலன்

வீட்டினுள் ஈசானியபாகமானது பூசைசெய்யவும், நெல் முதலிய தானியங்கள் வைப்பதற்கும், வீட்டு எஜமானன் எஜமானி சயனஞ்செய்யவும் உத்தமம்.

கிழக்கு பாகமானது மேற்குறித்த செய்கைகள் யாவும் உதவும். ஆனால் பொருள்மாத்திரம் வைக்கக்கூடாதென்பதாம்.

ஆக்கிநேயபாக பலாபலன்

வீட்டின் ஆக்கினேயபாகமானது சமயல் செய்யவும், வீடு தேடிவரப்பட்ட சுற்றத்தார் இருப்பதற்கும் உதவுமேயன்றி வேறே செய்கைகளுக்கும் உதவாது. அன்றியும் அவ்விடத்தில் ஸ்திரீ புருஷர்கள் கலந்துண்டாகும் சிசுக்கள் திருடு முதலிய துர்ச்செய்கைகளோடிருப்பதுமன்றி, அவ்வில்லாளருக்குப் பொருட்சேதமும் உண்டாக்கிக்கொண்டு வருமெனவறிக.

தென்பாக பலாபலன்

வீட்டின் தெற்குபாகமானது பூசை செய்வதற்கும் போஜனம் செய்வதற்கும் உதவுமேயன்றி வேறு செய்கைகளுக்கு உதவாது. அன்றியும் அவ்விடத்தில் ஸ்திரீ புருஷாள் கலந்து கருதரித்து உற்பவிக்கும் சிசுக்கள் முடம், குருடு, செவிடு முதலிய அங்கஹீனங்களோடு பிறந்து வமிச விருத்திக்கு மாறுமலிருக்குமென்பதாம்.

நிருதிமூலையின் பலாபலன்

வீட்டின் நிருதிமூலையானது இல்லறத்துக்குரிய பாத்திர சாமான்கள் உயுத்த கருவிகள் இவைகள் வைப்பதற்கும் பிள்ளைகள் வித்தையை அப்பியாசிப்பதற்கும் உதவுமேயன்றி வேறெச்செய்கைகளுக்கும் உதவாது. அன்றியும்

அங்கு சதிபுருஷர் கலப்பினல் உற்பவிக்கும் சிசுக்கள் ஆணுயின் ஜாரனுயும் பெண்ணுயின் வேசியுமாமென வறிக.

மேற்கு பலாபலன்

வீட்டின் மேற்குபாகமானது சதிபுருஷர்கள் சயனிப்ப தற்கு உத்தமம். அன்றியும் அவ்விடத்தில் கருத்தரித்து உற்பவிக்கும் சிசுக்கள் ஆணுயின் மெஞ்ஞானியா யிருந்து அவன் பின் இருபத்தோர் தலைமுறைவரையில் உண்டா கின்றவர்களையும் பாவம் அணுகாமல் சத்திக்கு ஆளாக்க வல்லவாவான். பெண்ணுயின் மகா பதிவிரதா சிரோன்மணியா யிருப்பாள். ஆனல் அச் சிசுக்களால் விசேஷ தனம் சேரா வாம் யெனவறிக.

வாயுமூலை பலாபலன்

வீட்டின் வாயுவு மூலையானது பூசை செய்யவும், ஸ்திரீ கள் பிரசவிப்பதற்கும், தேவஸ்தாபனம் செய்வதற்கும், நெற் களஞ்சியம் வைப்பதற்கும் உத்தமம். இலாபமுண்டாம்; ஆனல் ஸ்திரீ புருஷ சயனத்திற்கு உதவாது. அங்கு கரு தரித்து உற்பவிக்கும் சிசுக்கள் மிகு தரித்திரத்தை யடையு மென்பதாம்.

வடக்காகிய குபேரபாக பலாபலன்

வீட்டின் வடபாகமாகிய தழைப்போங்கிய குபேர திசையில் திரவியம் வைப்பாராயின் நாளுக்குநாள் விருத்தி யடையும். மேலும் அவ்விடம் சதி புருஷர்கள் சயனத்திற்கு மிகச் சிரேஷ்டம். அங்கு கருதரித்து உற்பவிக்கும் சிசுக்கள் இருபாலில் எப்பாலராயினும் குபேர சம்பத்துடன் தீர்க்கா யுளோ டிருக்கும். ஆனல் இஃது நீங்கலாக மேற்கூறிய செய்கைகளுக்கு உத்தமமென வறிக.

நல்லநாள் அறிய

அசுபதி மகம் மூலம் இதுகள் முதல் ஒவ்வொன்றி னுடைய ஆரம்பம் முதல் நான்கு நட்சத்திரம் வரையான பனிரண்டு நட்சத்திரத்தில் கார்த்திகை, யுத்திரம், உத்தி ராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி இவ்வாறுந் தள்ளி மற்றயநாள் கிரகாரம்பத்திற்கு விசேஷ நாட்களாகும். மற்ற நாட்களாகில் கிரகங்கட்ட வாரம்பம்செய்கில் முடியாது; கட்டினல் எஜமான் முதலிய குடும்பத்தலைவர்கள் மரண மாவார்கள். கட்டிடங் கட்டும்பொழுதே இடிந்துவிழுந்து உயிர்ச்சேதமாகும்.

மனைப்பொருத்தம் அறிய

சிற்ப நூலிற் சிறந்த முன்னோர்கள் மனைக்கு ஏற்படுத்தியிருக்கின்ற பொருத்தங்களாவன:—

1-வது	கெர்ப்பம்	7-வது	அங்கிசம்
2-வது	ஆதாயம்	8-வது	ஜாதி
3-வது	சிலவு	9-வது	திதி
4-வது	யோனி	10-வது	இராசி
5-வது	நட்சத்திரம்	11-வது	வயது
6-வது	வாரம்	ஆக பொருத்தங்கள் 11.	

1-வது கெர்ப்ப பொருத்தம்

மனையின் அகல நிகளத்தை (இங்கிலீஷ்) 34-அங்குலத்திற்குச் சரியான சிதம்பரபதம் என்கின்ற கோலால் அளந்து குழியாக்கப்படுவதே ஆயம். அல்லது துருவமாம். அப்படியாகின்ற துருவபதமாகிய குழியை எட்டிற்கழிக்க மிகுதி சேடம் கெர்ப்ப பொருத்த மெனப்படும். ஒருக்கால் சேடமீறாமல் சரியாய்ப்போனால் வகுக்கும் எட்டையே சேடமாக வைத்துக்கொள்ளவேண்டு மென்பதாம்.

சேடம் ஒன்றாகில்	கெருட கெற்பம்
இரண்டாயின்	புறாக் கெற்பம்
மூன்றாயின்	சிம்ம கெற்பம்
நான்காயின்	நாய் கெற்பம்
ஐந்தாயின்	பசு கெற்பம்
ஆறாயின்	காக்கை கெற்பம்
ஏழாயின்	யானை கெற்பம்
எட்டாயின்	கழுதை கெற்பம்

பலன் விபரம்

ஒன்றாவதான	கெருட கெற்பம்	உத்தமம்
இரண்டு	புறா கெற்பம்	மத்திமம்
மூன்று	சிம்ம கெற்பம்	உத்தமம்
நான்கு	நாய் கெற்பம்	தீது
ஐந்து	பசு கெற்பம்	சுபம்

ஆறு	காக்கைகெற்பம்	நீச்சம்
ஏழு	யானைகெற்பம்	உத்தமம்
எட்டு	கழுதைகெற்பம்	அதமம்

என்பதாமென மேலோர் கூறினர்.

2-வது ஆதாயப் பொருத்தம்

ஆகமொத்தத்தை 8-ல் பெருக்கி 12-ற் கழிக்க மிச்சம் நிற்பது ஆதாயம்.

அச்சேடங்களுள்

1-2 மிருந்தால்	ஏகபோகமாய்நடக்கும்
3-4 மிருந்தால்	கீர்த்தியுண்டாம்
5-6 மிருந்தால்	தனதானியமுண்டாம்
7-8 மிருந்தால்	மங்களகாமுண்டாகும்
9 மிருந்தால்	போகபாக்கியமுண்டாம்
10 மிருந்தால்	காரியசித்தியுண்டாம்
11 மிருந்தால்	ஈஸ்வரகடாட்சமுண்டாகும்
12 மிருந்தால்	சகலநன்மையுண்டாம்

என்பதாம்.

3-வது செலவு பொருத்தமறிய

ஆகமொத்தத்தை ஒன்பதிற்பெருக்கி பத்திற் பங்கிட மிகுசேடம் செலவு என்னப்படும்.

அச்சேடங்களுள்

ஒன்றுக்கு	அவ்வில்லம்க்ஷீணிக்கும்
இரண்டுக்கு	அம்மனை தீயினுல்சேதப்படும்
மூன்றுக்கு	அக்குடும்பம்க்ஷேமமாகயிருக்கும்
நான்குக்கு	புத்திரவிருத்தியுண்டாம்
ஐந்துக்கு	அதிகவிரையமுண்டாம்
ஆறுக்கு	ஆரோக்கியமுண்டாம்
ஏழுக்கு	அதிகதரித்திரமுண்டாம்
எட்டுக்கு	இலட்சுமிவாசமாயிருப்பாள்
ஒன்பதுக்கு	புத்திரநாசம்
பத்துக்கு	உத்தமமாயிருக்குமென்பதாம்.

4-வது யோனிப் பொருத்தமறிய

ஆகமொத்தத்தை மூன்றிற் பெருக்கி எட்டிற் பங்கிட நின்றசேடம் யோனிப்பொருத்தம் என்னப்படும்.

அச்சேடங்களுள்

ஒன்றாயின்	கெருடன்	நிறைந்தசெல்வம் உண்டாகும்
இரண்டாயின்	பூனை	கலகமுண்டாகும்
மூன்றாயின்	சிங்கம்	ஜயம்பொருந்திநடக்கும்
நான்காயின்	நாய்	என்னாளும்பிணியாயிருக்கும்
ஐந்தாயின்	சர்ப்பம்	மேன்மையுஞ்செல்வமுமூண்டா[ம்
ஆறாயின்	எலி	தனட்சயமாகும்
ஏழாயின்	யானை	அதிகலாபம் நலம்
எட்டாயின்	முயல்	செல்வம்நீங்குமென்பதாம்

5-வது நட்சத்திர பொருத்தமறிய

முன் ஆகமொத்தத்தை எட்டிற்பெருக்கி இருபத்தேழிற் கழிக்க மிகுசேடம் நட்சத்திரம் என்னப்படும்.

ஒன்றாயின்	அசுவனி	உத்தமம்
இரண்டு	பரணி	அதமம்
மூன்று	கிருத்திகை	அதமம்
நான்கு	உரோகணி	உத்தமம்
ஐந்து	மிருகசீரிடம்	அதமம்
ஆறு	திருவாதிரை	உத்தமம்
ஏழு	புனர்பூசம்	உத்தமம்
எட்டு	பூசம்	அதமம்
ஒன்பது	ஆயிலியம்	அதமம்
பத்து	மகம்	மத்திபம்
பதினொன்று	பூரம்	மத்திபம்
பனிரண்டு	உத்திரம்	உத்தமம்
பதின்மூன்று	அஸ்தம்	அதமம்
பதிநான்கு	சித்திரை	மத்திபம்
பதினைந்து	சுவாதி	உத்தமம்
பதினாறு	விசாகம்	அதமம்
பதினேழு	அனுடம்	உத்தமம்

பதினெட்டு	கேட்டை	மத்திபம்
பதினென்பது	மூலம்	மத்திபம்
இருபது	பூராடம்	அதமம்
இருபத்தொன்று	உத்திராடம்	உத்தமம்
இருபத்திரண்டு	திருவோணம்	மத்திபம்
இருபத்திமூன்று	அவிட்டம்	அதமம்
இருபத்திநான்கு	சதையம்	உத்தமம்
இருபத்தைந்து	பூரட்டாதி	அதமம்
இருபத்தாறு	உத்திரட்டாதி	உத்தமம்
இருபத்தேழு	இரேவதி	மத்திபம்

ஆக இவ்விருபத்தேழு நட்சத்திரங்களுக்குள் பத்து உத்தமமும், ஏழுமத்திபமும், பத்து அதமுமென்பதாம்.

6-வது வாரப் பொருத்தம்

முன் ஆகத்தை ஒன்பதிற்பெருக்கி ஏழுக்கீந்திட மிகுந்த சேடம் வாரம் என்னப்படும்.

அச்சேடங்களுள்

ஒன்றுவரில்	ஆதிவாரம்	உதவாது
இரண்டுவரில்	சோமவாரம்	சுகங்கொடுக்கும்
மூன்றுவரில்	அங்காரகவாரம்	தீமையுண்டாம்
நான்குவரில்	புதவாரம்	அம்மனைலட்சுமி விசாலமாயிருக்கும்
ஐந்துவரில்	குருவாரம்	புத்திரவிருத்தியுண்டாம்
ஆறுவரில்	சுக்கிரவாரம்	அதிகநலம்உண்டாகும்
ஏழுவரில்	சனிவாரம்	கலகம்உண்டாகும்

7-வது அங்கிசப் பொருத்தம்

ஆகமொத்தத்தை நாலில்பெருக்கி ஒன்பதிற்கழிக்க மிகுசேடம் அங்கிசப்பொருத்தம் எனப்படும்.

அச்சேடங்களுள்

ஒன்று	தடகாஅங்கிசம்	அல்லலுண்டாம்
இரண்டு	சோமகானங்கிசம்	மிக்கபாக்கியபோகங்களுண்டாம்

மூன்று	சத்தி அங்கிசம்	சீலமுண்டாம்
நான்கு	புஷ்கா அங்கிசம்	தானியவிருத்தி
ஐந்து	குரு அங்கிசம்	இலாபமுண்டாம்
ஆறு	சுக்கிர அங்கிசம்	இராஜபோகமுண்டாம்
ஏழு	சனி அங்கிசம்	கலகமும் ஜனப்பகையுமுண்டாம்
எட்டு	இராகு அங்கிசம்	மத்திபபலனுமிருக்கும்
ஒன்பது	கேது அங்கிசம்	சகல நன்மையுமுண்டாம்

8-வது ஜாதிப் பொருத்தம்

ஆகமொத்தத்தை ஒன்பதிற்பெருக்கி நாலிற்கழிக்க மிகு சேடம் ஜாதி என்னப்படும்.

அச்சேடங்களுள்.

ஒன்று	பிரமஜாதி	நல்லபலனுண்டாம்
இரண்டு	க்ஷத்திரிய ஜாதி	நல்லபலன்
மூன்று	வைசிய ஜாதி	உத்தமம்
நான்கு	சூத்திரஜாதி	பலனில்லை துயரமுண்டாம்

9-வது திதிப் பொருத்தம்

மனையின் ஆகமொத்தத்தை ஒன்பதிற் பெருக்கி முப்பதிற் பங்கிட முப்பதுவரையில் நின்றசேடம் திதி என்னப்படும். அச்சேடங்களுக்குள் ஒன்று முதல்முறையே பதினைந்துவரையில் வருவதை சுக்கிலபட்சத் திதி யெனவும் பதினாறுமுதல் முப்பதுவரையில் வருவதைக் கிருஷ்ணபட்சத் திதிகளுக்குப் பலன் வேறே கூறுதிருந்தாலும் பூர்வபட்சத்துப் பிரதமை முதல் பூரணைவரையில் முறையே கூறியிருக்கின்றபலன்களே கிருஷ்ணபட்சம் பிரதமையாகிய 16-வது சங்கியை முதலாக வைத்துக்கொண்டு அமாவாசை வரையிலும் அப்பலன்களே முறையா யுண்டாமென்றுங் கொள்ள வேண்டும்.

சுக்கிலபட்சத்திதி சங்கியை		கிருஷ்ணபட்சத்திதி சங்கியை.	
1	பிரதமை	16	பிரதமை நலம்
2	விதியை	17	விதியை நலம்
3	திரிதியை	18	திரிதியை ஜயம்
4	சதுர்த்தி	19	சதுர்த்தி அபஜயம்

5	பஞ்சமி	20	பஞ்சமி புத்திரபாக்கியம்
6	ஷஷ்டி	21	ஷஷ்டி மேற்கண்டபலன்
7	சப்தமி	22	சப்தமி நன்மை
8	அஷ்டமி	23	அஷ்டமி பிணிகளுண்டாம்
9	நவமி	24	நவமி அம்மனைக்ஷீணித்துபோ [கும்
10	தசமி	25	தசமி மங்களகரமாயிருக்கும்
11	ஏகாதசி	26	ஏகாதசி தீமையுண்டாம்
12	துவாதசி	27	துவாதசி அன்னவஸ்திரம் குறைவில்லாதிருக்கும்
13	திரையோதசி	28	திரையோதசி செல்வந்தழை [க்கும்
14	சதுர்த்தசி	29	சதுர்த்தசி அம்மனைபாழடை [யும்
15	பூரணை	30	அமாவாசை பூரணபலனுகும்

10-வது இராசிப் பொருத்தம்

ஆகமொத்தத்தை நாலிற் பெருக்கி பன்னிரண்டிற் கழிக்க மிகுசேடம் இராசி என்னப்படும்.

இப்பன்னிரண்டு ராசிகளுள் பதினென்ருவதான கும்ப விராசி ஒன்றுதான் தீமை மற்ற பதினொரு ராசியும் உத்தம மென் றெண்ணப்படும் என்பதாம்.

11-வது வயது பொருத்தம்

ஆகமொத்தத்தை இருபத்தேழிற் பெருக்கி நூறிற் கழிக்க மிகுந்தசேடம் ஆயுளெனப்படும்.

அவைகளுள் நாற்பத்தைந்துக்குமேல் நூறுக்குள் எவ் வளவு உயருகிறதோ அவ்வளவும் விசேஷம்.

முழக்கோல் இலக்ஷணமறிய

பரம அணு எட்டுகொண்டது சூரியனுடைய ரதத்து கள் ஷை ரதத்துகள் எட்டுகொண்டது பஞ்சின்துகள், ஷை பஞ்சின்துகள் எட்டுகொண்டது பாலன் மயிர்நுனி, ஷை மயிர் நுனி எட்டுகொண்டது ஒரு ஈர், ஷை ஈர் எட்டுகொண் டது ஒரு பேன், ஷை பேன் எட்டுகொண்டது ஒரு யவை, ஷை யவை எட்டுகொண்டது ஒருமானுங்குலம் ஷை மானுங் குலம் ஆறுகொண்டது ஒரு தாலம், தாலம் இரண்டுகொண் டது ஒருவிதஸ்த்தி, விதஸ்தி இரண்டுகொண்டது ஒரு அஸ்

தம், அஸ்தம் நாலுகொண்டது ஒரு தண்டம், தண்டம் நாலு கொண்டது ஒரு பாகு, பாகு நாலுகொண்டது ஒரு குரோசம், குரோசம் நாலுகொண்டது ஒரு சத்துவாரி, இவற்றுள் அஸ்தம் எண்வகையாகும். அவையாவன, மானங்குலம் இருபத்துநாலு கொண்டது ஒரு கிஷ்க்கு, கிஷ்க்கு இருபத்தைந்துகொண்டது பிரஜாபத்தியம், பிரஜாபத்தியம் இருபத்தாறுகொண்டது ஒரு தனுர்முஷ்டி, தனுர்முஷ்டி இருபத்தேழுகொண்டது ஒரு தனுக்கிரகம், தனுக்கிரகம் இருபத்தெட்டுகொண்டது ஒரு பிராப்பியம், பிராப்பியம் இருபத்தொன்பதுகொண்டது ஒரு வைதேகம், வைதேகம் முப்பது கொண்டது ஒருவைப்புல்யம் முப்பத்தொன்றுகொண்டது பிரகீர்ணமாம்.

இதுவுமது

தேவர்களுக்கும், பிராமணர்களுக்கும், பிரகீர்ணயமும், அரசர்களுக்கு, தனுக்கிரகமும், வைசியர்களுக்கு, வைப்புல்யமும், தனுர்முஷ்டியும், சூத்திரர்களுக்கு, வைதேகமும் பிரஜாபத்தியமும் பிராப்பியமும், கிஷ்க்குவும் அளந்துகொள்வது அல்லாமலும் ஷை கிஷ்க்கு அஸ்தத்தால் தேவர் முதலிய யாவருக்கும் அளந்துகொள்வது பொதுவாகும்.

வேறுவித முழக்கோலளவு அறிய

முழக்கோலானது அணுவு 8-கொண்டது புன்னுனி, புன்னுனி 8-கொண்டது நுண்மணல், நுண்மணல் 8-கொண்டது எள்ளு, எள்ளு 8-கொண்டது நெல்லு, நெல்லு 8-கொண்டது துவரை, துவரை 8-கொண்டது விரல், விரல் 6-கொண்டது ¼-முழம் ¼-முழம் 4-கொண்டது ஒரு முழம்.

வேறு இதுவுமது

கிடகுவென்னும் இருபத்துநாலு விரல்கொண்டது வேளாளருக்கு முழமென்று சொல்லப்படும் பிரஜாபத்தியமென்னும் 25-விரல்கொண்டது வைசியருக்கு முழமென்று சொல்லப்படும். தனுமுட்டியென்னும் 26-விரல்கொண்டது பிராமணருக்கு முழமென்று சொல்லப்படும்.

வேறு இதுவுமது

துவரை 8-கொண்டது விரல், விரல் 6-கொண்டது சாண், சாண் 2-கொண்டது முழம் இதுபோற் பகுத்துக் கொள்ளவும்.

முழக்கோல்செய்பு மரமறிய

கமுகுமரம், மாமரம், பனைமரம், வேங்கைமரம், மூங்கில் மரம், புளியமரம், கருங்காலிமரம், தென்னைமரம், சந்தனமரம், தேக்குமரம், ஆச்சாமரம், சண்பகமரம், பலாசுமரம், தாமரைக்கொடி, இரும்பு இவை பதினன்கும் முழக்கோலுக்காகும்.

இதுவுமது

தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் இரும்பு மூங்கில் மரம் புளியமரம் இவைமூன்றுமாகும். அரசர்களுக்கு ஆச்சாமரமாகும். வைசியர்களுக்கு தேக்குமரமாகும் சூத்திரர்களுக்கு வேங்கைமரம் சிறந்ததாகும் இந்த ஆறும் நீங்க மற்ற எட்டும் பொதுவாக பலருக்குமாகும் இவைகளல்லாத வேறு முழக்கோலாகாது யவை அங்குலம் தாலம் விதஸ்தி அஸ்தம் தண்டம் பாகு குரோசம் சத்துவாரி இவை ஒன்பதானுலும் அளவு கொள்ளலாம் சத்துவாரியினுல் தேசங்களையும் தண்டத்தினுல் சம்வாகம் கெர்வடம் கிடகும்மடப்பம் கிராமம் நகரம் சிற்றூர் இவைகளையும் அஸ்தமென்னு முழத்தினுல் தேவாலயங்கள் கர்ப்பக்கிரஹங்கள் மண்டபங்கள் சபைகள் பரிவார ஆலயங்கள் சாலைகள் பிரகாரங்கள் கோபுரங்கள் இவைகளையும் தேவாலய முதலிய பிராமண கிரகங்களுக்கு சுவர் புறவாய லளவாகவும் மையத்தளவாகவும் உள்வாயலளவா யாகவுங் கொள்வது.

இதுவுமது

அரசர்களுக்கு மையத்தளவா யாகவும் உள்வாய ளலவா யாகவும் கொள்வது வைசியர்களுக்கு உள்வாயலளவாயாகவுங் கொள்வது சிறப்பாகும். பிராமணுதியாவருக்கும் சுவர்புற வாயளலவாயாகக் கொள்வது பொதுவாகும்.

இதுவுமது

இன்னும் மடம் சத்திரம் பசுத்தொழுவம் படிக்கரை தண்ணீர்ப்பந்தல் தடாகம் துறவு கிணறு இவைகளையும், மேற்கூறிய பிரமாணப்படி கொள்வது இன்னும் தண்டிகை சிங்காசனம் பீடம் வண்டி சப்ரமஞ்சம் இவைகள் மானுங்குலத்தால் கால்புறவாயலளவாலும் மையத்தளவாலும் உள்வாயளவாலும் உயரத் தளவாலும் சுற்றளவாலும் அளந்துக் கொள்ளவும் இன்னும் பலவித ஆயுதங்களையும் தேகலப்தாங் குலத்தால் அளந்துக்கொள்ளவும்.

இதுவுமது

மானுங்குலம் மாத்திராங்குலம் தேகலப்தாங்குலம் இவைகளால் சிவலிங்கமாதி தெய்வீகம் பொருந்திய விக்கிரகங்களையும் பாதாதிகேசம்வரையி லளந்துகொள்ளவும் பலிபீடத்தை தாங்குலத்தா லளந்து கொள்ளவும் ஆத்மார்த்த பிரகார்ச்சனை விம்பங்களை மாத்திராங் குலத்தளவா லளந்து கொள்ளவும் வாகனங்களை பின்காலாதி தலைவரையிலும் சர்ப்பத்தை வால்நுனியாதி தலைவரையிலும் பல பக்ஷிகளை காலாதி தலைவரையிலும் இந்தப்படி யளந்து கொள்ளவும் கூற்பகவிருஷம் தோரணம் கதலி கெர்ப்ப பாதம் கிரகபாதம் தனுவார பாதம் இவைகளை உயரத்தில் மானுங்குலத்தளவா லளந்துகொள்ளவும்.

இதுவுமது

கர்த்தா மத்திமவிரலின் சுத்தளவு மாத்திராங்குலம் விக்கிரக முதலிய உயரம் தேகலப்தாங்குலம் இவற்றுள் யவையாதி பாகஞ்செய்து குறைந்துவருமளவே மானுங்குலமாகும்.

வேறுமுழக்கோல் மரமறிய

மூங்கிலிற் செய்தகோல் பிராமணருக்காம் ஆச்சாவின் கோல் அரசர்க்காம் தேக்குவின்கோல் வணிகர்க்காம், வேங்கையின்கோல் வேளாளருக்காம்.

இதுவுமது

மட்டகோலுக்குரியவைபுளி, வேங்கை, தேக்கு, ஆச்சா இவைநான்கு மரமாம் இவற்றுள், புளிமாவின் கோல் மறையோர்க்காம் ஆச்சாவின் கோல் அரசர்க்காம் தேக்குவின் கோல் வணிகர்க்காம் வேங்கையின் கோல் வேளாளருக்காம் இரும்பினுற் செய்தகோல் தேவர்க்காம்.

இதுவுமது

மூலமட்டக்கோலளவு சொல்லுமிடத்து ஒருதலை பத்து விரல்நீளம் ஒருதலை எட்டுவிரல்நீளம் நடுமூலை பட்டு வளைந்து சதுரமாக்கி விரலளவு பார்த்து வரைந்துகொள்க.

சங்குஸ்தாபனமறிய

சங்குமரம், யானைகொம்பு, ஆலமரம், அத்திமரம், சந்தனமரம், தேக்குமரம், புளியமரம், கருங்காலிமரம், வன்னிமரம், வேங்கைமரம், இவற்றுள் ஒன்றினுல் உத்தமசங்கு

இருபத்திநான்கு மானங்குல நீளமும், மத்திமசங்கு பதினெட்டு மானங்குல நீளமும், அதமசங்கு பனிரண்டு மானங்குல நீளமுமாகும்.

உத்தமசங்கு அடியில் ஆறங்குல அகலமும், நுனியில் ஓரங்குல அகலமும் வைத்து ஒரு மட்டமாகவும் விருத்தமாகவும் கடைந்துகொள்ளவும் அந்த முறைப்படி மத்திம சங்கும் அதமசங்கும் வைத்துக்கொள்வது ஆகாது ஷி சங்குமரங்களில் கணுக்களுடையவைகளையும் புள்ளி விழுந்தவைகளையும் போரை முதலாகியவைகளையும் நெளிவு முதலாகியவைகளையும் வெடிப்பு முதலாகியவைகளையும் நீக்கி மேற்சொல்லிய குறிகளில்லாத மரங்களை வைத்துக்கொள்ளவும் இவற்றுள் தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் யானைக் கொம்பும் சந்தனமரமும் உத்தமம். அரசர்களுக்கு கருங்காலிமரமும், வன்னிமரமும் உத்தமம் வைசியர்களுக்கு வேங்கைமரமும் தேக்குமரமும் உத்தமம். சூத்திரர்களுக்கு புளியமரமும் அத்திமரமும் உத்தமமாகும் இவையல்லாத மரங்கள் உதவாது சங்குஸ்தாபனம் பண்ணவேண்டியவிடத்தில் நாலுமுழ நீளமும் நாலுமுழ அகலமும் நீர் மட்டத்துக்குச் சரியாய் பூமியைச் சதிரமாக மட்டஞ்செய்து நல்ல சுப முகூர்த்தகாலத்தில் சங்குவை ஜலத்தினு லலம்பி மஞ்சள் குங்குமம் சந்தனம் புஷ்பம் சுத்திகரித்து ஷி பூமியில் நிறுத்தி பூசைசெய்து சங்குமத்திமுதல் விதிப்படி மண்டலம் போட்டு ஷி வட்ட மண்டலத்தில் உயர்த்தியாகப் பார்க்கும்போது ஷி சங்குச்சாயை மேற்புறத்திலேயே விருத்த மண்டலத்தின் பருவத்தில் தொட்டவுடன் கால்முழம் ஒரு முழம் இரண்டுமுழம் ஒவ்வொரு பாகத்திலும் இருக்கும் போது மூன்றுமண்டலம் போடவும். அதில் புள்ளடி போட்டு நிழல் கிழக்கே சாய்ந்து நடுவிருத்த மண்டலத்தின் பருவத்தில் வந்தவுடன் முன்போல் புள்ளடிபோட்டு உத்தராயணம் தெக்ஷுணயனம் அறிந்து விலக்குவித்து அதே விலக்கும் மேல்புறத்து புள்ளடிக்கும் நூல் பிடித்துப் பார்த்துக் கழிக்க மேற்கே நிதானமாகும்.

வேறு - சங்குஸ்தாபனமறிய

சங்கு நீளம் பனிரண்டுவிரல் பருமனும் இது ஒன்று முக்கால் தலையிற் சுற்றும். இதில் மேனூசியில் நீளம் ஒரு விரல் கொள்வது, தேவருக்கும் மானிடருக்கும் சங்கு மரமாவது அரசு, ஆல், அத்தி, யானைக்கொம்பு, கருங்காலி, சந்தனமரம் இவையாம்.

இதுவுமது

சங்குவைக்கும்போது நிலத்தை மட்டஞ்செய்து ஒரு கோல்முறை அகலம் நீளம்மட்டம் ஒக்கக்கொண்டு பொருள் வைத்து சங்குவைக்கவும், ஆவணி, ஐப்பசி, கார்த்திகை இந்த மூன்றுமாதங்களில் சங்குநடல் மனிதருக்காம் மற்றெல்லா மாதங்களும் தேவர்களுக்காமென வறிக.

மேற்சொல்லிய சங்குபிரமாணமறிய

மாதம் பன்னிரண்டிற்கும் முதல்பத்து நடுப்பத்து சடைப்பத்து அவச்சாயை அங்கங்களை யின்னதென்று அறிந்து சங்குவினுடைய உயரத்தை தொண்ணூற்ருறு பங்கு செய்து அதில் ஒன்றுக்கு ஓரங்குலமாக விலக்கச் சொல்வாமென்பது மாதம் பன்னிரண்டுக்கும் அங்குலம் முதல்பத்து நடுப்பத்து கடைப்பத்து அவச்சாயைக் கழித்து செய்யவும்.

மாதம் 12-க்கும் அவச்சாயை விவரமறிய

		அங்குலம் முதல்	அங்குலம் நடு	அங்குலம் கடை.
1	சித்திரை	2	1	½
2	வைகாசி	½	1	2
3	ஆனி	2	3	2
4	ஆடி	2	0	0
5	ஆவணி	0	0	0
6	புரட்டாசி	½	1	2
7	ஐப்பசி	2	3	4
8	கார்த்திகை	4	5	6
9	மார்கழி	6	7	8
10	தை	8	7	6
11	மாசி	6	5	4
12	பங்குனி	5	3	2

இதுவுமது-வேறுவிதச்சங்குமறிய.

மனைக்கு தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு அறிய வேண்டியகருவி மகாமேருமையத்தி லிருக்கப்பட்ட துருவத்தை நோக்கி தன்னுடைய நேத்திரத்தினாலே பூமியிலே யிறக்கி மையமாகக்கீறி அதற்குத் தெற்கே தான் நின்ற மையத்திற்கும் துருவமையத்திற்கும் நூலைப்பிடித்துப்

பார்க்கில் தெற்கு வடக்காகும் அதை சதுரஞ்செய்யில் கிழக்குமேற்காகும் இந்தமனே கிழக்கு பார்க்கில் ஈசான்ய மூலேதானே ஈசானம் பார்க்கவேண்டும் இது தெற்கு பார்க்கில் மேற்குமூலே ஈசான்யம் பார்க்கவேண்டியது.

இதுவுமது

சிற்பனுக்கு சன்மானஞ் செய்து ஜலத்தி லழைத்துக் கொண்டுபோய் பூமிசாரம்பார்த்து உபவாசமிருந்து அந்தத் தலத்தில் ராத்திரி வசித்து சுதரிசனங்களைக்கொண்டு முகூர்த்தஞ்செய்து சங்குஸ்தாபனம்பண்ணி திக்குபரிச்சேதங்கண்டு விநாயகபூசை பண்ணி யவாஹனம் பதவின்யாசம் பண்ணி வாஸ்த்து சாந்திசெய்து பிரமாணம் நிச்சயிக்கின்ற அங்குலத்தால் விதஸ்தியாஸ்த தெண்ட மூதலியவைகளால் அளந்து ஆயரீதிகளின் பரிசுத்தமான பொருத்தம் கிரகங்களுக்கும் ஆலயங்களுக்கும் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் மேற் சொல்லிய விதிப்படி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அனேக சுபங்களுண்டாம்.

வாஸ்துபுருஷ லக்ஷணமறிய

சித்திரை, வைகாசி இம்மாதங்க ளிரண்டிலும் மேற்கே சிரசும் கிழக்கே காலும், இடக்கை கீழுமாய் வடக்கு முகமாய் படுத்துக்கொண்டு இருப்பார்.

ஆடி, ஆவணி இம்மாத மிரண்டிலும் வடக்கே சிரசும் மேற்கே காலும், இடக்கை கீழும், கிழக்குமுகமாய் படுத்துக் கொண்டு இருப்பார்.

ஐப்பசி, கார்த்திகை இந்த மாதமிரண்டிலும் கிழக்கே சிரசாகவும், மேற்கே காலாகவும், இடதுகை கீழே வைத்து மேற்குமுகமாய் படுத்துக்கொண்டிருப்பார்.

தை, மாசி இந்த மாதமிரண்டிலும் தெற்கே சிரசாகவும், வடக்கே காலாகவும், இடதுகை கீழே வைத்து மேற்கு முகமாய் படுத்துக்கொண்டிருப்பார்.

பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி இந்த நாலுமாதங்களும் மூலமாத மானபடியால் வீடெடுக்கவும் குடிபுகவும் கூடாவாம்.

வேறு வாஸ்துபுருஷன் கிடக்கையறிய

வாஸ்துபுருஷன் அந்தந்த மாதத்து ராசியில் காலைநீட்டி அதற்கெதிராகிய ஏழாமிராசியில் தலையைவைத்து இடக்கை கீழும் வலக்கை மேலுமாய்க் கிடப்பான்.

வேறு வாசல் பலன்

வாஸ்துபுருஷன் கிடக்கையில் காலில் வாசல் விட்டால் மனையாளுக்குப் பொல்லாங்கு. தலையில் வாசல்விட்டால் கணவனுக்காகாது. முதுகில் வாசல்விட்டால் இராஜபய முண்டாம். வயற்றில் வாசல்விட்டால் வாழ்வு உண்டாம்.

வாஸ்துபுருஷன் நித்திரைவிடுதல் அறிய

சித்திரைமீ 10வ நாழிகை-5, வைகாசிமீ 21வ நாழிகை-8, ஆடிமீ 11வ நாழிகை-2, ஆவணிமீ 6வ நாழிகை-21, ஐப்பசிமீ 11வ நாழிகை-2, கார்த்திகைமீ 8வ நாழிகை-10, தைமீ 12வ நாழிகை-8, மாசிமீ 20வ நாழிகை-8, இந்த நாழிகைக்குமேல் வாஸ்துபுருஷன் எழுந்திருந்து $\frac{3}{4}$-நாழிகை இருப்பான். அதில் $\frac{3}{4}$-நாழிகை தந்த சுத்தி $\frac{3}{4}$-நாழிகை ஸ்நானம் $\frac{3}{4}$-நாழிகை பூஜை $\frac{3}{4}$-நாழிகை போஜனம் $\frac{3}{4}$-நாழிகை தாம்பூலதாரணம் ஆகசெய்கை-5-க்கு $3\frac{3}{4}$-நாழிகை இதற்குமேல் படுத்துக்கொள்வர். ஸ்நானம், பூசை, தந்தசுத்தி இம்மூன்று காலம் நீக்கி மற்ற இரண்டு காலத்திலும் கிரகாரம்பஞ் செய்யில் விசேஷ சவுக்கிய முண்டாகும். புரட்டாசிமீ மார்கழிமீ பங்குனிமீ ஆனிமீ இதுகளில் நித்திரைவிட்டு யெழுவதில்லை வாஸ்துபுருஷன் நிலையறிந்து மனைகோலாவிடில் பொருள் கஷ்டமும் நோய் உண்டாகுதலும் அன்றி மனைகோலிய கர்த்தாவும் விபத்தை யடைவார் செய்தவையும் பாழாகிப் போம்.

வாஸ்து இராசி வீடு

மீனம்-மேஷம்-ரிஷபம் இம்மூன்று ராசியில் காலைநீட்டி கன்னி-துலாம்-விருச்சிகம் இந்த மூன்று ராசியில் சிரசை வைத்து இடதுகைகீழும் வலதுகைமேலுமாக உத்திர திசையை நோக்கி இந்திரன் திசையில் காலைநீட்டி வாஸ்து புருஷன் கிடப்பான்.

இதுவுமது

மிதுனம்-கடகம்-சிங்கம் இம்மூன்று ராசியிற் காலை நீட்டி, தனுசு-மகரம்-கும்பம் இம்மூன்று ராசியிற் சிரசை வைத்து இடக்கைகீழும் வலக்கை மேலுமாக எமன் மூலையில் காலைநீட்டி வாஸ்துபுருஷன் கிடப்பான்.

இதுவுமது

கன்னி-துலாம்-விருச்சிகம் இம்மூன்று ராசியிற் காலை நீட்டி மிதுனம்-கடகம்-சிம்மம் இம்மூன்று ராசியிற் சிரசை வைத்து இடக்கைகீழும் வலக்கை மேலுமாகவைத்து மேற்கே முகமும் வடக்கே காலுமாக வாஸ்துபுருஷன் கிடப்பான்.

இதுவுமது

தனுசு-மகரம்-கும்பம் இம்மூன்று ராசியிற் காலைநீட்டி மிதுனம்-கடகம்-சிம்மம் இம்மூன்று ராசியிற் சிரசைவைத்து இடக்கைகீழும் வலக்கைமேலும் மேற்கே முகமும் வடக்கே காலுமாக வாஸ்துபுருஷன் கிடப்பான்.

வாஸ்து யெழுந்திருக்கும் நாளறிக மனைகோல குடிபுக

சித்திரைமாதம் 10உ வைகாசிமாதம் 21உ ஆடிமாதம் ஐப்பசிமாதம் 11உ ஆவணிமாதம் 6உ கார்த்திகைமாதம் 8உ தைமாதம் 12உ மாசிமாதம் 20உ இந்த தேதிகளில் வாஸ்துபுருஷன் எழுந்திருப்பன். இந்நாளில் மனைகோலில் அவரவர்க்குப் பொருந்திய திக்கில் வாசல் விடலாம் குடிபுகலாம் நன்று.

மனைமுகூர்த்தஞ் செய்யும் மாதமறிய

சித்திரை - வைகாசி - ஆடி - ஆவணி-ஐப்பசி-கார்த்திகை-தை-மாசி இந்த மாதங்கள் எட்டிலும் மனை முகூர்த்தஞ் செய்ய நன்மையாகும். மற்ற 6-மாதங்களில் மனை முகூர்த்தஞ் செய்தால் கர்த்தர் நாசமும் கர்ம நாசமும் உண்டாகும்.

கீழ்சாருமனை தை-மாசி மாதத்திலும்
தென்சாருமனை சித்திரை-வைகாசி மாதத்திலும்
மேல்சாருமனை ஆடி-ஆவணி மாதத்திலும்

வடசாருமனை ஐப்பசி-கார்த்திகை மாதத்திலும் வாஸ்துபுருஷன் நிலையறிந்து முகூர்த்தஞ்செய்யில் சகல சம்பத்துகளும்பெருகி விசேஷ சவுக்கியத்தை யடைவார்கள்.

முகூர்த்தஞ்செய்யும் இடமறிய

மனையின் அகலத்தை 28-பாகம்செய்து காலில் 17-பாகமும் தலையில் 10-பாகமும் தள்ளி நடுவில் நின்றபாகம் ஒன்றில் மனை முகூர்த்தஞ்செய்ப உத்தமம்.

முகூர்த்தலக்கின சகுனமறிய

உதய லக்கினத்துக்கு கேந்திர திரிகோணத்தில் குரு நின்றால் வாய்ச்சகுனம் கெருடச்சகுனம் இந்த ராசிகளில் சந்திரன் கூடிநின்றால் நாரைசகுனம் இவற்றில் சுக்கிரன்கூடி நின்றால் பாரத்துவாச சகுனம் லக்கினத்துக்கு 3-7-1-ல் குஜன்நின்றால் நாரைப்பட்சி சகுனம்உண்டாகும். 3-6-11-ல் பாபிகள் இருந்தால் மயிர் மாமிசம் காணும். இவற்றில் சுக்கிரன் இருந்தால் தயிர் குடங்காணும், இவற்றில் குருவிருந்தால் பாற் குடங்காணும், சனியிருந்தால் அக்கினி காணும், கேந்திரங்களில் ராகு கேதுக்கள் இருந்தால் சர்ப்ப தெரிசனமுண்டாம்.

வேறு முகூர்த்தஞ் செய்ய

ஆலயங்கள் நகரங்கள் பட்டணங்கள் கிரகங்கள் தடாகங்கள் கிணறுகள் இவைகளைச் சிற்பன் கையாற் செய்தால் அன்னியவர்னத்தான் கையினால் முகூர்த்தஞ்செய்தால் அரசருக்கும் எசமானுக்கும் ஆகாது.

ஆகாச பாதாள திதிகளறிய

யுத்தம் விவாகம் நவபோஜனம் விவசாயம் யாத்திரை பிரதிஷ்டை கிரககர்மங்கள் இவைகள் செய்தால் கர்த்தா நாசம் கர்மநாசம் உண்டாகும்.

வீடு கட்டுகிற நிலம்

பல்லிபோலும் ஒந்திபோலும் பாம்புபோலும் பறவைபோலும் ஒட்டைபோலும் வில்லுபோலும் ஈட்டிபோலும் உடுக்கைபோலும் வேலைப்போலும் சூலம்போலும் சுளகுபோலும் முச்சதிரமாகிய பூமியும் ஆகாது. மேற்கும் தெற்கும் தாழ்ந்தும், வடக்கும் கிழக்கும் உயர்ந்தும் இருக்கிற மனையும் கூடாது ஒரு அகல மனையில் ஒருபக்கந் தாழ்ந்தும் மற்றொரு பக்கம் உயர்ந்து மிருக்கக்கூடாது.

வீடுகட்ட ஆரம்பஞ்செய்யவேண்டிய திதி பலன்

சுக்கிலபட்சம் சுபப்பிரதம் கிருஷ்ணபட்சம் அமாவாசி போன திரிதிகைமுதல். பௌர்ணமிபோன தசமி வரையில் சுக்கிலபட்சமாகும், மற்ற நாட்கள் கிருஷ்ணபட்சமாகாது. பிரதமை சஷ்டி ஏகாதசி இவைகள் நந்தை திதி இதன் பலன் அர்த்த ஆனி விதியைசத்தமி துவாதசி இவைகள் பத்திரை திதி இதன்பலன் பந்தனம், திரிதிகை அஷ்டமி திரயோதசி

இதுச்யை திதி இதன் பலன் மிருத்துவின் பயம், சதுர்த்தி நவமி சதுர்த்தசி இவைகள் இருத்தை திதி இதன் பலன் சுபப்பிரதம், பஞ்சமி தசமி பௌர்ணமி இவை பூரணை திதி இதன் பலன் ஜெயப்பிரத்தம், அமாவாசியில் அர்த்தஹானி இதன் பலன் பிராணஹானி ஆகுமென்க.

அக்கினி நட்சத்திரமறிய

பரணி நக்ஷத்திரம் 4-ம் பக்கத்தில் சூரியப்பிரவேசமாகிற நாழிகை தொடங்கி ரோகணி நக்ஷத்திரம் 2-ம் பாதத்தில் சூரியப் பிரவேசமாகிற நாழிகைவரையில் அக்கினி நக்ஷத்திர காலமாம், அந்தக்காலத்தில் மண்மரம் கல்கிரகம் முதலிய கருவிகள் செய்தால் கிரியைநஷ்டம் கர்த்தாநாசம் உண்டாம்.

அஷ்டதிக்கு லட்சணம்

ஈசான்ய பக்கமென்று சொல்லப்படுகின்ற பரமசிவத்தினது பக்கத்தில் பரிமளம் பொருந்திய மலரானது வந்துநின்ருல் கனைகஸ்வரியமும் தீர்க்காயுசும் புத்திரசம்பத்தும் வாழ்வும் மென்மேலும் விருத்தியாய்ப் பெருகி நீடூழிகாலம் நிலை நிற்கும். இதன்றி பெரியோர்களுக்கும் தபோதனர்களுக்கும் அன்னபானுதி கொடுக்கவல்லவனு யிருப்பான். இந்திரன் திக்கில் பரிமளம்பொருந்திய மலரானதுவந்து நிற்குமாகில் அதிக சௌபாக்கியம் பொருந்திய லட்சுமிவிலாசமும் தனதானிய சம்பத்தும் சந்தான பாக்கியமும் தீர்க்காயுசும் ஆயுராரோக்யமும் மன்மதக்கிரீடையும் அறுபத்துநான்கு கலைக்கியானமும் பதினெண் புராணங்களும் நான்குமேவதமும் ஆறு சாஸ்திரமும் பொருந்துவதுமன்றி, பசுக்கள் முதலிய கறவைகளுஞ் சேரும். அக்கினி திக்கில் வாசம் வீசுகின்ற புட்பமானது வந்து நிற்குமாகில் கற்புநிலைமை பொருந்திய பெண்சாதியானவள் மலடியாவாள். இதன்றி விஷத்தைத் தாரநின்ற பாம்பிஞல் பயமும் அச்சமும் உண்டாகும். அக்கினிச் சுவாலையிஞலும் கள்வர்கள் பயத்திஞலும் பொருள் சற்பாத்திரத்துக்குதவாமல் எஜமான் நாசமாவான். எமன் மூலையென்னும் வடக்கில் வாசம்வீசும் மலரானதுவந்து நிற்குமாகில் மனதில் சிந்தனையும் வியாகூலமும் செருக்கும் பலபோரால் கலகமும் தீங்காகிய காரியமும் தீமை பிணிஅச்சும் முதலியவைகளும் அதிகரித்துண்டாம். கன்னிமூலையில் மலர்வந்து நிற்கில் பொருளும் அன்னமும் தனகனகமும் இலட்சுமி பிரகாசமும் நவதானிய லாபமும் பிறவிச்செல்வமும் என்னுளும் நீங்காமல் வற்ருச் சமுத்திரமாய் மென்மேலும் பெருகியுண்டாகும்.

வருணன்மூலேயில் அழகும் வாசம் பொருந்திய பூவானது வந்து நிற்குமாகில் நிறைசெல்வ மாருமனு மிருப்பது மல்லாமல், நினேத்த காரியமும், ஆரம்பித்த தொழில்களும் ஜெயமாகும். வாயுமூலேயில் விகசிதம் பொருந்திய மலர்வந்து நிற்குமாகில், பதினெண் காசமென்னும் க்ஷயரோகத்தினுல் மரணமும், சோரர்கள் களவினுல் பண்டபாத்திர முதலிய பொருட்சேதமுமன்றி, அம்மனேயானது அலகைவாழும் சுடுகாடாகும். அன்றியும் சகல பாக்கியமும் அழிந்துபோம். குபேரன் திக்கில் விரோதம் பொருந்திய மலரானது வந்து நிற்குமாகில் தனதானிய சம்பத்தும், புத்திர சந்தானமும் ஆயுள் விருத்தியும், சமையோக்கியமும், அதர்மசிந்தை நீங்கி அபஜெய மென்றவரைக் காத்து பொருளுதவிசெய்து புண்ணியவானு யிருப்பான்.

பஞ்சகமறிய

சவுளத்திற்கும், உபநயனத்திற்கும் ரோக பஞ்சகமும், விவாகத்திற்கு மிருத்திய பஞ்சகமும், இராஜ தரிசனத்திற்கு ராஜபஞ்சகமும், கிரகங்களுக்கு அக்கினி பஞ்சகமும், சோர பஞ்சகமும் ஆகாவாம். இராத்திரிக்கு சோரபஞ்சகமும், ரோகபஞ்சகமும் தோஷமில்லே. பகலில் ராஜபஞ்சகமும், அக்கினி பஞ்சகமும் தோஷமில்லே. அமிஜித்தாகிய 15-நாழிகைக்கு மிருத்தியு தோஷ முதலிய சர்வ தோஷமும் நசிக்கும். அக்கினி பஞ்சகத்துக்கு சந்தனக் குழம்பும், இராஜ பஞ்சகத்துக்கு எலுமிச்சம் பழமும், சோர பஞ்சகத்துக்கு தானமும் செய்ய ஷை தோஷம் நிவர்த்தி.

ஸ்தானசுத்தம் பார்க்க

கிரகப்பிரவேசத்து 12-ம் இடமும், அபிஷேகத்துக்கு 11-ம் இடமும், சவுளத்திற்கும் பிரகரண போஜனத்துக்கும் 10-ம் இடமும், போஜனத்திற்கும் ஜீவனத்துக்கும் 9-ம் இடமும், உபநயனத்திற்கும் கிரகாரம்பத்திற்கும் பயிரிடுகிறதற்கும் 8-ம் இடமும், ருதுசாந்திக்கும் விவாகத்திற்கும் 7-ம் இடமும், கோடியுடுக்க 6-ம் இடமும், பிரயாணத்திற்கு 5-ம் இடமும், வித்தியாரம்பம் செய்வதற்கும் அகமெடுப்பதற்கும் 4-ம் இடமும், தான்யத்திற்கும் சங்கிரகத்திற்கும் வித்தையப்பியாசத்துக்கும் 3-ம் இடமும், அமிழ்தம் சாப்பிடுவதற்கும் விதைகள் விதைப்பதற்கும் 2-ம் இடமும், நிஷேதத்திற்கு லக்கினமும் சுத்தமாயிருக்க வேண்டியது.

பஞ்சகோள் நின்ற தோஷமறிய

சூரியன் நின்ற நட்சத்திரத்திற்கு 7-ம் நட்சத்திரம் உற்பாதமென்றும், 10-ம் நட்சத்திரம் தாரகமென்றும், 15-ம் நட்சத்திரம் பிரமகண்டமென்றும், 21-ம் நட்சத்திரம் காலனென்றும் பெயராம்.

செவ்வாய்நின்ற நட்சத்திரத்திற்கு 8-ம் நட்சத்திரம் சூலமென்றும், 10-நாம் நட்சத்திரம் சக்கரமென்றும், 15-ம் நட்சத்திரம் கண்டமென்றும், 21-ம் நட்சத்திரம் காலனென்றும் பெயராம்.

புதன்நின்ற நட்சத்திரத்திற்கு 8-ம் நட்சத்திரமும், 18-ம் நட்சத்திரமும், 24-ம் நட்சத்திரமும் கண்டமென்று பெயராம்.

சுக்கிரன்நின்ற நட்சத்திரத்திற்கு 7-ம் நட்சத்திரமும், 9-ம் நட்சத்திரமும், வியாழன்நின்ற நட்சத்திரத்திற்கு 7-ம் நட்சத்திரமும் 9-ம் நட்சத்திரமும் கொடுமையென்று பெயராம்.

சனிநின்ற நட்சத்திரத்திற்கு 5-ம் நட்சத்திரமும், 6-ம் நட்சத்திரமும் 10-ம் நட்சத்திரமும், 11-ம் நட்சத்திரமும், 20-ம் நட்சத்திரமும் பந்தமென்று பெயராம்.

இராகு கேதுநின்ற நட்சத்திரங்களுக்கு 7-ம் நட்சத்திரம் பரிகமென்று பெயராம். இவை சுப காரியங்களுக்கு ஆகாது.

ஆகாமண்ணின் வாசனையறிய

தயிர், நெய், தேன், எண்ணெய், உதிரம், மயிர், மீன், பட்சி இவைகளினுற்றம் துர்க்கந்தமுடைய மணலின் மனை கோவில் பனை பாழடைந்து பல விபத்தை யடைவார்கள்.

குழிகெல்லி யெடுத்த மண்ணை
மறுபடியும் குழியிலடைத்து பார்க்கும் விதி

ஒருமுழ நீள அகல ஆழம் தோண்டிய மண்ணை மறுபடியும் குழியில் நிரைக்கில் மண்மிகுந்திட உத்தமம். சமமாகில் மத்திபம். குறையில் அதமம். இதற்கு செல்வம் குன்றும்.

முகூர்த்தகால்குழி சகுனமறிய

மண்டுகம், அரணை, பல்லி, சிலந்தி, புழுகு, நண்டு, தனம், செங்கல், பசுவின்கொம்பு, தான்யம், வெள்ளி, சிப்பி இவைகள் கண்டால் உத்தமம். ஓடு, சாம்பல், கரி, பல், மரத்தின்

வேர், எலும்புகள் சிதரினும், செல்லுகள் பரவியிருக்கினும், வண்டுகள் துளைக்கினும், ஒணான் உடும்பு பாம்பு தேள் ஆலம் பூரான் எலி உமி விறகுகாணில் சிறுமையும் துன்பமும் உண்டாம்.

வெள்ளைப்புரு மாமிசம் யானை புரவி முகூர்த்தஞ் செய்யுமிடத்து சதுரமாய் ஒருமுழ அகலநிகள ஆழமாய் கெல்லி நடுவில் மண்முட்டுவைத்து சுற்றிலும்கெல்லி மண்ணை வெளியில் எடுத்து நடுமுட்டில் வாஸ்துபுருஷன் பூசைசெய்து மூன்றுகுடம் ஜலத்தை வலமாகவிட்டு உதறி புட்பங்களைப் போடவும் அப்புஷ்பங்கள் மூன்றுசுத்து வலமாகவந்து கிழக்கு ஒதுங்கினதற்கு பலன் சம்பத்துண்டாம்; இடமாக சுற்றில் தீமையுண்டாம்; ஷ்டி புஷ்பம் ஈசானியமூலையில் நின்றால் வாழ்வுண்டாம்; கிழக்கில் லட்சமி லாபமுண்டாம்; அக்கினி மூலையில் கலகமும் தீமையுமுண்டாம்; தெற்கில் பிணியும் வறுமையுமுண்டாம்; கன்னிமூலையில் தனதான்ய முதலிய செல்வமுண்டாம்; மேற்கில் நினைத்த காரியம் கைகூடி இன்பத்துடன் வாழ்வார்கள்; வாயுமூலையில் பொருள் கஷ்டமும், தெய்வக்குற்றமும் உண்டாம். வடதிசையில் புத்திரசம்பத்தும் பொருட் சம்பத்துமுண்டாம்.

மூலைக்கால் நாட்டும் விதி

நல்ல முகூர்த்தத்தில் விநாயகரைப் பூசைசெய்து, பொன்னும் நவமணியும் பாலுங் குழியில்விட்டு முதல் தென்மேல் மூலைக்காலைநாட்டி தென்கீழ்மூலை வடகீழ்மூலை வடமேல்மூலைக்காலும் அடவுசோ நாட்டவும்.

மண்வெட்டி சகுனமறிய

மனைமுகூர்த்தஞ் செய்யும்போது மண்வெட்டி முனை முறிந்திடினும், முளைபிரிந்திடினும் தீதாகும்.

மண்வெட்டி முழக்கயிற்றின் சகுனம்

மனைக்கோலுவதற்குக் கொண்டுவந்த மண்வெட்டி முனையானது முறியினும், முனையானது பறிந்திடினும், கயிறு அருந்திடினும் ஆகாது. அதேதெனெனில் எஜமானுக்கு வராத ஆபத்தும், மனக்கிலேசமும் அனுபவிப்பதுமன்றி நீடூழி காலம் துன்பத்தை யனுபவித்து எமபதிக்குப் பாத்திரனுவான். ஆகையால் அந்தமனை ஆகாது.

நூலணியும் விதி

தேவர்க்கு பட்டுநூல் முப்புரியாகவும், பிராமணருக்கு தெர்ப்பை முப்புரியாகவும், க்ஷத்திரியருக்கு ஆலம் விழுது

கதம்பைநார் முப்புரியாகவும், வைசியருக்கு பருத்திநூல் இருபுரியாகவும், சூத்திரர்களுக்கு பனைநார், ஆத்திநார் இருபுரியாகவும் கொள்வது விதியாகும். நான்கு வமிசத்தாருக்கும் முப்புரியாகிய பருத்திநூல்கொள்வதே விதியாகும்.

நூற்கயிற்றின் சகுனம்

பட்டுநூல் தர்ப்பை ஆலம்விழுது பனையின்நார் இவைகள் தேவர்முதல் நான்குஜாதிக்கும் தெளிவாக சொல்வோம். அதாவது தேவர்களுக்குப் பட்டுநூலால் முப்புரிக்கயிறு, பிராமணர்களுக்குத் தர்ப்பையினால் முப்புரிக்கயிறு, இராஜர்களுக்கு ஆலம்விழுதால் முப்புரிக்கயிறு, வைசியர்களுக்குப் பருத்திநூலால் இரண்டு புரியையுடையகயிறு, சூத்திரர்களுக்குப் பனைநாரினால் இரண்டுபுரி கயிறுமெனவறிக.

மூளை நீளமறிய

பதினொருவிரல்முதல் இருபத்தாறு விரல்வரையில் இசைந்தபடிகொண்டு முதலில் தென்மேற்குமுதல் தெற்கு கடாவி இடமாகமற்ற மூளைக்கடாவவும். மூளைகிழியி லசுபமுண்டு.

மூளை நீளம் மூளைக்கயிறுகால்

மூளைக்குநீளம் 11-விரற்றொடங்கி ஒருவிரல் ஏறிட்டு இருபத்துநான்கு விரலளவுகொள்வது மூளைகடாவும்போது வாஸ்துவின் வயிற்றிற்கெல்வி பின்பு தென்மேல்மூலையில் கடாவி தென்கீழ்வடகீழ் வடமேல்மூலைகளிற் கடாவிவிடவும்.

மனைமுகூர்த்தஞ் செய்யும்போது மரியாதை செய்வதறிய

மனைமுகூர்த்தஞ் செய்யும்போது சொர்னதானம் வஸ்திரதானம்செய்து பெரியவாளுக்கெல்லாம் தாம்பூலமுதலிய மரியாதைகள்செய்து மனைகோலவேண்டும்.

தேங்காய்ச் சகுனமறிய

முகூர்த்தஞ் செய்யுங்காலத்தில் தேங்காயுடைக்கில் முடிபெருத்து அடிசிறுத்து வட்டமாயுடையில் லட்சுமிவிலாசமுண்டு. மூன்றுபங்கு சிரசிலும், ஒருபங்கு அடியிலும், உடைந்தால் சந்தோஷமுண்டாம்; ஜெயமுண்டாம் 5-அல்லது, 2-ஆகில் மாறாத செல்வமுண்டாம். உடைந்து நரம்பு பிடித்தால் வாழ்வுண்டாகும். கடுகளவு பிரமாணம் சிதறி உள்ளே விழுந்தால் ரத்தினஞ் சேரும். நடுவிற் பிளந்தால் சண்டையுண்டாம். நடு

மத்தியிலுடைந்தால் விசேஷநன்மை. 6-4-ஆக உடைந்தால் விசேஷ துன்பம், கண்கள் தெரிந்தால் மரணமுண்டாம், ஓடு விட்டால் வறுமையுண்டாம், ஓடு கசங்கிட பிணியுண்டாம், அழுகலானுல் குற்றம் அதுமனஸ்தாபத்தை விளைவிக்கும்.

விசால லட்சணம்

தெற்குமுகம் மேற்குமுகம் கட்டினவீடு விசாலத்துக்கு கமலாகர மென்னப்படும். இதன்பலன் லட்சுமிகரம் மேற்கு வடக்கு கட்டினவீடு விசாலத்துக்கு சுவர்னபல மென்னப் படும். இதின்பலன் சோரபயம் பீடையுண்டாம். வடக்கு கிழக்கு கட்டினவீடு விசாலத்துக்கு புஷ்கதமுஷ்டிக மெனப் படும். இதின்பலன் சோரபயமும் விஷப்பயமுமாகும். தெற்கு மேற்கு வடக்கு கட்டின வீட்டுக்கிழக்கில் வாசக்கால் வைத் தால் புத்திர முஷ்டிகமென்னப்படும். இதின்பலன் பயம் வடக்கு கிழக்கு தெற்கு கட்டின வீட்டுக்குமேற்கில் வாசக் கால் வைத்தால் அதிசயமென்னப்படும். இதின்பலன் ஹானி கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு கட்டின வீட்டுக்கு வடக்கில் வாசக்கால் வைத்தால் நல்ல சுகமுண்டாகும். மேற்கு கிழக்கு வடக்கு இந்த மூன்று பக்கத்திலும் வாசக்காலிருந் தால் கலியாணபதமெனப்படும். இதில் சம்பத்துண்டாம் கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு இந்த நாலுபக்கத்திலும் வீடு கட்டியிருந்தால் அது சதுர்ச்சாலே என்னப்படும் இதின் பலன் உத்தமம்.

மனை தோஷமறிய

ஆலயம், சன்னிதி மையம், பசாசு வாசமானயிடம், துர்க்கை தேவதையின் சன்னிதி, தேவதைவலக்கண் நேரா யுள்ள இடம், குளம், வாய்க்கால், ஆறுதாழ்ந்தயிடம், தெருக்கோடி, மூலே இவைகள் கூடாவாம். வடக்குகிழக்கு தாழ்ந்திடில் இன்ப முண்டாம். தெற்குமேற்கு தாழ்ந்திடில் துன்பமுண்டு.

மனைக்கோல ஆகாநாள்

விருத்தம்

நன்னாளிலு மனைகோலினு நலனார்தமிராசி
முன்னாகுதல் வலமாகுதல் முளரித்திரு வுரையும்
பின்னாகுத லிடமாகுதல் பேணிமனை கோலில்
பொன்னாகுதல் பொருளாகுத லுயிராகுதல் போமே.

மனைகோல தூரமறிய

மனைகோல வேண்டுமானுல் ஆற்றங்கரைக்கு ஜாதிஅடி 50-க்கு மேலும், ஊரணிக்கு ஜாதி அடி 25-க்கு மேலும்,

கிணற்றுக்கு ஜாதி அடி 17½-க்கு மேலும் இதுகளுக்கு அப்பால் மனைபோட சுகம். மேற்சொல்லிய துகைக்கு குறையில் துன்பமுண்டாம்.

மனைகோல மாதமறிய

சித்திரை வைகாசி ஆடி ஆவணி ஐப்பசி கார்த்திகை தை மாசி இந்த எட்டு மாதமும் மனைகோல நன்ரும்.

கிரகப் பிரவேசமறிய

கிரகப்பிரவேச காலத்தில் மேற்கு தெற்கு அக்கினிமூலை வாய்வுமூலை இந்த திக்குகளில் பிரவேசித்தால் செல்வமிழந்து உயிரிழப்பார்கள். அதற்குத்தா னிருக்கப்பட்ட இடத்தி லிருந்து தகுதியான இடத்தில் 5-7-அல்லது 9-நாள் குடித்தனமிருந்து அவ்விடத்தி லிருந்தபடியே புதிதாய்ப்போக வேண்டிய இடமானது வடக்கு கிழக்கு ஈசான்னியம் இந்த திக்குகளுக்குப் பிரவேசித்தால் விசேஷ நன்மையுண்டாம்.

கிரகப்பிரவேச விதிகளறிய

நீர்க்குடம் பால் பழம் செங்நெல் பொன் புஷ்பம் சந்தனம் புடவை சோமன் மஞ்சள் குங்குமம் இதுகளும் சுமங்கிலிகள்கூட மங்களவாத்திய முழங்க கிரகப்பிரவேசம் செய்து நவக்கிரக வோமம் செய்து பூரிகொடுத்து தாம்பூலமளித்து போஜனஞ் செய்யவும். அல்லது அறுகம்புல் பசுக்களுக்குக் கொடுத்துத் தங்களால் இயன்ற தக்ஷணையும் கொடுத்து கிரகப்பிரவேசம் பண்ணவேண்டும்.

வேறு கிரகப்பிரவேசம்

ஆனி ஆடி புரட்டாசி மார்கழி மாசி பங்குனி மாதங்களும், ஞாயிறு செவ்வாய் வியாழம் அஸ்வனி மிருகசீரிடம் புனர்பூசம் அஸ்தம் சித்திரை சோதி மூன்றுத்திரங்கள் அனுஷம் திருவோணம் தவிர மற்ற நட்சத்திரங்களும், விருச்சிகம் கும்பம் இருத்தையும் ஆகாவாம். அஷ்டம சுத்தமுள்ள லக்கினம் உத்தமம்.

இருமனை யாகாததற்கு விதி

ஒருவீட்டுக் கட்டடத்துடன் மற்றொருவீட்டையும் சேர்த்து கட்டவேண்டுமானல் இரண்டையும் இடித்துக் காலி செய்து மனையைக்கொத்தி நவதானியங்களை அதில்விரைத்து பயிர்செய்து பயிரானவுடன், பசுக்களைவிட்டு மேய்த்து மூன்றுநாள் பசுக்களை அதில் வசிக்கச்செய்து, நவக்கிர

வாஸ்து ஹோமம் செய்து, மனைகோல்பவர்களுக்கு சகல தோஷமும் நிவர்த்தியாகி சகல சவுக்கியமும் விசேஷ நன்மையும் உண்டாம். இப்படிக்குச் செய்யாவிட்டால் மனக்கிலேசமும், துன்பமும் உண்டாம்.

மனை முகூர்த்தம்

சித்திரை-வைகாசி-ஆடி-ஆவணி-ஐப்பசி-கார்த்திகை-தை-மாசி இம்மாதங்களில் கிழக்குமுதல் கிரமமாக மனை முகூர்த்தம் செய்யலாம். ஆனி-புரட்டாசி-மார்கழி-பங்குனி இந்த ராசிகளில் சூரியனிருக்கும்போது கிரகப்பிரவேசம் இரகாரம்பம் செய்யில் கர்த்தா மரணம். ரோகினி-திருவோணம்-அனுஷம்-பூரம்-உத்திரம்-உத்திராடம்-உத்திரட்டாதி-ரேவதி-மிருகசிரிடம்-புனர்பூசம்-அஸ்தம் இவைகள் உத்தமம். சித்திரை-அவிட்டம்-மூலம்-சோதி-சதயம் இவைகள் மத்திமம். மேற்கூறிய நட்சத்திரங்கள் நீங்கலாக மற்றவை அதமம்.

உத்தம வாரங்கள்

சோமவாரம்-புதவாரம்-குருவாரம்-சுக்கிரவாரம் உத்தமம். சனிவாரம்-ஆதிவாரம் மத்திமம். மங்களவாரம் அதமம்.

பூர்வாஷ்டமியும் இருத்தையும் உவாவும் ஆகாது. மற்ற பாகங்களிலே அஷ்டம சுத்தியா யிருக்கவேண்டும். ஸ்திர ராசி உபயராசி உத்தமம். சரராசி கூடாது; தீமையுண்டு.

மனைமுகூர்த்தஞ் செய்யுங்காலத்தில் எஜமானுடைய ராசிக்கு கேந்திரங்களாகிய லக்கனம் நான்காமிடம் ஏழாமிடம் பத்தாமிடம் இந்த இடங்களில் குரு சுக்கிரன் புதன் நிற்க, ஆறுமிடத்தில் சூரியன் நிற்க, மூன்றுமிடத்தில் சனி செவ்வாய் நிற்க மனைமுகூர்த்தம் செய்ய 100-வருஷம் சுபமாக விளங்கி வரும். அல்லது லக்கனம் 7-10-ல் சந்திரன் நிற்க முகூர்த்தஞ் செய்யில் 400-வருஷம் சகல பாக்கியங்களோடும் வாழ்வார். அல்லது லக்கினம் 4-10-ல் சந்திரன் புதன் குரு நிற்க முகூர்த்தம் செய்ய 600-வருஷம் நிறைந்த சம்பத்துடன் இருக்கும். அல்லது பத்தில் நாலின் சந்திரன் குருவும் பதினொன்றில் சனியும் சூரியனும் இருக்கச்செய்யில் 800-வருஷம் விளங்கி இருக்கும். அல்லது லக்கினத்தில் குருவும், பதினொன்றில் சூரியன் புதன் சுக்கிரனும் இருக்கச்செய்யில் 1000-வருஷம் விளங்கும். அல்லது லக்கினத்தில் 4-ல் 10-ல் சந்திரர் புதன் குரு நிற்கச் செய்யில் 600-வருஷம் விளங்கும். அல்லது கேந்திரமாகிய லக்கினம் 4-7-10-ல் குரு சுக்கிரன் லக்கினாதிபதி இல்லாதிருக்க மனைகள் செய்யில் புத்திர

நாசம். அல்லது லக்கினதிபதி திரிகோணத்தில் நட்பு உச்சம் அல்லது கேந்திரத்தில் இருக்கச்செய்யில் வாழ்வுண்டாகும். சுபக்கிரகம் நோக்கில் 100-வயது விளங்கும். பாபக்கிரகம் நோக்கில் ஆயுள் குறையும்.

பேழை வைக்க

கிரகப் பிரவேச காலத்தில் கட்டிய கிரகத்தில் ஈசான்ய பாகத்தில் சுத்தஞ்செய்து நண்டுவளைமண், யானைக்கொம்பு மண், ரிஷபத்தின்கொம்பின் மண், புத்துமண், குளத்துமண் இவ்வைந்து மண்ணையும் சமமாகக்கூட்டி சிறிய பெட்டிபோல் செய்து ஷ டி மண்ணால் ஷ டி பலகை செய்து அடிப்பேழை யில் 9-பள்ளம் செய்து 9-வித ரத்தினங்கள் ஷ டி பள்ளத்தில் வைத்து மேற்பலகையால் மூடி தங்கத்தகட்டில் வாஸ்து எந்திரம்போட்டு, வாஸ்து பூசையும் நவக்கிரக பூசையுஞ் செய்து ஷ டி எந்திரத்தில் பழம்பாசியினல் சுத்தி ஷ டி ஈசா னியமூலையில் வைத்து அந்த இடத்தில் ஒரு மண்டலம் பூசை செய்துக்கொண்டு வரவேண்டும்.

தாய்ச்சுவர் நிர்ணயம்

மனைக்குத் தாய்ச்சுவரைச் சேர்த்தே ஆயக்கணக்கிட வேண்டும். ஓர் மனைக்கு இரண்டு சுவர் இருக்குமாயின் அவ் விரண்டையுமே கணக்கிற் சேர்க்கவேண்டும். மற்றும் வீட் டுக் கட்டடத்திற் தெருப்புறத்திலும் பின்புறத்திலும் அமை யுங் தாவரங்களைக் கணக்கிற் சேர்ப்பதற்கு விதியில்லை. ஆயினும், ஒருவாறு சேர்ப்பதாயின் அஃது மத்திபம் பட்ச மென்பதாம்.

வீட்டின்வாயில் நிர்ணயம்

கிழக்குமுகமாகிய மனைக்கு அம்மனையின் ஈசானியமுதல் ஆக்நேயம்வரையிலும் தென்முகமாகிய மனைக்கு அம்மனையின் ஆக்நேயமுதல் நிருதி மூலைவரையிலும் மேற்கு முகமாகிய மனைக்கு அம்மனையின் நிருதிமூலை முதல் வாயு மூலைவரை யிலும் வடக்கு முகமாகிய மனைக்கு அம்மனையின் வாயுமூலை முதல் ஈசான்யம் வரையிலும் கணக்கிடவேண்டு மென்பதாம்.

இதுவுமது

முன்கூறியபடி மனையைச் சூரியன்முதல் கேதுவரையில் முறையே ஒன்பது பாகமாக்கவேண்டும். அப்படியே செய்யும் பாகங்களுள் குரு புதன் பாகமாயின் லட்சுமி கடாட்சமுண் டாகும். செவ்வாய் பாகமாயின் அவ்வில்லாளருக்கு வியாச்சி யங்களுண்டாம். கடன்மிகுந்து அம்மனை பாதீனமாய்ப்போய்

விடும். சூரிய பாகமாயின் அதில் வாழ்கின்றவர்களுக்கு ஆதாயங் குறைந்துபோவதுமன்றித் தாய்க்கும் பிள்ளைகளுக்கும் மனக்கிலேசமும் கலகமும் உண்டாகும். சுக்கிரபாகமாயின் அற்ப பலனும் மிகுந்த பொருள் விரையமும் வியாச்சியமு முண்டாம். சந்திரபாகமாயின் விருத்தியும் க்ஷீணமும் அடுத்தடுத்துண்டாம். சனிபாகமாயின் பொருள் விரையமும் வியாச்சியமும் உண்டாம். இராகுகேதுக்கள் பாகமாயின் அம்மனையார்க்குஞ் சொந்த மாகாமலே அடிக்கடி ஓர் கைவிட்டோர்கை மாறிக்கொண்டே யிருக்கும். ஆகையா லிவ்வொன்பது கிரகங்களுக்குள் புதன், குரு இவ்விரண்டு பாகங்களே உத்தமம். மற்றும் இவ்விரண்டுள் தனித்தனியாயினும் அல்லது இரண்டுங் கலந்தாயினும் இருக்கலாம். மற்ற ஏழு பாகங்களையும் மனைக்கு உதவாதவை யென்று நீக்கத்தக்கதே விதி யென்பதாம்.

வாயிலின் அளவுவிதி

மனைவாசற்படிக்கு வேங்கை அல்லது தேக்கு இம்மரங்கள் சிரேஷ்டம்; மற்ற மரங்களை நீக்கவேண்டியதே. மற்றும் அவ்வாயிலுக்கு அமைக்கப்படுகின்ற உயர அளவில் ஒன்பதில் ஐந்துகூறு அகலம் அமைக்கப்படவேண்டும். அவ்விதிப்படி யிருக்கின்ற வாயிலிற்றான் மஹா இலக்குமி நுழைவா ளென்பதாம்.

இதுவுமது

வாயிற்படிகளுக்கு அமைக்கப்பட்ட மேற்குரியும் பக்கங்களி லிணைக்கப்பட்ட சட்டங்களும் ஓர் ஜாதி மரமாகவே யிருக்கவேண்டும். அன்றியும் அவ்வாயிற்படிகளுக்கு அமைக்கப்பட்ட கதவுகளுக்கு ஒன்றைக் கணக்காய்ப் பலகைகள் சேர்த்துக் கூட்டவேண்டு மென்பதாம்.

வீட்டில் நுழையும்போது தோற்றக் கூடாதவைகளாவன

வீட்டுள் செல்லும்பொழுது எதிர்பார்வையில் தூலங்களின்குத்தாயினும், முத்தத்தின் மூலைக்குத்தாயினும் தோன்றுமாயின் அம்மனையின் கர்த்தாவுக்குத் தோஷ முண்டாகும். அன்றியும் அம்மனையில் அடுத்தடுத்து உயிர்ச்சேதங்களுண்டாகும். மேலும், தெருவாயற்படிக்கு நேராய் மூடப்பட்ட கட்டைச் சுவரிருந்தாலும் அவ்வீட்டில் வசிப்பவர்களுக்கு நடுக்க முண்டாகுமென வறியவும்.

வீட்டிலிருக்கவேண்டிய அங்கணவிதி

வீட்டின் தலைவாயிற்படியின் அளவுக்கு உள்வாயிற்படிகள் உயர்ந்திருக்குமாயின் வெற்றிநலமுண்டாம். விதிவிலக்கா யிருக்குமெனின் வரும் நற்பலன் நீங்கும்.

இதுவுமது

அன்றியும் வீட்டின் முன்பார்வை அங்கணங்கள் 1-5-8-ஆயின் உத்தமம். 3-7-11 ஆயின் மத்திபம். மற்றவை அதமமெனக் கொள்ளவேண்டு மென்பதாம்.

இதுவுமது

வீட்டுள் 2-4-6-3-10-12-14-16 இவ்வித அங்கணங்களாயிருப்பது அதமம். அன்றியும் வீட்டின் மேற்சாயை நாலுபக்கமும் சம உயரமாயும் தாழ்வாரம் நாலும் சம அகலமாகவும் இருப்பது நலமென்பதாம்.

வீட்டினுள் அறைகளிருக்கவேண்டிய விதி

வீட்டினுள்ளே அறைகள் தெரு நடையுஞ் சேர்த்து 5-7-9-11 இக் கணக்குகளுக் கொத்திருக்கின் நலமாம். 1-2-3-4-6-8-10-12-13-14-15-16 இச் சங்கியையுடைய அறைகள் ஆகா வென்பதாம்.

இதுவுமது

மனைக்கு தூலங்களாயினும் அல்லது கழிகளாயினும் மேற்கூறை வேத்தித் தாழ்வார மாத்திரம் தளம்போடுவதாயின் தீமையுண்டாம். மற்றும் வீட்டின் நடுவிலிருக்கின்ற முத்தம் அல்லது வாயலை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு இவ்வீரளவும் அளந்து குழியாக்கி அச்சநங்கியை எட்டிலே பங்கிட சேடம் எட்டுக்குள் 1-2-மிருமாயின் சர்வதோஷம் நிவாரணம். மற்ற சங்கியைகள் தீமையை யுண்டாக்கும். மற்றும் வீட்டின் உட்புறத்தில் எங்காயினும் ஒற்றைதூலங்களிருக்குமாயின் மனக்கலக்க முண்டாகும். மேலும் வீட்டினுள் எதிரிக்கெதிராய் ஒன்றையொன்று பார்க்கும்படியாக இரட்டைக் கூடங்கள் அடைக்கப்படாது. அப்படியிருக்குமாயின் அவ்வில்லில் வாழ்பவர்களுக்கு தோஷங்கள் உண்டாகு மென்பதாம்.

வீட்டை ஈசான்யந் திருப்புவதும், வாயல்கள் நேராயிருக்க வேண்டியதும்

வீட்டை ஈசான்யந் திருப்பவேண்டுமெனின் ஓரங்குலத்துக்கு மேற்படாமல் திருப்புவது மங்களகாம். மற்றும் வீட்டின் கூடத்து மையமும் வாசலின் நடு மையமும் ஒத்திருக்குமாயின் நிராட்சேபமா யிருக்கும். மேலும் தெருவாயற்படிக்கு நேராகப் புறக்கடை வரையில் வாயல்கள் தடையில்லாமல் இருக்கின் யாதொரு குற்றமுமில்லை என்பதாம்.

வீட்டினுள் இத்தனை கட்டுகளிருக்க வேண்டுமென்பது

ஓர் வீட்டில் அடுக்கடுக்காய் மூன்று தொட்டி கட்டுகளமைக்கப்படாது. அப்படி யிருக்குமாயின் அம்மனையில் வாழ்கின்ற உயிர்களுக்குச் சேதம் உண்டாம் என்பது நிச்சயம். ஆனால் முதற்கட்டுக் கடுத்தாப்போல் இரண்டாவது கட்டு ஒன்று மாத்திரம் அமைத்துக்கொள்வது நன்மை. ஆயினும் அவ் விரண்டாங்கட்டுக்கு ஆயம் வேறேயன்றியில் முதற்கட்டின் ஆயத்தில் சேரமாட்டா தென்பதாம்.

ஆத்தொழுவம், மேல்மாடம், மேற்படிமாடம், ஏறுகிறபடி, ஜலதாரை இவைகள் அமைக்கவேண்டிய விதி.

பசுத்தொழுவம் வீட்டில் அமைக்க வேண்டுமெனின், அவ்வீட்டின் கட்டடத்துக்கு சம்பந்தப்படாமல் புறம்பாய் அமைக்க வேண்டும். மற்றும் வீடுகளில் மேல்மாளிகை கட்டவேண்டு மெனின், வடபுறத்திலும் கீழ்ப்புறத்திலும் கட்டுவதே நியமமென்றும், அப்படிக் கட்டினுல் சுகமுண்டாமென்றும், இது நீங்கலாக மற்ற மேற்கு தெற்காகிய இவ் விரண்டு திசைக்குள் மேற்புறத்தில் கட்டுவது மத்திபமென்றும், தென்புறத்தில் கட்டினுல் தீங்கைத் தருமென்றும், மற்றும் அம்மேல் மாடங்களேறுவதற்குப் படிகள் வடக்கு அல்லது கிழக்கு இத் திக்குகளை நோக்கி யேறுவது உத்தமமென்றும், மற்ற திசைகள் அதமமென்றும், மற்றும் வீட்டின் ஜலம் போகின்ற தாரை வடக்கு கிழக்கு ஈசான்யம் இத் திசைகளிற் செல்லவிடுவது உத்தமமென்றும், மேற்கு தெற்கு நிருதிமூலை வாயுமூலை மத்திபமென்றும், ஆக்கினேய மூலை மிகக் கொடியதென்றும், முன்னோர்கள் உரைத்திருக்கின்றன ரென்பதாம்.

வீட்டின் சுவர் அளவு விதி

வீடுகளுக்குப் பட்டரைமட்டம் 9-அடி உயரத்திற்குக் குறைவில்லாமல் வைக்கவேண்டும். மற்றும் தாய்ச்சுவர் முதல் உட்புறம் அமையுஞ் சுவர்கள் யாவும் ஒன்றரை அடி அகலத்துக்குக் குறைவில்லாமல் இருந்து ஆயப்பொருத்தங் கள் யாவும் பொருந்திய வீடுகளில் அஷ்ட லட்சுமிகளும் வந்து பொருந்துவ ரென்பதாம்.

வீட்டினுள் கூடம் தாழ்வரங்கள் இவைகளுக்கு அகலமும் நீட்சியும் அமைக்க வேண்டிய விதி

வீடுகளுக்கு தாழ்வாரம் 5½-அடிக்குக் குறையாமல் மேற்பட்டே அமைக்கவேண்டும். மற்றும், வீட்டின் அடி மட்டத்திற்குப் புறக்கடை தாழ்ந்திருக்க வேண்டும். அன்றி யும், தூலம் வைத்து கட்டும்படியான வீடுகளுக்கு உள் அக லம் அடி எட்டும், அங்குலம் ஒன்றும், அல்லது இரண்டா யினு மிருக்கின் நன்மை. மற்றும் வீடுகளில் அமையும் கூடங்களுக்கு அடி 12-16-22-29 இக் கணக்குகளுக்கொத்த நீட்சி அமையச் செய்வது உத்தமமா மென்பதாம்.

வாசல் வாஸ்து நிதானம்

வீட்டைச் சேர்ந்த வாசல் அல்லது முத்தமானது கிழக்கு மேற்களவுக்கு வடக்குத் தெற்களவு குறைந்திருக் கின் சூரிய வாஸ்துவென்றும், கிழக்கு மேற்களவுக்கு வடக் குத் தெற்கு நீண்டிருக்கின் சந்திர வாஸ்துவென்றும், இவ் விரண்டுள் சூரிய வாஸ்து முத்தம் நலமும், சந்திர வாஸ்து முத்தம் தீமையுந் தரும். ஆகையால் கிழக்கு மேற்கு சற் றேனும் நீண்டிருக்கச் செய்தால் பாக்கியத்தை யுண்டாக்கு மென்பதாம்.

கூபவிதியும் பசுக்களைக்கட்டும் விதியும்

வீடுகளுள் வருணபாகத்திற்றேனே கிணறுகள் அமைய வேண்டியது. பொது விதியாயினும், வடக்குமுகம் கிழக்கு முகமா யிருக்கிற வீட்டில் நிருதிமூலையிலும், தெற்கு முகம் மேற்குமுகமான வீட்டில் ஈசானியத்திலும் இருப்பது ஒரு பட்சம். மற்றும் வாயுவுமூலையிலும் தெற்கிலும் கிணறுக ளிருப்பது மத்திமபட்சம். எந்தமுகமா யிருக்கின்ற வீடுகளி லேயும், அக்கினிமூலையிலிருப்பது அதமம். அதனல் கொடிய தீங்குண்டாம். மற்றும் காட்டுக்குப்போய் மேய்த்துவருகின்ற

பசு, எருது முதலியவைகளைத் தொழுவத்தில் மேற்காயினும் அல்லது வடக்காயினும் பார்க்க கட்டவேண்டு மென்பதாம்.

மனையின்மேல் தாக்கக்கூடாத சாயைகளும், மற்றும் உண்டாகும் ஆலய நோக்குகளின் பலனும்

வீடுகளின்மீது ஆலயங்களினது சிகரம் அல்லது ஸ்தூபியின் நிழல் தாக்குமாயின், அவ்வில்லம் க்ஷீணகதியை யடையும். அன்றியும், விஷ்ணு ஆலயங்களுக்குப்பின்னும் சிவன் விக்கினேஸ்வரர் இவ்வாலயங்களுக்கு முன்னும் இருக்கின்ற வீடுகளும் க்ஷீணகதியை அடையு மென்பதாம்.

கோயில் கோபுரம், கூடம் மனை அளவு முழக்கோல்

பூமி-மலை-மனை-சாலை-மாளிகை இவைகளை கிஷ்க்குவின் விரலாளப்பது. கோபுரகூடம் இவைகளை அறுவிரல் முழத்தா ளளப்பது. இதில் பனிரண்டு விரலுக்கு விதஸ்ததியென்று பெயராம். இதிலிரட்டி இருபத்து நால்விரல் கொண்டது கிஷ்க்கு வென்பதாம்.

நட்சத்திர பலன்

அசுவனி-மிருகசிரம்-உரோகணி-பூசம்-அஸ்தம்-உத்திராடம்-திருவோணம்-அவிட்டம்-சதையம் இந்த 11-ம் உத்தமம்.

திருவாதிரை-புனர்பூசம்-உத்திரம்கேட்டை-உத்திரட்டாதி-ரேவதி இந்த 6-ம் மத்திபம்.

பரணி-கார்த்திகை-ஆயிலியம்-மகம்-பூரம்-பூரட்டாதி-சுவாதி-பூராடம்-விசாகம்-மூலம் இந்த 10-ம் அதமம்.

நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் அமிசையறிய

அசுவனிக்கு	அரிஷணம்
ரோகணிக்கு	பிரீதி
புனர்பூசத்துக்கு	வியதிபாதம்
மகத்துக்கு	சோபனம்
அஸ்தத்திற்கு	சிவம்
விசாகத்துக்கு	திருதி
மூலத்திற்கு	சுபம்

திருவோணத்திற்கு	விருத்தி
பூரட்டாதிக்கு	மாகேந்திரம்

இந்த 9-நட்சத்திர யோகத்துக்கும் தனம்-4.

பரணிக்கு	விஷ்கம்பம்
மிருகசீரிடத்துக்கு	சித்தி
பூரத்துக்கு	சௌபாக்கியம்
பூசத்துக்கு	பரீகம்
சித்திரைக்கு	சுகர்மம்
அனுஷத்துக்கு	சாத்தியம்
பூரட்டாதிக்கு	கண்டம்
அவிட்டத்துக்கு	சுப்பிரமம்
உத்திரட்டாதிக்கு	வியாக்காதம்

இந்த 9-நட்சத்திர யோகத்துக்கும் தனம்-3.

கார்த்திகைக்கு	வச்சிரம்
திருவாதிரைக்கு	ஆயுஷ்மான
ஆயிலியத்திற்கு	வரீயான்
உத்திரத்திற்கு	அதிகண்டம்
சுவாதிக்கு	சித்தம்
கேட்டைக்கு	சூலம்
உத்திராடத்துக்கு	பிராமியம்
சதயத்திற்கு	துருவம்
ரேவதிக்கு	வைதிருதி

இந்த 9-நட்சத்திர யோகத்துக்கும் தனம்-12.

நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் தாரபலன்

அசுவனிக்கு	பேசிதாரம்
ரோகணிக்கு	சரிதாரம்
புனர்பூசத்துக்கு	பேசிதாரம்
மகத்துக்கு	சரிதாரம்
அஸ்தத்துக்கு	பேசிதாரம்
விசாகத்துக்கு	சரிதாரம்
மூலத்துக்கு	பேசிதாரம்
திருவோணத்துக்கு	சரிதாரம்
பூரட்டாதிக்கு	பேசிதாரம்
பரணிக்கு	சரிதாரம்
மிருகசீரிடத்திற்கு	பேசிதாரம்
பூசத்துக்கு	சரிதாரம்
பூரத்துக்கு	பேசிதாரம்
சித்திரைக்கு	சரிதாரம்
அனுஷத்துக்கு	பேசிதாரம்

பூராடத்துக்கு	சரிதாரம்
அவிட்டத்திற்கு	பேசிதாரம்
உத்திரட்டாதிக்கு	சரிதாரம்
கார்த்திகைக்கு	பேசிதாரம்
திருவாதிரைக்கு	சரிதாரம்
ஆயிலியத்திற்கு	பேசிதாரம்
உத்திரத்திற்கு	சரிதாரம்
சுவாதிக்கு	பேசிதாரம்
கேட்டைக்கு	சரிதாரம்
உத்திராடத்துக்கு	பேசிதாரம்
சதயத்திற்கு	சரிதாரம்
ரேவதிக்கு	பேசிதாரம்

இந்தப்படி பரணிமுதல் 9-நட்சத்திரமும் இதில் சொன்னபடி யெண்ணிக்கொண்டு யோகத்தை அறியவும்.

ஜென்ம நட்சத்திரம் பார்க்கும் நிலை

ஜென்மநட்சத்திரம் முதல் கண்டசி நட்சத்திரம் வரைக்கும் எண்ணின தொகையை நாலிற்பெருக்கி திதிவாரங்கூடி நவக்கிரகத்தில் கிழக்கே நின்றது ஆதித்தன். சோமன் லாபயோகன் அங்காரகன். மிருத்திவு புதன் பிரகஸ்பதி லாபம். சுக்கிரன் சவுக்கியம். சனி மகாபாண்டம். ராகு காதாபாதம் கேது மகதயன் இது நித்தியபலன்.

இலக்கினத்தில் குருவிருக்கினும் சுக்கிரனிருக்கினும் அப்போது வீடுகட்டினால் ஐந்நூறுவருடம் சுகமா யிருப்பார்கள். லக்கினத்தில் புதனிருந்தால், ஐம்பது வருடம் சுகமாய் வாழ்ந்திருப்பார்கள். லக்கினத்தில் புதனும் சுக்கிரனும் குருவும் இருந்தால், ஐம்பது வருடம் ஸ்தம்பபிரதிஷ்டை. லக்கினத்தில் குருவும், நாலில் சந்திரனும் செவ்வாயும் சனியும் 11-ல் இருக்க நாற்பது வருடம் சுகமாக விருக்கும். லக்கினத்தில் சுக்கிரனிருக்க, நூறு வருடம் சுகமாக விருக்கும். சிங்கம் கன்னி துலாம் இந்த மூன்று இராசியிலும் சூரியனிருக்க, ஈசான்யத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்ய வேணும். கும்பம் மேஷம் இவ்விரண்டு ராசியிலும் சூரியனிருக்க, நிருதிமூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்ய வேணும். ரிஷபம் கடகம் மிதுனம் இந்த மூன்று ராசியில் சூரியனிருக்க அக்கினிமூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்ய வேணும். இப்படி பார்த்துச் செய்யாமல் அன்னியமாகச் செய்தால் தரித்திரமும் துக்கமும் வரும். புருஷனுக்கு ஹானியாம்.

இராசி விழிப்புராசி

மேஷம்-ரிஷபம்-மிதுனம்-கர்க்கடகம் - தனுசு - மகரம்-இந்த 6-ராசியும் விழிப்புள்ள ராசியாம்.

இலக்கின சுபக்கிரக குரூர நிர்ணயம்

நாலாமிராசி பத்தாமிராசி ஏழாமிராசி ஒன்பதாமிராசி ஐந்தாமிராசி இவைகளில் சுபக்கிரகமிருந்தாலும், ஷெ கிரக மிலக்கினத்தைப் பார்த்தாலும், ஷெ கிரகம் உச்சத்திலிருந்தாலும், பாபக்கிரகம் ஆறுமிராசி மூன்றுமிராசி பதினோராமிராசியிலிருக்க ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யில் சுபகாரமுண்டாம்.

மாதங்களில் காலசர்ப்பகெதி லட்சணம்

காலசர்ப்பகெதி ரிஷபம்-மிதுனம்-கடகம் இந்த மூன்று சங்கராந்தியிலும் காலசர்ப்பம் ஈசான்யத்தில் சிரசும், வாயு மூலையில் இடுப்பும், நிருதிமூலையில் வாலும், இதன் பின் பக்கத்திலும், சிம்பம்-கன்னி-துலாம்-இந்த மூன்று சங்கராந்தியிலும் வாயுமூலையில் சிரசும், நிருதிமூலையில் இடுப்பும், அக்கினிமூலையில் வாலும், இதன் பக்கமாகவும் விருச்சிகம்-தனுசு-மகரம்-இந்த மூன்று சங்கராந்தியிலும், அக்கினி மூலையில் சிரசும், ஈசானியமூலையில் இடுப்பும், வாயுமூலையில் வாலும், இவ்விதமாக இருக்கும் இடுப்புப்பக்கம் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யிற் சுகமுண்டாம். வாயின்மேற் செய்யில் மிருத்துபயம். முதுகின்மேற் செய்யில் கெடுதியுண்டாம். வாயின்மேற் செய்யில் சலனம். இப்படிக்கில்லா விடத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யில் சம்பத்துண்டாம்.

சூசிகா சங்கராந்தி நிர்ணயம்

ரிஷபம்-கடகம்-மிதுனம் இந்த சங்கராந்தியில் சூரியனிருக்க, கன்னி-கும்பம்-துலாம் இதில் சம்பந்தமானாலும், உத்திரம்-அஸ்தம்-சித்திரை இந்த மூன்று நட்சத்திரத்திலும் சந்திரனிருக்க, அக்கினி மூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாம். கும்பம்-மீனம்-மேஷம் இந்த சங்கராந்தியில் சூரியனிருக்க, ரிஷபம்-மிதுனம்-கடகம் இது சம்பந்தமானாலும், உரோகணி-மிருகசீரிடம்-புனர்பூசம் இந்த மூன்று நட்சத்திரத்திலும் சந்திரனிருக்க நிருதிமூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாம். சுபப்பிரகம் அன்னிய மார்க்கத்தில் செய்தால் கேடுவரும்.

ஜென்மகேந்திர கிரகபலன்

பிரகஸ்பதியிருக்கும் லக்கினத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை பண்ணி புதனிருக்கின்ற லக்கினத்தில் தூலமேத்தி சுக்கிரனி

ருக்கின்ற லக்கினத்தில் ஓடுமுடினுல் அந்த வீட்டுக்கு அக்கினி பயம், சோரபயம், இராஜ பயமு மில்லை. சலராசியில் சந்திரனிருக்கினும், 5-9-ல் சந்திரனிருந்தாலும் சுக்கிர வாரத்தில் வீடு கட்டிமுல் சம்பத்துண்டாம்.

மனைகளின் இராஜயோகம்

குருவாரத்தில் கடகம், மீனம், தனுசு இந்த லக்கினத்தில் பிரகஸ்பதியானுலும் சுக்கிரனுனு மிருக்க, வீடு கட்டினுல் அந்த வீட்டில் சௌக்கியமாய் ராஜாதிபதியாய் புத்திர சம்பத்துண்டாகி சுகமே யிருப்பார்கள். சுபக்கிரகம் 10-ல் இருந்தாலும் லக்கினத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், அப்படிப்பட்ட வேளையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்தால் சுபப்பிரகமாகும். மீன லக்கினத்தில் சுக்கிரனிருக்கவானுலும், 4-ல் பிரகஸ்பதி யிருக்கவானுலும், 10-2-ல் உச்சஸ்த்தானமா யிருந்த சனி 11-ல் இருந்தாலும் அப்படிப்பட்ட லக்கினத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்தால் சுகமுண்டாம்.

நிலநீளம் வைக்கும் விதி

ஒன்றுன நிலம் ஒரு விரமொத்தி தள்ளிவைப்பது யாதொரு நீளத்தையும் 8-பங்கு செய்து 7-உட்கூடு ஒன்றை 9-செய்து மேல் 5-கீழ் 4-தளமட்டம் வைப்பது நீளநிலத்தை 9-செய்து உட்கூடு 2-9-செய்து மேல்-5 கீழ்-4 வேறு நீல நீளத்தை 7-செய்து 6-உட்கூடு 1-9-செய்து மேல்-5 கீழ்-4 நிற்பதங்கள் பற்றி வைக்கவேண்டுமென்பதே உட்கூடு விரல் முறியாமல் வைப்பது உட்கோட்டிற் பாதிபோம் விரலொற்றிக் கொள்வது.

பங்குனி முதல் மூன்று மாதம் வடக்குமுக வாசலும், ஆனிமுதல் மூன்று மாதம் கிழக்குமுக வாசலும், புரட்டாசி முதல் மூன்றுமாதம் தெற்குமுக வாசலும் உத்தமம்.

மார்கழி, தை, மாசி இந்த மூன்று மாதமும் மேற்கே தலையானபடியால் மேற்கே வாசல்விடவும்.

அருக்கனிலை யறிய

சனிக்கிழமை ராத்திரி 30-நாழிகையும், ஞாயிற்றுக்கிழமை பகல் 30-நாழிகையும், தெற்கிலும் ஞாயிற்றுக்கிழமை ராத்தி 30-ம், திங்கட்கிழமை 10-ம், தென்மேற்கிலும் செவ்வாய்க்கிழமை பகல் 30-ம், இராத்திரியில் 10-மேற்கிலும் மற்ற 20-ம், புதன்கிழமை பகல் 30-ம், வடமேற்கிலும் புதன்கிழமை இராத்திரி 30-ம், திங்கட்கிழமை பகல் 30-ம்,

இராத்திரியில் 40-ம், வடக்கிலும் மற்ற 20-ம், வெள்ளிக் கிழமை 60-ம், வடகிழக்கிலும் சனிக்கிழமை பகல் 30-ம், கிழக்கிலும் அருக்கனிருக்கும் அக்கினிமூலை பாழாம்.

திசையோனி நிலை

கருடன்	கிழக்கு	பூனை	தென்கிழக்கு
சிங்கம்	தெற்கு	நாய்	தென்மேற்கு
பாம்பு	மேற்கு	எலி	வடமேற்கு
யானை	வடக்கு	முசல்	வடகிழக்கு

அருக்கனில் கருடனை வைத்து முறையே பார்க்கும் போது எதிர்க்கெதிர் பகையோனி நிற்கும். அவைகளுள் கருடன் திசையிலிருந்து பாம்புத் திசைக்குப் போகலாம். பாம்புத்திசையி லிருந்து கருடன் திசைக்குப் போகலாகாது. ஏனெனில், கருடன் இரையெடுக்கப் போகும். பாம்பு இரை யாக வரும் ஆதலாலென்க. ஒருவன் யாத்திரைக்குப் பட்சி முதலிய சகுனங்கள் பார்க்கும்போது இரையாகும். யோனித் திசையிலிருந்து இரையெடுக்கும் யோனித்திசைக்கு அவை போகலாகாது.

விஷ்டி தோஷம்

பூர்வபட்ச சதுர்த்தசியில் ஐந்து சாமம் மேற்கிலேயும், அஷ்டமியில் இரண்டுசாமம் தென்கிழக்கிலேயும், ஏகாதசி யில் ஏழுசாமம் வடக்கிலேயும், பூரணையில் நாலுசாமம் தென் மேற்கிலேயும், அமரபட்சத் திரிதிகையில் ஆறுமாசம் வட மேற்கிலேயும், சத்தமியில் மூன்றுசாமம் தெற்கிலேயும், தசமியில் எட்டுசாமம் வடகிழக்கிலேயும், சதுர்த்தசியில் முதல்சாமம் கிழக்கிலேயும் விஷ்டியுண்ணுதலால், இச் சாமங் களினுல் சுப காரியங்களும், இத்திசையில் யாத்திரையுஞ் செய்யலாகாது.

வீடுகளுக்கு தெருவாசற்கால் வைக்கும் இலக்கணம்

ஆவணி மாதம் கட்டும் வீட்டுக்கு கிழக்கு பார்த்த வாசற்படி வைக்கலாம்.

கார்த்திகை மாதம் கட்டும் வீட்டுக்கு தெற்கு பார்த்த வாசற்படி வைக்கலாம்.

மாசி மாதம் கட்டும் வீட்டுக்கு மேற்கு பார்த்த வாசற் படி வைக்கலாம்.

வைகாசி மாதம் கட்டும் வீட்டுக்கு வடக்கு பார்த்த வாசற்படி வைக்கலாம்.

எந்த மாதங்களில் வாசக்கால் வைத்தாலும் திசையறிந்து வைக்கவேண்டும்

மேஷம் ரிஷபம் இவ்விரண்டு ராசிகளில் வீடுகட்டில் வடக்குபார்த்த வாசற்படி வைக்கவும்.

கடகம் சிங்கம் இந்த இரண்டு ராசியில் சூரியனிற்க வீடு கட்டினுல் கிழக்கு பார்த்த வாசற்படி வைக்கலாம்.

துலாம் விருச்சிகம் இவ்விரண்டு ராசியிலும் சூரியனிருக்க வீடுகட்டினுல் தெற்குப்பார்த்த வாசற்படி வைக்கலாம்.

மகரம் கும்பம் இவ்விரண்டு ராசியிலும் சூரியனிருக்க வீடுகட்டினுல் மேற்குப்பார்த்த வாசற்படி வைக்கலாம்.

கன்னி மிதுனம் தனுசு மீனம் இந்த ராசிகளில் சூரியனிருக்க வீடுகட்டினுல் வாசக்கால் வைக்கலாகாது.

மேஷ சிங்க தனுராசியில் ஜனித்தோர்க்கு வடக்கு முகமானவீடும், ரிஷபகன்னி மகாராசியார்க்கு தெற்குமுகவீடும் மிதுன துலா கும்பவிராசிக்காரருக்கு மேற்குமுகவீடும், கடக விருச்சிகமீன விராசிக்காரருக்கு கிழக்குமுகவீடு கட்டிடங்களில் வசிக்கில் ஐசுவரியம், இராஜயோகம், புத்திரர் குடும்ப விருத்தியும், ரோயற்ற வாழ்வுமுண்டாம். அல்லது மாறியிருக்கில் கடனும் பலரோக வாதையும் உண்டாகும்.

திசையறிந்து வாசற்கால் வைக்கும் விதி

கிழக்குப்பார்த்த வாசற்படியுள்ள வீட்டுக்கு ஈசான்ய முதல் அக்கினிவரைக்கும் அளந்து அதை 8-பாகம் பண்ணினுல்,

முதற்பாகம்-ஹானி, இரண்டாம்பாகம்-சோகம், மூன்ரும்பாகம்-தன்ப்பிராப்தி, நாலாம்பாகம்-இராஜஸன்மானம், ஐந்தாம்பாகம்-புத்திரவிருத்தி, ஆரும்பாகம்-சுகம், ஏழாம் பாகம்-துக்கம், எட்டாம்பாகம்-ரோகம்.

மேற்குப்பார்த்த வாசற்படிக்கு நிருதி மூலைமுதல் வாயு மூலைவரைக்கும் அளந்து 8-பாகம் பண்ணினுல்,

முதற்பாகம்-ஹானி, இரண்டாம்பாகம்-சத்துருவிருத்தி, மூன்ரும்பாகம்-சுகம், நாலாம்பாகம்-தனம், ஐந்தாம்பாகம்-பாக்கியம், ஆரும்பாகம்-சுகம், ஏழாம்பாகம்-பயம், எட்டாம் பாகம்-நாசம்.

வடக்குப்பார்த்த வாசற்படிக்கு வாயுமூலைமுதல் ஈசான்னிய மூலைவரைக்கும் அளந்து 8-பாகம் செய்தால்,

முதற்பாகம் - மனைபாள்நாசம், இரண்டாம்பாகம் - பலயீனம், மூன்ரும்பாகம்-தனஹானி, நாலாம்பாகம்-தானிய

விருத்தி, ஐந்தாம்பாகம்-தனம், ஆறும்பாகம்-சௌபாக்கியம், ஏழாம்பாகம்-துக்கம், எட்டாம்பாகம்-பாதசுரம்.

தெற்குப்பார்த்த வாசற்படிக்கு அக்கினி மூலைமுதல் நிருதி மூலைவரையில் எட்டாம்பாகம் பண்ணினால்,

முதற்பாகம் - தனஹானி, இரண்டாம்பாகம் - சத்துரு விருத்தி, மூன்றும்பாகம்-சுகம், நாலாம்பாகம்-தனவரவு, ஐந்தாம்பாகம்-பாக்கியமுண்டாம், ஆறும்பாகம்-நன்மையுண்டாம், ஏழாம்பாகம்-பயம், எட்டாம்பாகம்-நாசமாம்.

இந்தப் பாகங்களில் இயற்கை தெரிந்து நல்ல பாகத்தைப் பார்த்து வாசற்கால் வைக்கவேண்டியது.

நவக்கிரக பலன்களறிந்து வாசற்கால் வைக்கும் நிர்ணயம்

கிழக்குப்பார்த்த வாசற்படிக்கு ஈசானியமுதல் அக்கினி மூலை வரைக்கும் அடியளந்து 9-ம் பாகம் பண்ணவும்.

தெற்குப்பார்த்த வாசற்படிக்கு அக்கினிமூலை முதல் நிருதிமூலைவரைக்கும் அடியளந்து 9-ம் பாகம் பண்ணவும்.

மேற்குப்பார்த்த வாசற்படிக்கு நிருதி மூலைமுதல் வாயு மூலைவரைக்கும் அளந்து 9-பாகம் பண்ணவும்.

வடக்குப்பார்த்த வாசற்படிக்கு வாயுமூலைமுதல் ஈசான்னிய மூலைவரைக்கும் 9-பாகம் பண்ணவும்.

இந்நான்கு திக்கும் முதற்பாகம்-சூரியன், இரண்டாம் பாகம்-சந்திரன், மூன்றும்பாகம்-அங்காரகன், நான்காம் பாகம்-புதன், ஐந்தாம்பாகம்-குரு, ஆறும்பாகம்-சுக்கிரன், ஏழாம்பாகம்-சனி, எட்டாம்பாகம்-ராகு, ஒன்பதாம்பாகம்-கேது இந்த நவக்கிரகத்தில் பிரகஸ்பதி யிருக்கிற பாகத்தில் பிரதானமாக கோயிலுக்கு வாசற்கால் வைக்கலாம்.

சுக்கிரன் பாகத்தில் வீட்டிற்கு வாசற்கால் வைக்கலாம். அதன்பாகத்தின் மாட்டுத் தொழுவத்திற்கும் வாசற்கால் வைக்கலாம்.

மேலும் புதன் குரு சுக்கிரன் இவைகளில் கோயிலுக்கும் வீட்டிற்கும் மாட்டுத் தொழுவத்திற்கும் வாசற்கால் வைக்கலாம்.

வாசற்காலுக்கு இடதுபக்கத்திற் கதவுவைக்கவேண்டும்.

இப்பால் ஏழுசாண் நீளமும் 3-சாண் அகலமுமுள்ள வாசற்கால் உத்தமம்.

ஒன்பதுசாண் நீளமும் ஐந்துசாண் அகலமுமுள்ள வாசற்கால் உத்தமம்.

இரண்டு மரத்தினால் வாசற் பண்ணலாகாது. 3-வித மரத்தினால் கட்டில் செய்யலாகாது.

கதவுக்கு ஒற்றைப்படை பலகை சேர்த்துச் செய்ய வேண்டும். இரட்டைப்பலகை சேர்த்துப் பண்ணலாகாது.

மூலக்கூத் தாகாதென்றறிய

வீட்டில் நுழையும்போது வீட்டு வாசற்படிக்கு எதிரில் கட்டைச் சுவறிருந்தால் சத்துரு பயமாம்.

தெருவாசற்படி யுயர்ந்து உடல் வாசற்படி தாழ்ந்திருக்கக்கூடாது. அப்படியிருக்கில் வரும்பலன் நீங்கிவிடும்.

வாஸ்துவிழி நோக்கில் இருபத்தெட்டு பங்கில் முகூர்த்தம்

வாஸ்துவின் விழிநோக்கரிந்து முகூர்த்தம் செய்வதாகையால், அந்த மனையை இருபத்தெட்டுப் பாகஞ்செய்து காலில் பதினேழு பாகந்தள்ளி தலையிற் பத்து பாகந்தள்ளி நடுவில் ஒரு பாகத்தில் முகூர்த்தஞ் செய்தால் இராஜ சம்பத்துண்டு.

வாஸ்துவின் அதிகார லட்சணமாவது நாழிகை மூன்றே முக்காலுக்குச் சமயம் ஐந்து.

முதற் சமயங்கடிகை முக்காலுக்குள் தந்தசுத்தி செய்வான். அதில் முகூர்த்தஞ்செய்தால் அரசாற் பயமுண்டாம்.

வாஸ்து இரண்டாஞ் சமயமானதிற் கடிசை முக்காலுக்குள் ஸ்நானஞ் செய்வான். அதில் முகூர்த்தஞ் செய்தால் பீடை யுண்டாகும்.

மூன்றாஞ் சமயக்கடிகை முக்காலுக்குள்ளே பூசைசெய்வான். அதில் முகூர்த்தஞ் செய்தால் வருமையால் வாடுவார்கள்.

நாலாஞ்சமய மானகடிகை முக்காலுக்குள் போஜனம் செய்வார். அதில் முகூர்த்தஞ் செய்தால் புத்திர சந்தானமுண்டாகும்.

ஐந்தாஞ் சமயமான கடிகை முக்காலுக்குள் தாம்பூலங் கொள்வான். அதில் முகூர்த்தஞ் செய்தால் மகா உத்தமம்.

கிரக பலன்

வியாழம் வெள்ளிவாரமும் லக்கினம்நாலு ஏழிற்சுபர் ஆறிலும் மூன்றிலும் பாவ ரிருக்க கோபுரம், சாலைவீடு, மாளிகை இவைகள்கட்டில் நூறு வயது பெற்று விளங்கும்.

ஜென்மலக்கினத்திற்கு † நாலுபக்கத்தில் சந்திரன் நிற்க பதினொன்றில் இராசி, செவ்வாய், சனி இவர்களிருக்கில், மனைமுகூர்த்தஞ் செய்தால் வயது நூறு வருஷம் விளங்கும். லக்கினத்தில் குருவும் சுக்கிரனு மிருந்தும் மூன்றில் சூரிய

† நாலு பக்கமாவது 1-4-7-10 ஆமிடமாம்.

னிருக்க ஆறில் செவ்வாயிருக்க, முகூர்த்தஞ்செய்யி லந்த மனை நூறு வருஷம் விருத்தியாய் விளங்கும்.

லக்கினத்தில் சந்திரன்நிற்க, 4-ல் புதனிருக்க குரு உச்சமாக முகூர்த்தஞ் செய்யில் அந்த மனைக்கு அறுநூறு வயதாகும். இலக்கினத்தில் பத்தில் சுக்கிரனிருக்க 3-ல் புதனிருக்க, பாவரஸ்தமான மகா ரஸ்தமான மகா முகூர்த்தஞ் செய்யில் அந்த மனைக்கு அறுநூறு வயது விளங்கும்.

குரு சுக்ஷேத்திரத்திலிருக்க வெள்ளி வீட்டில் புதனிருக்க, முகூர்த்தஞ் செய்யில் எண்ணூறு வயதிருக்கும். சூரியன் அஸ்தமான காலத்தில் சந்திரனிருக்க, ஆலய முகூர்த்தஞ் செய்யில் ஆயிரம் வருஷம் விளங்கும்.

சுக்கிரனுதையமாக ஏழில் இராஜனிருக்க, பத்தில் சந்திரனிருக்க, முகூர்த்தஞ் செய்யில் ஆயிரம் வருஷம் விளங்கும். இலக்கினத்திற் சுக்கிரனிருக்க குரு சுக்ஷேத்திரத்தில் இருக்க, முகூர்த்தஞ் செய்யில் அக்கினி பயமில்லை.

கடகம்-மகரம்-மீனம் இவைகளிற் சந்திரனிருக்க வைக்கோல் போட்டால் ஜெயமாகும். பூராடம்-திருவோணம்-ரோகணி - உத்திராடம் - உத்திரட்டாதி - ஆயிலியம் - மிருகசீரிடம் இவைகளில் குருவிருக்க குருவாரத்திற் செய்ய மகிழ்ச்சியுண்டு.

சலவிராசியில் சுக்கிரனிருக்க, சுக்கிரவாரமாயிருந்தால் செல்வமுண்டு. சலவிராசியில் சந்திரனிருக்க சோமவாரமாகில் மனையாள் கெர்ப்பமாயினும் முகூர்த்தஞ் செய்யினும் குடிபுகினும் மத்திபமென்று மயனென்பவர் சொல்லிய வாக்கியமாகும். கிழக்கு-இந்திரன், தென்கிழக்கு-அக்கினி, தெற்கு - இயமன், தென்மேற்கு - நிருதி, மேற்கு - வருணான், வடமேற்கு - வாயுவு, வடக்கு - குபேரன், வடகிழக்கு-ஈசானியன்.

இலக்கின பலன்

ரிஷபம்-சிங்கம்-விருச்சிகம்-கும்பம் இந்நான்கும் ஸ்திரலக்கின உத்தமம். மேஷம் - கடகம் - துலாம் - மகரம் இந்நான்கும் சரலக்கினம் மத்திபம். மிதுனம் - கன்னி-தனுசு-மீனம் இந்நான்கும் உபயராசியாகையால், வீடு கட்டக்கூடாது. ஆரம்ப லக்கினத்திலிருந்து முடிவி லக்கினத்துக்கு சத்துரு க்ஷேத்திரமான லக்கினேசுரன் சத்துரு க்ஷேத்திரத்திலிருந்தாலும் ஆரம்ப லக்கினத்திற்குப் பத்தாமிடத்தி லிருந்தாலும் அப்படிப்பட்ட வேளையில் வீடு கட்டினுல் பராதீனமாய்ப்போகும்.

மகரம்-மிதுனம்-சிங்கம்-ரிஷபம் இந்தராசி யுடையோர் கிராம மத்தியில் வீடு கட்டலாகாது.

கத்திரிக்கோல் போலும் 3-மூலைபோலும் நேத்திரம் போலும் தலைபோலும் மத்தளம்போலும் கொட்டைப்பாக்குப்போலும் உள்ளும் புறம்புமாக யிருக்கப்பட்ட பூமியிலும் உப்புநில கிராமத்திலும் அல்லது அதற்கு மூலையிலும் பள்ள நிலத்திலும் தண்ணீரோடுகிற நிலத்திலும் பலர் கூடாதென்று தடுக்கும் நிலத்திலும் கோயில் நிலத்திலும் புற்றிட்டிருந்த நிலத்திலும் சுடுகாட்டு நிலத்திலும் ஆடுமாடு கட்டப்பட்ட நிலத்திலும் கிழக்கு மேற்கு அகலங் குறைந்த நிலத்திலும் தண்ணீர் சமீபித்த நிலத்திலும் வீடு கட்டலாகாது. கட்டில் பலவித துன்ப முண்டாகும்.

பூமியைச் சோதித்து வீடுகட்டு நியமம்

வெளுத்த பூமி, தித்திப்பான பூமி, தாமரைப்பூ வாசனையுள்ள பூமி இவைகளில் பிராமணர் வீடுகட்ட உத்தமம்.

சிவந்த பூமி, துவர்ப்பு பூமி, குதிரை வாசனையுள்ள பூமி இவைகளில் அரசர்கள் வீடுகட்டினல் உத்தமம்.

கறுத்த பூமி, கசப்பு காரமுள்ள பூமி, தானிய வாசமுள்ள பூமி இவைகளில் சூத்திரர் வீடுகட்ட உத்தமம்.

பச்சை பூமி, புளி உப்பு பொருந்திய பூமி இவைகளில் சங்கம சாதிகள் வீடுகட்ட உத்தமம்.

நீங்காத மதுரமும், பரிமளம் பொருந்திய பூமியில் சகல சாதிகளும் வீடுகட்ட உத்தமம்.

க்ஷேத்திர ஆருடம்

இந்த திக்கில் வீடுகட்டினல் நல்லதாவென்று கேட்கும் போது அந்தத் திக்கி லிருப்பவர்க்கு எதுவோ அந்தக் கணக்கை வலது பக்கத்தில் வைத்து கர்த்தனுமாதி அட்சரவர்க்குக்கும் இதுவே அந்தக் கணக்கு இடப்பக்கத்தில் வைத்து அப்பெருக்குக் கொடுத்து மிகுந்தது தனம் முன் வலப்பாகத்தில் வந்திருந்த கணக்கை இடதுபாகத்தில் வைத்து எட்டுப்பெருக்குக் கொடுக்க மிகுந்தது ருணம்தனம் அதிகமாகவும் ருணம் குறைந்திருந்தால் நல்லது. ருணம் அதிகமாயிருந்து தனங்குறைவா யிருந்தால் நல்லதல்ல தனமும் ருணமும் சரியாயிருந்தால் ஆதாயமும் விரையமும் சமமா யிருக்கும்.

குழிகெல்லி ஜலம்விடும் சோதனை

வீடு கட்டும்படியான இடத்தில் ஈசான்ய பாகத்தில் நாற்சதுரமாகக் கெல்லி அக்குழியில் 3-சுமங்கலிகளால் ஜலம் கொண்டுவந்து விடும்போது அந்த ஜலம் வலமாக ஓடுமானல் பொருளும் செல்வமும் சேரும். இடமாக ஓடுமானல் மனக்

கிலேசம் மரணம் குமிழி கிளம்பினுலும், ஜலம் உள்ளே போனுலும் மனக்கிலேசமும், மனச்சந்தேகமும் உண்டாம்.

மனை முகூர்த்தகாலத்தில் குழியில் நீர்விட வேண்டிய விதி

மனை ஆரம்பக் குழியில் மூன்று சுமங்கலிகள் கலந்து ஓர் பாத்திரத்தில் ஜலம் கொண்டுபோய்ச் சொரிந்துவிட்டு உடனே அக்குழியை விட்டு நீங்கி திரும்பிப் பாராமல் வந்து விடவேண்டு மென்பதாம்.

மேற்படி குழியில் புட்பம்விடும் சோதனை

மனை ஆரம்ப காலத்தில் அகழ்த்துகின்ற சதுரக்குழியில் ஜலம் பெய்து அஜ்ஜலம் சுழலுகிறபோது புட்பமொன்றை அதில் இடுவதென்றும் அஃது சூரியனை வலமாகச் சுற்றி வந்தால் நன்மையென்றும் இடமாக வந்தால் தீமையென்றும் தெரிந்துகொள்ளச் சகுனம் பார்க்கவேண்டு மென்று சிலர் சொல்லுகிறதுண்டு. அது விதியல்ல; ஏனெனின், ஒருவர் தான் உத்தேசித்த சாலி நிவேசனமானது சகல நலங்களையும் பொருந்தி யிருப்பதை அறிந்தே மனப்பிரஸ்தத்துடன் அவ் வீடு கட்டுவதற்கு வேண்டிய சகல சாமான்களையுஞ் சித்தப் படுத்தியபோது திரும்பவுமற்று ஓர் சகுனம் பார்க்கவேண்டு மென்பது அடாத காரியம். அன்றியும் எடுத்த வேலையை நிர்விக்கினமாய்க் கூட்டி முடிக்கும் பொருட்டு முதலில் விக்கி னேஸ்வரரை உபாசித்து அப்பால் மனையின் அதிதேவதை யாகிய பூமிதேவியையும் உபாசித்து நடத்துகின்றவர்களுக்கு குறையொன்றும் வாராதென்கிற நிட்சயத்துடன் மேற்கூறிய இரண்டு தெய்வங்களையுந் தொழுது வேலையைத் துவக்க வேண்டு மென்பதாம்.

ஸமதிவட்டமான ஓர் பள்ளஞ்செய்து அதிற் பூவும் தண்ணீரும் விட்டு குறிபார்க்கும் விபரம்

இந்திரன் திக்கில் பரிமளம் பொருந்திய மலரானது நிற்குமாகில் அதிக சவுந்தரியம் பொருந்திய லட்சுமி விலாச முந் தனதானிய சம்பத்தும் சந்தான பாக்கியமுந் தீர்க்காயுசு முண்டாவதோடு பாற்பசு முதலிய கறவைகளுஞ் சேரும்.

அக்கினி திக்கில் வாசம் வீசுகின்ற புட்பமானது வந்து நிற்குமாகில் கற்புநிலைமை பொருந்திய பெண்சாதியானவள் மலடியாவாள். இதன்றி விஷத்தாலும் பாம்பினுலும் பயமும் அச்சமுமுண்டாகும். அக்கினி சுவாலையினுலும் கள்ளர் பயத் தினுலும் பொருள் விருத்தியில்லாமல் எஜமான் நாசமாவான்

இயமன்மூலை யென்னுந் தென்திக்கில் வாசம்வீசும் மலரானது வந்து நிற்குமாகில், மனதில் சிந்தனையும், வியாகூலமும் உண்டாவதோடு பலபோரால், கலகமும், தீங்காகிய காரியமும் தீமை பிணி அச்சம் முதலியவைகளும் அதிகரித்துண்டாகும்.

கன்னி மூலையில் அம்மலரானது வந்து நிற்குமாகில், பொருளும், அன்னமும், கனகமும், இலட்சுமிப் பிரகாசமும், நவதானியலாபமும், பிறவிச்செல்வமும் எந்நாளும் நீங்காமல் வற்றாச் சமுத்திரமாய் மென்மேலும் பெருகவுண்டாகும்.

வருணன்மூலையில் அழகும் வாசமும் பொருந்திய பூவானது வந்து நிற்குமாகில் நிறைசெல்வமாரும விருப்பதுமல்லாமல் நினைத்த காரியமும் ஆரம்பித்த தொழில்களும் கைகூடி ஜெயமாகும்.

வாயுமூலையில் விகசிதம் பொருந்திய மலர்வந்து நிற்குமாகில் பதினெண்காச மென்னும் க்ஷயரோகத்தில் மரணமும் சோரர்களினல் தனம் முதலிப் பொருட் சேதமுண்டாவதோடு அம்மனையானது அலகை வாழுஞ் சுடுகாடாகும். அன்றியும் சகலபாக்கியமும் அழிந்துபோம் சகோதரர்மனை வாழ்வோர்களி லிருவரேனும் சித்தப் பிரமையாவர்.

குபோன்திக்கில் வினோதம் பொருந்திய மலரானது வந்து நிற்குமாகில் தனதான்ய சம்பத்தும், புத்திரசந்தானமும், ஆயுள் விருத்தியும், பாக்கியமும், அதர்ம சிந்தைநீக்கி தர்ம சிந்தையோங்கி அபயமென்றவரைக் காத்துப் பொருளுதவி செய்துவரப்பட்ட மகாபுண்ணியவானுக்கவும் இருப்பான்.

ஈசான்யமூலையாகிய பரமசிவத்தின் திக்கில் பரிமளம் பொருந்திய மலரானது வந்து நிற்குமாகில் கனக ஐஸ்வரியமும் தீர்க்காயுளும், புத்திரசம்பத்தும், வாழ்வும் மேன்மேலும் விர்த்தியாய்ப் பெருகி நீடூழிகாலம் நிலைநிற்கும் இதன்றி பெரியோர்களுக்கும் தபோதனர்களுக்கும் அன்னபானுதி கொடுக்க வல்லவனு யிருப்பான்.

நிலை வைக்க

மனை அகலத்தை 9-பாகம் செய்து சந்திர பாகத்திலாவது, புதபாகத்திலாவது நிலை வைக்கவும்.

சூரியவாஸ்துவீதிக்கு கிழக்கு முதலாகவும், சந்திர வாஸ்து வீதிக்கு தெற்கு முதலாகவும் கொள்க.

தேவாலயம், ராஜக்கிரகம், சத்திரம் இவைகளுக்கு மத்தியில் வைக்கவும், மனையின்கீழ் மேல் தெற்கு வடக்கு முழத்தினால் அளந்துமாறி கண்டதொகைக்கு குழியென்றும், ஆயமென்றும், பகணமென்றும் பெயர். மனையின் சுற்றளவை முழமாகவும் வைத்து அங்குலத்தாலேனும், விதஸ்தியாலேனும், முழத்தாலேனும் அளந்து கண்ட தொகையை ஆயமாகவும் கொள்ளலாம் இதற்கு பரிணாமமென்று பெயர்.

சுவர்களி னுயர்வுதாழ்வு இலட்சணம்

ஒருமுழம் அகலப் பிரமாணத்திற்கு இரண்டுமுழப் பிரமாணம் சுவர் வைக்கவேண்டும். 10-சாணுயரமுள்ள சுவர் அரசர்களுக்கும், பிராமணர்களுக்குமாம். 9-சாணுயரமுள்ள சுவர் வைசியருக்கும், சூத்திரர்களுக்குமாம். 8-சாணுயரமுள்ள சுவர் சங்கர சாதியாருக்காகும் இந்த கணக்கிற்குக் குறைவா யிருக்கலாகாது. இதை யறிந்து செய்ய வேண்டியது சுவர் வைக்கும்போது விழுந்தால் சோரபயம் வெளிப்பக்கமாய்ச் சுவர் விழுந்தால் கலகம், உட்புறம் விழுந்தால் வீட்டுக்குடையவனுக்காகாது.

சந்து குத்த லறிய

சந்துகுத்தல், கோடிகுத்தல், குளக்குத்தல், கேணிக் குத்தல், கட்டைக்குத்தல் ஆகாது.

வாசற்படி வைக்கும் இலட்சணம்

ஒருவீட்டின் நாலுபக்கத்திலும் வாசற்படி வைத்திருந்தால் விகலிதோமுகமென்று சொல்லப்படும். அதன்பலன் விர்த்திப்பிரதம் கீழண்டை வாசல்படியில்லாமல் மூன்று பக்கத்திலு மிருந்தால் வியாக்கிரதபாத மென்னப்படும். இதன்பலன் பசுவுகளுக்கும், மிருகங்களுக்கும் பாதையாய் திருடர் பயமாகும். தெற்குமுகம் வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கத்திலுமிருந்தால் பாக்கியப்பிரதம். மேற்குமுகமாக வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கத்திலுமிருந்தால் ஸ்ரீ நிலயமென்று சொல்லப்படும். உத்தம பலன் நன்றாக வாழ்வார்கள். வடக்கு முகமாய் வாசற்படியில்லாமற் மற்ற மூன்றானால் கமலாகரம் சுபம்.

மனைமுகூர்த்தஞ் செய்யுமிடத்து சூன்யம்

தலையோடு, எலும்பு, யானையோடு, கூபம், மயிர், மரம், சுக்கிரன், கருங்கல், சாம்பல் இவைகள் இருக்கலாகாது

இதுகள் இருந்தால் கர்த்தா நாசமடைவர். அல்லது இரும்பு ஈயம், பித்தளைகாணில் மத்திமபலன் உண்டாம். அல்லது பொன், தேரை, செங்கல், சங்கு, பால்வார்க்கும்சங்கு, வெள்ளி, இரத்தினங்கள் இவை முதலிய வருக்கங்களைக் காணில் அந்தக் கிரகக் கர்த்தாவுக்கும், அக்கிரகத்தில் வசிக்கும் யாவருக்கும் க்ஷேமகர முண்டாகும்.

கம்பம்

கம்பங்கள் அடிஅடியினும், நுனிமேலும் இருக்கவும் உத்திரம் விட்டங்களுக்கு அடியை மேற்கு-தெற்கிலும் நுனியை கிழக்கு வடக்கிலும் வைக்க நன்மை, மாறி வைக்கில் தீமையுண்டாம்.

ஒருமனையை அறுபத்துநான்கு பாகம்செய்து வீடுகட்டுவதற்கு இலட்சணம்

மனையை நான்குபாகமாக அளந்துகொண்டு அந்த அறுபத்துநான்கு பங்கில் மத்தியில் நான்குபங்கு பிரமத்தானம், நான்குதிக்கும் உருத்திரபாகம்.

திக்குகள் நான்கு விஷ்ணுபாகமும், மற்றதெல்லாந் தேவர்களது பாகமென்றும் பெயராம்.

அத்தண்டத்துக்கொத்தபடி பிண்டம், பிண்டத்துக் கொத்தபடி வீடு, காசாணுதிகளோடுங்கூடி விளங்கிய கிரகம்.

இந்தப் பிரகாரமாய் வீடுகட்டினால் அதற்கு வயது நிதானம் நூறுகன்றுகாலின் கறவைப்பசுக்கள் இவைகள் நாளுக்கு நாள் விர்த்தியாவதுமன்றி, தாமரைக் கமலத்தில் வீற்றிரா நின்ற இலட்சுமியானவள் சேர்ந்து ஆனந்தத்தாண்டவம் புரிந்துக் கொண்டிருப்பாள்.

சந்திரனுதிக்க ஸ்தம்ப முதலியவை நாட்டி புதனுதிக்க, காப்பு பூட்ட வெள்ளியுதிக்க தளம் அல்லது, ஓடு இசைத்து வியாழம் உதிக்க, கிரகப்பிரவேசம் செய்தால் தேவர்போல வாழ்வார்கள்.

மனைக்கு எந்த வாரமோ அந்த வாரமுதல் ஆதிவாரம் வரைக்கும் எண்ண எத்தனைவந்ததோ, அந்த தொகையை 3-ல் பெருக்கி வந்ததொகை எத்தனையோ அத்தனை கணக்கு அசுவனி முதலாகத் தள்ளி நின்றநாள் 9-வரைக்கும் ஒரு கண், அதற்குமேல் 12-இரண்டுகண், அதற்குமேல் 6-நாள் குருடு இப்படி மனை நட்சத்திரத்திற்குள் பார்த்து மனை கணக்குகள் அறியவும்.

வயது பலனறிவது

25-வயதுக் குட்பட்டால்-அதமபலன்; நன்மையில்லை, 25-க்குமேல் 50-வயது வரையில் மத்திமபலன், சமமாக நடக்கும் 50-வயதுக்குமேல் சகல சவுக்கியமும் சம்பத்தும் பூரணாயுசும் உண்டாம்.

மனைக்குப் பால்யாதி பருவமறிவது

மனைக்குவந்த அங்கிசத் தொகையை 7-ல் பெருக்கி 5-ல் கழித்துவந்தது, 1-க்கு பாலன், 2-க்கு யவ்வனம், 3-க்கு கௌமாரம், 4-க்கு மூப்பு, 5-க்கு மரணமென்பது.

வீட்டுக்குப் பருவம் பார்க்கும்விதி

மனையின் துருவபதமாகிய ஆயமொத்தத்தை எட்டிற் பெருக்கி ஐந்திற் கழிக்க, மிகுசேடம் மனையின் பருவ மென்னப்படும். அச்சேடங்களுள், ஒன்றுக்குப் பாலன்; நன்மை. இரண்டுக்கு வாலிபன், நன்மை. மூன்றுக்கு அரசன், நன்மை. நான்குக்கு கிழவன், தீமை. ஐந்துக்கு அந்தியம், மிகத் தீமை. இவ்விதமாய்க் கண்டுகொள்ள வேண்டு மென்பதாம்.

மனையெடுத்தல் சுக்கிரன் இடம்

கிரகப் பிரவேச காலங்களில் சுக்கிரன் எதிர்வலம் இருக்கில் தீமை. இடப்புரம் இருக்கில் நன்மை. மூளமாகில் கிரகாரம்பம் ஷை பிரவேசம், நிலைவைத்தல், இவைகள் மூன்னும் வலமும் நன்மை, பின்னும் இடமும் தீமை, மனைபோட வடக்குங் கிழக்கும் நன்றாம், தெற்கும் மேற்கும் தீதாம்.

வீடுகட்ட நிச்சயிக்கும்போது நட்சத்திரங்கள் நிற்கும் நிலை

வீடு அஸ்திர வாரமுகூர்த்தம் ஸ்தம்பப் பிரதிஷ்டையும், சூரியன் கார்த்திகை பரணி 4-ம் பாதம் ரோகணி முதற் பாதம் இருக்கினும், ஷை சந்திரன் கார்த்திகையிருக்கினும் செவ்வாய் கார்த்திகை-மகரம்-ரேவதி-உத்திராடம்-அஸ்தம்-மூலம்-பூசம் இந்த ஏழுநாளிலும் இருந்தால் கிரகபதியாகிய எசமானுக்கு அத்தியந்த துக்கமுண்டாகும்.

எஜமான் கைசாணால் நாலுசாண் கோல்கொண்டு கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு இந்நான்கு திக்கையு மளந்து இரு

துகையுங் குழிமாறி யத்துகையை ஆயமாக வைத்துக் கொண்டு திசை பொருத்தம் பார்க்க வேண்டியது.

வீட்டெஜமானுடைய காலடியாற் கணக்கிட்டு அதையே முதன்மையாக வைத்துக்கொண்டு ஷை மனையில் எவ்வளவு விஸ்தாரமுள்ள கட்டிடங்கட்ட வேண்டுமோ அந்த மனை கட்டிடத்துக்குட்பட்ட அகல நிகள அளவை கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு இவ்வளவென்று அளவிட்டு ஒன்றுக் கொன்று மாறிய குழித் தொகையை துருவபதமாக வைத் துக்கொண்டு,

முதலாவது:—அம் மனைக்கு வந்த குழியை துருவ மாக்கி எட்டிற் கழித்து கெற்பகா ஆயகம் காணவும் ஷை தொகையை,

இரண்டாவது:—எட்டிற்பெருக்கி பனிரெண்டில் கழித்து மிகுந்த சேடம் ஆதாயம்
மூன்றாவது:—ஒன்பதில் பெருக்கி பத்தில் கழித்து மிகுந்த சேடம் விரையம்
நான்காவது:—மூன்றில் பெருக்கி எட்டிற் கழித்து மிகுந்த சேடம் † யோனி
ஐந்தாவது:—எட்டில் பெருக்கி இருபத்தேழில் கழித்து மிகுந்த சேடம் நட்சத்திரம்
ஆறாவது:—நாலில் பெருக்கி முப்பதில் கழித்து மிகுந்த சேடம் திதி
ஏழாவது:—ஒன்பதில் பெருக்கி ஏழில் கழித்து மிகுந்த சேடம் வாரம்
எட்டாவது:—நாலில் பெருக்கி பனிரெண்டில் கழித்து மிகுந்த சேடம் ராசி
ஒன்பதாவது:—ஒன்பதில் பெருக்கி நாலில் கழித்து மிகுந்த சேடம் அம்சம்
பத்தாவது:—நாலில் பெருக்கி ஒன்பதில் கழித்து மிகுந்த சேடம் ‡ அமிசம்
பதினோராவது:—இருபத்தேழிற் பெருக்கி நூறில் கழித்து மிகுந்த சேடம் வயது

ஆகபொருத்தம் 11-க்கு,

† யோனி-கருடன்-பூனை-சிங்கம்-நாய்-பாம்பு-எலி - ஆனை - முயல் இதில் ஆனை-சிங்கம் உத்தமம்.

‡ அமிசம்-சோரம்-சக்தி-தானியம் - ராச்சியமக்லீபம் - விருத்தம் - ரோகம்-சுபம். இப்படிக் கிரமமாகப் பார்க்கவும். இதில் 2-5-4-9 உத்தமம் மற்றவையாகாது.

ஆயகமீறுமற்போனல்	8	—வைத்துக்கொள்ளவும்
ஆதாயமீறுமற்போனல்	12	—வைத்துக்கொள்ளவும்
விரையமீராமற்போனல்	10	—வைத்துக்கொள்ளவும்
யோனிமீறுமற்போனல்	8	—வைத்துக்கொள்ளவும்
நாள்மீறுமற்போனல்	27	—வைத்துக்கொள்ளவும்
திதிமீறுமற்போனல்	30	—வைத்துக்கொள்ளவும்
வாரமீறுமற்போனல்	7	—வைத்துக்கொள்ளவும்
இராசிமீறுமற்போனல்	12	—வைத்துக்கொள்ளவும்
வமிசமீறுமற்போனல்	4	—வைத்துக்கொள்ளவும்
அங்கிசமீறுமற்போனல்	9	—வைத்துக்கொள்ளவும்
வயதுமீறுமற்போனல்	100	—வைத்துக்கொள்ளவும்

ஆதாயம் அதிகப்பட்டு, விரையம் குறைவா யிருந்தால் வீட்டுக்குடையவன் தனவானுவான்.

ஆத்தாயங் குறைவா யிருந்து விரையதிகமா யிருந்தால் தரித்திரனுவான்.

ஆதாயமும் விரையமும் சரியாயிருக்கில் சமனுயிருக்கும்

முதல்பத மென்கிற துருவ ஆயத்தை 8-ல் கொடுக்க மிகுந்த தொகையை வைத்துக்கொண்டு.

1-வந்தால் துவசாயம்—இந்திரன்—காரியசித்தி
2-வந்தால் தூமாயம்—அக்கினி—மரணம்
3-வந்தால் சிம்மாயம்—யமன்—ஜெயம்
4-வந்தால் சிவனுயம்—ருதி—ரோகம்
5-வந்தால் ரிஷபாயம்—வருணன்—ராச்சியம்
6-வந்தால் தானுயம்—வாயுவு—துக்கம்
7-வந்தால் கெசாயம்—குபேரம்—சுபம்
8-வந்தால் காகாயம்—ஈசானியம்—நிஷ்பலம்
துவசாயத்துக்கு வடக்கே கட்டலாம்
சிம்மாயத்துக்கு கெஜாயத்துக்கும் மேற்கே கட்டலாம்

ரிஷபாயம் மேற்கே யல்லாமல் மற்ற விடங்களில் கட்டக் கூடாது.

துவசாயம் அக்கினி மூலையிற்றவிர மற்ற எந்த திக்கிலும் கட்டக் கூடாது.

மற்ற எந்த திக்கிலே கட்டி யிருக்கிறதோ அந்தப் பிரகாரமே யிருக்கலாம், மற்றொருவிடங்களிலும் கட்டக் கூடாது.

துவசாயம் - ரிஷபாயம் - சிம்மாயம் - பிராமணளுக்கும், க்ஷத்திரியாளுக்கு மாகும்.

கெஜாயம் - ரிஷபாயம் வைசியர்களுக்கும், சூத்திரர்களுக்குமாகும். துவசாயம் நல்ல புண்ணியவானுவான்.

தூமாயம்—மிருத்துபிரதம்
சிம்மாயம்—விஷப்பிரதம்
சிவநாயம்—ரோகம்பிரதம்
ரிஷபாயம்—இராட்சதப்பிரதம்
கெசாயத்துக்கு—சுபம்பிரதம்
காகாயத்துக்கு—விஷபயம்

காகாயத்துக்கும் பீடையாம் இந்த ஆபங்களில் குணந் தெரிந்தவர்க்கு ஆயங்கள் நிர்ணயம் பண்ணும்போது ஒரு அங்குல மதிகமானுல் பூரணுயுள் பலன் அறியவும். சமமாயிருந்தால் சமபலனு யிருக்கும். அங்குலம் குறைவா யிருந்தால் குணஸ்தனென் றறியவும். இந்த ஆயங்களில் குணங்கள் தெரிந்துக் கொள்வதாம்.

மரமறிய

அம்பலத்தில் நின்றமரம், தீயில் வெந்தமரம், பட்சிகள் வாழ்ந்தமரம், புள்ளிருந்தமரம், கொடிசுற்றியமரம், குளக்கரையில் நின்றமரம், யானை முறித்தமரம், காற்றினுல் முறிந்தமரம், பறைச்சேரி, சுடுகாடு, பாழ்வீடு இவற்றில் நின்றமரம், பேய்பூதம் குடியிருந்த மாம், வில்வமரம், விளா, புளி, வேங்கை, புங்கு, மாவிலிங்கை, அத்தி, புன்னை, நொச்சி, இவைகளும், முள்ள மரங்களும் தீதாம்.

மரங்கள்வெட்ட திதிநிர்ணயம்

பஞ்சமி முதல் ஐந்து நாளில் வெட்டினுல் பூச்சி பிடியாது. இவ் வைந்து நாளையில் ரோகணி நட்சத்திரத்தினுல் மிகவு முத்தமம். வேலமரம் வெட்டினுலும் பூச்சி பிடியாது. இதற்கு ஆகா நாள் கிர்த்திகை நட்சத்திரத்தில் சூரியனிருக்க திருவோணம், அவிட்டம் மூன்றும் பாதத்திலும் நாலாம் பாதத்திலும், சதயம், பூரட்டாதி மூன்றும் பாதத்திலும் சுக்கிரன் நிற்க மரம் வெட்டலாகாது.

முன்பு வெட்டின மரங்களாலும், இந்த நட்சத்திரத்திலும் இவர்களிருக்கும்போதும் வீட்டுக்குக் கொண்டுவரக் கூடாது. பின்பு திருவோணம்-அவிட்டம்-சதையம்-பூரட்டாதி-உத்திரட்டாதி-மகம்-பூரம் - உத்திரம் - அஸ்தம் - சித்

திரை-சுவாதி இந்த 11-நட்சத்திரத்திலும் சந்திரனிருக்க மரம் வெட்டலாகாது. வெட்டின மரங்களானாலும் வீட்டுக்குக் கொண்டுவரக் கூடாது.

மரங்கள் வெட்டும் விதி

வாரம்-யோகம்-கரணம் இவைகளை யறிந்து கர்த்தனுக்கும் சந்திர தாரபலன் பார்த்துக்கொண்டு தச்சனுக்கு கெந்தம்-தாம்பூலம்-புட்பம் தட்சணை கொடுத்து காட்டுக்கனுப்பி மரம் வெட்டினால் சுப முண்டாக்கும்.

வீடு கட்டுதற்கு உதவா மரங்கள்

காற்றிலடிபட்டு வீழ்ந்தமரம், ஆலயத்திலிருக்கு மரம், மயானத்திலிருந்த மரம் இவ்வகைப்பட்ட மரங்களால் வீடு கட்டிடஞ் செய்தால் செல்வங் குறைந்து ஆயுள் ஜீரணித்து வம்மிசம் நாசமாகும்.

மரமிசைத்தல்

மர மிசைக்கும்போது முதுதலை கீழாகவும், இளந்தலை மேலாகவும் ஓர் இசையாகில் முதுதலை புள்ளும் இளந்தலை புறத்தியுமாக இசைப்பது நன்று. இதற்குப் பிசகு வருமாகில் பிணியும் கேடும் கடனுமுண்டாம். இளந்தலை கீழும் முதுதலை மேலுமாக இசைப்பாராகில் நோயுண்டாகும்.

முதுதலை இரண்டுந் தென்மேல் மூலையில் பொருந்த வைத்து தென்றிசை முதுதலை மேலாகவும், இளந்தலை யிரண்டும் வடதிசை மூலையிற் பொருந்த வைத்து வடதலை கீழாகவும் பிணைக்க வுத்தமம்.

இளந்தலை யிரண்டும் வடகீழ் மூலையொழிய வேறிடத்தி லிசைக்கலாகாது முதுதலை யிரண்டும் தென்மேல் மூலையிலே யொழிய மற்ற விடங்களி லிசைக்கலாகாது. இசைக்கில் வறுமையும் நோயுமுண்டாம்.

பறப்பினிற் பாதியைப் பனிரண்டு கூறுசெய்து இதில் ஐந்து கூறு எற்றமஞ்சு ஆறுமஞ்சாகை ஏழுகடுவாங்கை எட்டு மரமிசைக்க கோடாகை ஒன்பது கோடியென்பதாம்.

திங்களில் காலைநாட்டி, புதனிற் கையைவைத்து, வெள்ளியில் மேய்ந்து, வியாழத்திற் குடிபுகுந்தால் தேவேந்திரன் போலே அஷ்ட ஐஸ்வரியமும் பெற்று நீடூழி காலஞ் செல்வம் நீங்காமல் கீர்த்தியுள்ளவனாக வாழ்வான்.

ஆண் மரம்

மரமானது தூண்போலத்திரண்டு நீண்டு ஒழுங்காக விருக்குமாகில் ஆண்மரமென்று சொல்லப்படும்.

பெண் மரம்

மரமானது அடிபெருத்து நுனியானது சிறுத்திருந்தால் அதை பெண்மரமென்று சொல்லப்படும்.

அலி மரம்

மரமானது சிறுத்துநீண்டு நெடுமையாகித் தலைபெருத்திருந்தால் அதை அலிமரமென்று சொல்லப்படும்.

ஆண்மரமாகில் கால்களுக்கும் தூணுக்குமாகும். பெண் மரமாகில் வளைஉத்திரம் போதிகைக்குமாகும். அலிமரமாகில் அவிட்டம் சட்டத்திற்குமாகும். கைகளுக்கு உத்தம மரங்கள் நன்று.

மாமரம் தேவர்களுக்காகும், வேம்பு பிராமணர்களுக்காகும், தேக்கு அரசர்களுக்காகும், இலுப்பை செட்டிகளுக்காகும், வேங்கை வேளாளருக்காகும்.

பதவி

காலி நிலத்தில் தேவாலய முதலிய கிருகங்களெடுக்க வேண்டியபோது வாஸ்து பாகம் 9-4-போட்டு, பதவின்யாசம் செய்து, வாஸ்து ஓமம், வாஸ்து பூசை, வாஸ்துபலி, வாஸ்து சாந்தியும் விதிப்படி செய்து முகூர்த்தம் செய்யவும்.

வீடுகட்ட மண்

வெள்ளைமண் பிராமணர்களுக்கு பலமணமுள்ளது
சிவந்தமண் அரசர்களுக்கு பூமணமுள்ளது
பசுமண் அல்லது களிப்புமண்வைசியருக்கு வேர்மணமுள்ளது
கருமண் சூத்திருக்கு நீர்மணமுள்ளது.

தோஷ நிவர்த்தி குத்தல்கள்

கோவில்பாய்ச்சல், வீட்டுப்பாய்ச்சல், சந்துப்பாய்ச்சல், வழுல்பாய்ச்சல், கோடிக்குத்தல், குளக்குத்தல், ஆற்றுக்குத்தல், கிணற்றுக்குத்தல், சந்துக்குத்தல் இவை முதலிய தோஷங்கள் நூறு அடிக்கு மேலாயின் யாதொரு தோஷமுமில்லை.

முகூர்த்தஞ் செய்யுமிடம்

மனைமுகூர்த்தஞ்செய்ய வாஸ்துபுருஷன் காலில்கெல்லில் ஸ்ரீமரணம், முதுகிற்கெல்லில், பொருள்சேதம், தலைபிற்கெல்லில், தாய்தந்தை மரணம், வயிற்றில் கெல்லில் பொருள் சேரும்.

தோஷம்

மனைநடுவில் வாசல்விடுதல், ஷை தானியகர்ப்பம், ஷை உத்திரம்வைத்தல், கிணறு எடுத்தல், அடுப்பு இயற்றல் கூடாது. ஒற்றைக்கம்பம், ஒற்றையுத்திரம், தோரணிமத்தியிலுத்திரம், நிலைவாசல், வாரைக்குத்தல், வாசற்படிக்குநேர், வாரைச்சலம்விழுதல், சாலகம்விடுதல், மண்படைவைத்த சுவர் இரட்டைப்படை ஆகாது கை ஒற்றைப்படலாகாது.

முத்தம் நடுவில் கம்பம் உத்திரம் சுவர் வரலாகாது

மனைசெய்ய வேண்டுமென்று சிற்பாசாரியை அழைக்க வந்தவர்கள்நின்று ஒருகாலைத்தூக்கிநிற்றல், காலினால் காலைச்சொரிதல், தலையைச்சொரிதல், முழங்காலைக் கட்டிக்கொண்டிருத்தல், கன்னத்தில் கையை வைத்திருத்தல், முகஞ்சோர்ந்திருத்தல், துக்க வார்த்தையைப்பேசுதல், அகாலத்திலழைத்தல், அவனழைக்கும்போது சிற்பாசாரி எண்ணெய் விட்டுக் கொண்டிருத்தல் இவையாகில் அந்தமனை நிறைவேற மாட்டாது திரவிய நஷ்டமாம்.

குளிகைகாலம் பார்க்கவேண்டிய விபரம்

எந்த வாரத்தில் குளிகைகாலம் பார்க்கவேண்டுமோ அந்த வாரமுதல் சுக்கிரவாரம் வரையில் எண்ணின தொகையை $3\frac{3}{4}$-னால் மாறிக்கண்ட நாழிகையை இத்தனையென்றுணர்ந்து அந்த நாழிகைக்குமேல் $3\frac{3}{4}$-நாழிகை குளிகைகாலமாம். அக்காலத்தில் மனைமுகூர்த்தஞ்செய்ய ஊரேற்ற, கால்நாட்ட, வாகனரோகஞ்செய்ய, தானியகளஞ் சியங்கட்ட இது முதலாகிய சுபகாரியங்களைச்செய்ய சுபகாரமுண்டாம்.

நிலநீளத்தை 7-கூறுசெய்து 9-கூறு உள்ளும், நின்ற ஒருகூறும் 9-பங்குசெய்துமேல் 5-ம் கீழ் 4-ம் உட்கூட்டில்

பாதியாகக் கூறுசெய்து நிறையாகநின்ற கூறில் நிலைமையக் தன்னில் சரியாய் வைக்கில் மிகவும் நன்று.

பூதபலன்

அகலநிகளமளந்து குழியான துருவபதத்தை 3-ல் பெருக்கி 5-ல் கொடுக்க.

1-மிகுந்தால்	பூதத்துவம்	இதன்பலன் பாக்கியப்பிரதம்
2- ,,	உதகதத்துவம்	இதன்பலன் சந்தோஷம்
3- ,,	அக்கினிதத்துவம்	இதன்பலன் மிருத்துவுபயம்
4- ,,	வாய்வுதத்துவம்	இதன்பலன் சுகம்
5- ,,	ஆகாசதத்துவம்	இதன்பலன் தரித்திரம்

இராசிசூல நிர்ணயம்

ஷ துருவபதத்துகையை 9-ல்பெருக்கி, 12-ல் கொடுக்க,

1-மிகுந்தால்	மேஷம்	7-மிகுந்தால்	துலாம்
2- ,,	ரிஷபம்	8- ,,	விருச்சிகம்
3- ,,	மிதுனம்	9- ,,	தனுசு
4- ,,	கடகம்	10- ,,	மகரம்
5- ,,	சிங்கம்	11- ,,	கும்பம்
6- ,,	கன்னி	12- ,,	மீனம்

இதில் எந்தத் தொகை வருமோ அந்தத் தொகையை நாலு பாதமுள்ள நட்சத்திரத்துக்கு பின்ராசியில் 3-பாதமெவ் விராசிக்கு வருகின்றனவோ அவ்விராசிபலன் கேடாகும்.

a. மேற்கூறிய விதியின்படிக்கும் பொருத்த நிமித்தம் முதலியதும் மலைகளினது நேத்திரம் வாஸ்து இவைகளையெல்லாம் நிச்சயித்தும் அந்தப் பலன்களைத் தெரிந்துக் கொள்ள வேண்டுமென்பது கருத்தாம்.

மனைமுதலிய வீடுகளுக்குண்டாகும் லாபநஷ்ட பலன் களைக் கீழே கூறுவாம்.

மனையானது கிழக்குமுகமா விருந்தும் தென் மேற்குச் சுற்றுள்ள மனையாகிலும், கிரகத்துள் வுடபாகங் களில், நான்கு முதலிய அரையுள்ள நிலைமுதலிய சன்னல் துவாரமேனு மிருக்கினும், எதிர்ப் பாரிசங் களில் நேர்ப்பக்கமின்றி மூலைப்பாரிசங்களில் தாழ்வுடைய வீடேனுங் காலியிடமேனு மிருந்தாலும், நூதனமாக

வெதிற் பாரிசங்களின் கட்டிட மிடிந்தாலும், எதிரில் நெருக்கிய விடத்துள் தணிந்த வீடுடனுங் குருகிய வீடாகின், அதன் வாயலுக்கு மிவ்வில்லிடத்தின் வாயலுக்கும் தென்மேற்கு தெற்கானவிடங்களில் மேற்கூறிய தணிந்த விடமிருக்கினும் அல்லது உயரமான கிரகம் இருக்கினும் அவ்வித வீட்டினது மூலைக்குத்து இவ்வித கட்டிடத்தின் தலைவாயிற்களுக்கேனும் இவ்விடத்தின் மூலைகட்கேனும் வடமேற்கு தென்கிழக்கான சார்புகளா யிருக்கினும் அவ்வித மனையை யுடையானுக்குச் சொந்தமின்றி சில நாளிற் குடும்பத்தோர்களும் க்ஷீணமடைந்து பலவாறான வருத்தங்கட்குள் ளனுபவ முடையவராகிச் சித்தப்பிரமை முதலிய கடன்களாற் பொருள் முதலிய பலவற்றையு மிழந்து தவிப்பார்கள். மகப்பேரில்லான் பகைபிணி சேரும். அதற்கு அப்படிக் கொற்றதை நிவிருத்தித்தும் மனையைக் கூட்டி யல்லது குறைத்தேனுங் கட்டியும் எதிர் மனைகளின் பார்வைகளைத் தடுத்துள்ள வகைசெய்யிற் செல்வ மேன்மையும், மகப்பேறு முதலிய லாபத்துடன் ஆயுள் விருத்தியையும் அடையக் கடவன் என்று மிகவும் மேன்மையான பூலாபத்துவம் முதலிய விருத்திகள் சேரும். அரசனுவன். முன்னிருந்த இருணம் முதலிய கடன் துன்பக் குறையும். குடும்ப சகோதரர்கட்குண்டாகும் வியாதி சித்தக் குறைவு நோயும் நீங்குமெனக் காண்க.

௬. மேற்குமுகமான வீடாகியும் பின்பாகங்களிலேனும் தென்பால் வடபாலிப்பக்க வீடல்லது மனை ஈசானியவாங்கலாகியும், இவ்வுடையானில்லம் அக்கினிவாயு மூலைகள்வாங்கலாகியும், மேலேகூறிய மூன்றுஸ்தான வில்லிடங்கள் உயரமுள்ள கட்டிடமாகினும், அம்மூன்று பக்கங்களி லொன்றான பக்கங்களில் உயரமுள்ளதாகவும் மற்ற விடங்களான வில்லிடங்கள் தாழ்மையுட னிருக்கினும், எதிருக்கெதிராக விருக்கில் பகையும், பயமும் அவ்விடத்திற்கு குடியிருப்பவனுக்குக்கூட பிடிக்காமலும், முன் சிலகாலம் விருத்திபோலத் தோன்றிப் பின்வரக் கைப்பொருளிழந்தும், பந்தனமான துன்பத்தாலும், திருடர் பயம். புத்திரலாபமின்றி வருந்தியும், கடன்களாற் றன்னுயிர்ச் சேதங்களைக்கூட வனுபவிப்பனென்றும், பலவித துன்பமும் பகைகளையு மனுபவிப்பன். சொற்பகாலம் யோகவந்தனுக வாழ்ந்து வருவனென்றறிக. பின் சகல பாக்கியமு மிழந்து தவித்தும் பலவிவாத விரோதங்களை யனுபவிப்பனுகையால், மேற்கூறியபடி யறிந்து நடக்கிற் சித்தியான யோகம் லாபம் பெறுவனெனக் காண்க.

c. வடக்குமுகமாக சிரசுமாகியும், அதன் எதிர்பக்கங்களில் தாழ்வுள்ள விடமாகியும், அல்லது குடியிருப்பில்லாத மற்றய எருதுத்தொழு வாகனப்பிறை சாவடி இவைகளாகியும், கிழக்கு ஈசான்யவாயு இவ்வித திக்குகளின் வாழ் கிரகமின்றியும், அப்படி வாழ்கிரகமாகின் அவைகளின் தெருநிலை பிரதான மனைக் கட்டிடத்தின் கீழ் சுவரான ஈசானிய மூலையை நோக்கியதாக விருக்கினும், வாயுமூலையின் சாயல் எதிர்ப்பாகத்தின் குடியிருப்பில்லாத மேற்கூறிய தொழு முதலிய விடங்களில் வாயல்கள் நிருதிக்கெதிரானாலும் அம் மனை வாழ்வோருக்கு ஆயுளற்பமும், அனேகரிருக்கினும் பிணியேனும் தரித்திரமேனும் அனுபவிப்பார்கள். குடும்ப விருத்தி குன்றிவரும், பொருட்பூமி முதலியவற்றை யடைந்த அரசனாகினும் அவன் வாழ்வு குன்றிவரும். தன தானிய நஷ்டமும், கடன் முதலிய பாதைகளால் தீங்கு நேரும். குடும்பத்தார்கட்கு பாலிய எவ்வன கவுமார வயதிலேயே மரிப்பர். அப்படி மரிக்காராயின், மரித்தலையொத்த புத்தியீனராய் வியாதி யுடையவராயும், குடும்ப துக்க சோகாதி நஷ்டத்துடனும் வாழ்ந்து வருவார்களெனக் காண வேண்டியது. a. b. c. இவைகளி லவையவைகட்குக் கூறியிருக்கும். குற்றவிடங்கள் நீங்கலாக மற்ற விடங்களில் மேற்கூறிய குறிகளிருக்கில் மிகவு மேன்மையும், வரவரவதிக ஐஸ்வரிய விருத்தியுடன் புகழாய் வாழ்வார்கள் எனக்காணல் வேண்டும்.

d. தெற்குமுகமான வில்விடத்துள் எதிர்ப் பாரிசத்திலும், உயரமுள்ள கட்டிடமாகியும், அக்கினி திக்கு, நிருதி இவ்விடத்திலிருக்கு மனைகளின் மூலைகள் இவ்வீட்டினது வாயலுக்குச் சார்பாகியும் வீட்டுக்களின் மூலைகள் இவ்விடத்தினது மூலையைச் செங்குத்தலான நேருடையதாகவும், வட மேற்கு தென்கிழக்கு வாங்கலான கோணமுடைய வில்லேயானாலும், மனையேயானாலும் அவ்விடத்திற் குடியிருப்பவரான ஆண்கட்கு ஆயுளுண்டென்றும், பெண் முதலிய அயல் கிரகத்தினின்று வருபவர்கள் இவ்வகையோர்க்கு ஆயுட் குறைவுகளும், பகை முதலிய பல விரோதத்தையும், சிலநாள் பொருள் முதலிய கட்டிட செல்வங்களுடன் மேன்மையான விருத்திகளையும், பிரபல வெற்றிகளையு மடையக்கடவன் என்றும், சிலகாலஞ் சென்றபின் அவ்விடத்திலடங்கா மனுஷியர்க ளிருக்கினும், பின் இடங்காக்க மனுஷியர்களின்றிப் பா தேசம் போய்த் திரிதலும், பல பொருளுங் குன்றி மனத் துன்பம் கடன் முதலியதாகும் வருந்தி இளைக்கப்படுவர்ச

10

ளென்றுங் காணல்வேண்டும். இவ்வித மிருக்குங் கிரகங்களை நூதனமாகச் சேகரித்தும், பிரபலத்துடனுறில் இடம்பொரு ளேவலுடன் அதிக மேன்மை பொருந்தி வாழ்வார்கள் என் றும் இவ்வித குற்றங்களை யெல்லாம் மிகுந்த கவனிப்புடன் யோசித்துக் கட்டிடம் முதலிய வில்லிடங்கள் செய்யவேண்டு மென்பது கருத்தாம்.

வாச ஸ்தலத்தின் கால பல நிர்த்தாரணங்களாவன

மனைகளையோ அல்லது கட்டிடங்களையோ எஜமானனது இரண்டு கைமுழங்கொண்ட கோலால் அகல நீளங்களை யளந்து அகலத்திற் கண்ட தொகைக்கும், நீளத்திற் கண்ட தொகைக்குமாகப் பெருக்கி அத்தொகையுடன் அம்மனை யுடை யானது ஜெனன காலத்திற் சூரியன் எந்த நக்ஷத்திரம் எத் தனையாவது பாதமோ அதை அசுபதி முதல் அவ்வித பாதங் கொண்ட நக்ஷத்திரத்திற்கும், முன் நட்சத்திரம் வரையி லெண்ணி நாலிற் பெருக்கியும், அச் சூரியனிருக்கும் நக்ஷத் திர பாதம் எத்தனையோ அதையுஞ் சேர்த்து 0 இந்த வடை யாளமிட்ட (அத்தொகையுடன் என்று) கூடிய தொகையோடு கூடச் சேர்த்துக் கொள்ளவும்.

அப்படி ஜெனனகாலந் தெரியாவிடில் பெயர் நாமத் துக்கு எந்த நக்ஷத்திரம் எத்தனையாவது பாதமாகிறதோ அதை அசுபதி முதல் நக்ஷத்திர மொன்றுக்கு நன்னான்கு பாதமாக மொத்த பாதங்களைக் கூட்டி அத்தொகையை மேலே 0 இவ் வடையாளமிட்ட விடத்திற்கூறிய தொகையுடன் சேர்த்து இந்த தொகையை 2-ல் மறுதடவை பெருக்கி 9-ல் கழித்த சேஷமறிந்துகொள்ள வேண்டியது.

அவை கிழக்குமுகமான வீடாகியும்

ஒன்று மிச்சமாகவரின்

கீர்த்திபுகழ் ராஜாங்க வதிகாரமும், அனேக பொருள் வரவு தனதானியச் செல்வங்களும், சுவர்ணம் முதலானவை கள் நூதன லாபம் வரினும், மத்திமநாளிலேயே ரோக பாதையும் விரைய மதிகந் தோன்றும். கிலேசம் சில கால மும், கிலேசமின்றிச் சில காலமு மிருந்துவரும் என்றுணர்க. சந்ததி விருத்தியும் குடும்ப விருத்தியும் வியாதியுங் குன்றுது. செல்வம் பெரினும் மத்தியிற் குறை நேருமெனக் காண்க. அப்படிக் குறைகள் வந்தாலும் முழுதுங் கெடாது.

இரண்டாகவரின்

துக்க மனுபவித்தலும் அம்மனையிற் குடிமுற்றும் வாழு நாளின்றி மத்தியிற்கெடுவது பகை முதலிய பலவித வருத்தம் தோன்றலும், சீதவாதாதி வரிஷ்டத்தையும், பகையுங் கொடுத்துப் பின்யோகபால விருத்தியுஞ் சுகமும் நேரும். பிரபல செல்வம் பொருட்பூமி இவைசேரும். அவையாவது: விவாத வழக்கினுதலால் மற்றொருவர் குடும்பப்பொருள் விருத்திவந்துகூடும். சுபசோபன சந்தோஷம் அவ்வீடுண் டானவுடனே நேருமெனக் காணல்வேண்டும்.

மூன்றாகவரின்

பகை மனஸ்தாபமும் பொருள் நஷ்டமும் பலவித வாதை நேரிடும். மனதுக்கும் தேகத்திற்கும் உஷ்ணவிரண ரத்தநோயாற் றுன்பமும் சகோதரம் முதலிய பிரபல யோக முடையார் உடன்கெடுவர் தனக்கேனும் அகாலதேக பாதை பயமும் ஒருவருக்கு இவ்வுடையான் இராசத்துவாரம் முதலியவர்களாற் பொருள் நஷ்டமும் மனதுக்கு சஞ்சல மாகும்.

நான்காகவரின்

பிரபல விருத்திகளுஞ் சம்பத்துக்களும் மேன்மையான தேவதாபக்திகளும், விசேஷமான கட்டட முதலிய சபாதி கார விருத்திகளுஞ் சுகசௌக்கியங் கொடுக்கினும் சிலநாள் செல்வமுஞ் சிலநாள் விரயமுமாகத்தோன்றும் தேவதா பாதைகளும் நல்லவேத கோஷாதிகள் நடந்துவரும். புத்திர விருத்திகள் மாத்திரங்குன்றும்.

ஐந்தாகவரின்

சுபசோபன கல்யாணம் முதலிய சுபங்களுடனே நடக்கும். புத்திர விருத்தியுஞ் சம்பத்தும் நாளுக்குநாள் பிர பலித்துத்தோன்றும். மோசமான பொருட்கள் வரும். மிகவுமேன்மையான சுகங்களுண்டாகும். இராஜாதிகாரமும் இராஜவசியமும், பேட்டியான கீர்த்தியும், தேவபக்தி தரு மங்கள் வற்றாது நடந்துவரும். இவ்விடங்களில் விசேஷ அன்னசத்திரம் தருமம் ஆலயவிடங்களாயும் பெரியோர் வாழும் பிரபல விடமாமெனக் காண்க.

ஆறாகவரின்

அசனசயனபோக போக்கியம் நடக்கும். நல்ல ரூப ஸ்திரீகள் கேளிவிலாச சந்தோஷ சல்லாப முண்டாகும். மனோ தைரிய வீரியமுஞ் செல்வமு மதிகரிக்கும். குடும்பசுப

சோபனாதிகளு முண்டாகும். ஆகினும் சிலகாலம் வய துடைய ஸ்திரீகள் மரிப்பார்கள். முன்சிலநாட் செல்வமுஞ் சுகமுமின்றி வாழ்ந்துபின் செல்வங்களும் யோகமு மத்திய நாளிற் றோன்றிப் பின் முன்புபோலவே நேரும்.

ஏழாகவரின்

பகை, மாணம், துக்கம், சோகம், பில்லி, சூனியம் முதலிய துஷ்ட தேவதைகளின் துன்பமும் அவ்விடத்தில் வசிக்கும் குடும்ப க்ஷயமும் வியாதி முதலிய துன்ப மடைவன். பரதேசத்தார்க ளாவார்களெனக் காணல்வேண்டும். முதலிற் செல்வவிருத்திபோற் றோன்றி யுடனே அழிந்து நஷ்டமடைந்து கடன் முதலிய பாதையும் உரியதனம் முதலியவைகளும் குன்றிவிடும். புத்திரர் முதலிய குடும்ப விர்த்தி யில்லாதவன் எனகாண்க.

எட்டாகவரின்

மேற்கண்ட பலன்களோடு இராஜ விரோதமும் விஷ ஜெந்துக்களின் ஹிம்சைகளும் மனக்கஷ்ட நஷ்டமும் கெடுத லானதும் அபாயமான மாணமும் காற்கள் முதலியதும் அவயவங்களிலும் இந்திரிய ஸ்தானங்களிலும் வியாதி முதலிய பிரபலரோக துன்பமுமடைந்து வருமென்றும் பலவித வாதை யடைவன். சண்டையும் விவாதமும் நடக்கும். பலவாராய் வருந்தினுஞ் சிலகாலஞ் சென்றபின் லாபந் தனவிருத்திகளையுஞ் செல்வத்தையும் பெறுவனெனக் காணல்வேண்டும்.

ஒன்பதாகவரின்

முன் சிலநாட் பிரபல யோகத்தையும் சத்துரு பந்துக்கள் பலபொருள் வலுவிற்சேருதலும் தனக்கேனுங் குடும்பங்கட்கேனும் சுவீகாரம் முதலிய புத்திரர்கள் உண்டாகும். சுயபுத்திரர் உண்டாகின் மரித்தலே யடையப்படுமென்றும் வீரண நோயாற் றுன்பங்களையும் பின்கடன் முதலிய பல வருத்தங்களையு மனுபவிக்கப் படுவார்களென்றும் பெருங் கவலையான துன்ப மடைவார்கள்.

மேற்குமுகமாகியும்

ஒன்றுமிச்சமாகவரின்

வியாதி பீடையும் வரும்படி லோபமும் பகையுங்கூடும். உயிர்ச்சேத முதலிய துக்கசோக ஸம்பவ முண்டாகும். விவாத சிவனமிவைகளால் மனதுக்குத் திருப்தியின்றி பல வித வெண்ணங்களும் மனதுக்கு சந்துஷ்டிகளும் பணச் சிலவும் இவ்விதமான கஷ்டபலன் நடக்கும். சோரம்போற் சொத்து நஷ்ட மடைவன்.

இரண்டுமிச்சமாகவரின்

சிலநாள் சுகமாக வாழ்ந்து பலதன இராஜயோகாதி பத்தியமுடையவராகியும், பல வாகனம் மாடு முதலிய பல திரவிய செல்வத்தையுங் குடும்ப விருத்திகளையும் படைத்து மிகவும் மேன்மையாக தலைமுறை இரண்டாக வாழ்ந்து வரவர விருத்திக்காகாது பல நஷ்டங்களும் பல துன்பமும் குடும்ப புத்திர ரோகம் பைத்தியம் சயித்தியம் முதலிய பலவிதக் கிலேசமாகவும் நடந்து வரும் சிலவு ஜாஸ்தியாகும் சிலகால மிப்படி யனுபவித்த பின் கடைக்கால யற்பசுக லாபங் தோன்றி இராஜயோக பலன்களை யடைவார்களெனக் காணவேண்டியது.

மூன்றாகவரின்

கட்டிடம் விருத்தியின்றியும் பேய் முதலியவை யனுசரித்தும் கொலையான மரணமடையத் தக்க வில்லென்றும் பலவித கஷ்டநஷ்ட சோகமுண்டாகும் புத்திர தோஷமும் கடன் தொந்தரவும் பல கவலை யுண்டாகும்.

நான்காகவரின்

பெண் வம்சமே பெருகும் புத்திர சோகமும் பலவித கவலைகளும் அனேகவித துக்கசோகமும் முதலுங் கடையுமுள்ள காலம் விருத்தி தோன்றாதழியும் விசேஷ செல்வமும் இராசத்துவ யோகமும் பிரபல தேவாலயப் பிரபல சத்திகளும் இவ்விதமாக நடக்கும்.

ஐந்தாகவரின்

சொற்ப காலம் வரையில் புத்திராதி குடும்ப க்ஷேம யோகங்களின்றியும் முன்காலி பூமியாகியும் பின் புத்திராதி க்ஷேமத்துடன் சிலநாள் விருத்தியற்றபின் தன்குடும்ப மேன்மையுடைய சுகத்தை யடைந்து வரப்படுவ னென்றும், அப்படி இருவர் தலைமுறையின் பழையப்பிரகாரமே ஓர் தலைமுறை வரையில் இருந்தன. யோகங்களையு மடைந்து இடம்பொருளேவ லெவ்வித சுகங்களையு பறக்கடித்தும் கடன் முதலிய பல தொந்தரவுகளா லதிக வாதைகளை யடைந்தும் மனக்கவலையுடன் தனதானியக் குறைவுகளைப் படைத்து அப்படி இருவர் தலைமுறை சென்றபின் யோகமடைவர் இஃது யாரெனில் அம் மனைவாசியானோர் உடனூர்க்குரைத்த பலனெனக் காண்கவும்.

ஆறுக்கும் மேற்கண்ட பலனேயாம்.

ஏழாகவரின்

திரமில்லாத நூதனக் குடியிருப்பை யுடைய விடமென்றும், அவைகளாற் பலவாறுன கஷ்டநஷ்டத்தையுந் துக்காதி பாதை குடும்பவிருத்தியின்றி அம்மனை வாழ்பவர் பழைய இராஜயோகம் முதலிய செல்வங்களையு மிழந்து கடனுக்குள்ளாகி யந்தமனையை விட்டு வருநாளில் ஓர் செல்வனவ்விடத்திற் சனித்து அவனுற் சகல பாக்கியமும் பிரபல யோகங்களையு மதிகரித்த வாழ்வுகளையும் படைப்பனென்றும் விசேஷ யோகவானுக வாழ்வன் அம்மனையும் பின் வரவர பெருஞ் செல்வத்தை விளக்கினும் புத்திர லாபங்களை மாத்திரங் குன்றச் செய்யும் எனவறிய வேண்டியது.

எட்டாகவரின்

ஆயுள் செல்வத்தையுஞ் சொற்பகாலந் தரித்திரத்தையுங் கொடுக்கும். பலவித வியாதியுடையவராகி வாழ்வார்கள் சிலநாட் சென்றபின் ஒருவரேனுந் திரமா யம்மனையை ஆளார்கள் குடும்பக் குறைவுகளையும் பலவித கஷ்டத்தையும் பொருத்துவார்களெனக் காண்கவும்.

ஒன்பதாகவரின்

பெருஞ் செல்வமுங் கீர்த்தி மூர்த்தியான மகிமைகளையும் அனேக விதமான தனம் கிரகவாகனம் பூமி கன்று காலிகளைப் படைக்கினும் ஆயுள் தீர்க்க மில்லாராகியும் பலவித வியாதி முதலிய துன்பமுடையதும் இந்திரிய நஷ்டமுடையோராகி வாழ்ந்து வருவார்கள்.

அப்படி தலைமுறை மூன்றின் பின் ஆயுள்விருத்தியடைந்தும் பொருளின்றி வருந்துவார்கள். மகவுதோடமுண்டாமென் றறியவும்.

தெற்குமுகமான கிரகமாகியும்

ஒன்றுமிச்சமமாகவரின்

அம்மனையுடையார் வாழ்வோரிவர்கட்கு கடனதிகமாகியும் பொருளிழந்து தவித்தலும், பலவிதமான வருத்தமும் எவர் வரினும் சற்றுநாளிற் செல்வமழிந்தும் பலவாறுன கஷ்டநஷ்ட துன்பமடைவர் மாணதுக்கக் கிலேசமானவை பிடித்தே வரும். பகையும் கிலேசமுண்டாகி ஸ்திரமாயும் மனையில் பலபலவித வரிஷ்டபலன் தோன்றும் சிலகாலஞ் சென்றபின் செல்வமோங்கி வளம்பெறுதலும் பலதன யோகமுடைத்தாய் வாழ்வரென்க.

இரண்டாகவரின்

பெருமையான செல்வ வாழ்க்கையானது ஆறுவருஷத்துக்குள் உண்டாகும் அதுவும் பிரபலயோக முண்டாகும். அசன சயன போகபாக்கிய வாழ்வும் மிகமேன்மை நடந்த பின் றாழ்ந்துவரு மெனவறிக.

மூன்றாகவரின்

குடும்பவிருத்தி யதிகந் தோன்றும் எதிரியோர் மரிப்பார்கள் பலசெல்வமும் வரக்குன்றும் பகையுங்கேடும் அம்மனை யுதித்தவர்கள் கீர்த்திமானாக விருக்கினுஞ் செல்வ மடையாதுழலுவார்கள் பரதேச வாசியாகத் தவிப்பன் சிலநாட் கஷ்டமும் சிலநாட் செல்வமும் பொருந்திவாழ்வன் எனக் காண்க.

நான்காகவரின்

பொருட்பேறும் மகப்பேறும் மிகவுமேன்மை கல்வி முதலிய வராசாதி பத்தியஞ் சேரும் பொருள் பலவாறாக வதிகரிக்கும் அதிகாரங் கைகூடி வாழ்வர் சிலநாட் சென்ற பின் பொருட் குன்றும் பகையுண்டாகும் பலவித துக்க சோகபாதையை அனுபவிப்பார்க ளென்க.

ஐந்தாகவரின்

சோராக்கினிபாதை யந்த இல்லத்தில் நேரும் பலவித பொருளுங் கைகூடும் நஷ்டமதிகமாகும் மனக்கவலையும் பொருள்விரய மதிகரிக்கும் கடன்வரும் பின் இவ்விதக் குறைவுகள் யாவும் நீங்கும் வியாதி முதலியதுந் தீரும்.

ஆறாகவரின்

பாக்கியம் மிகுதியுண்டாகும் செல்வப் பெருக்கமும், பலயோகமும், மிகுந்து பின்னுண்டாகும் ஸ்திரவாழ்வு வாசமும் அடையார்கள் பலவித முயல்வினாலுந் திரவிய வந்தர்களானாலும் சித்தப்பிரமை நேத்திரக்கேடு முதலிய அவயோகங்களை யனுபவிப்பார்கள் அரசவதிகாரங்கூடும்.

ஏழாகவரின்

செல்வமதிகமுண்டாகினுந் தோன்றாது மறையும், குடும்ப விருத்தி யதிகரிக்கினும் பொருளின்றி வருந்துவார்கள் மனப்பயத்தையுந் துக்கத்தையு மனுபவித்த பின்பு சுகமடைவர் பொருள் பின்பிரபலமாம்.

எட்டாகவரின்

புத்திரச் செல்வமும் பல தனயோகமும் தனதானியக் கிரக வாகன மேன்மைகளும் அனேகவித செல்வயோகமும் பொருளுங் கூடும் கீர்த்தி மூர்த்தி புகழ் படைத்தவ ருண்டா வார்கள். பலதன செல்வமுண்டாகினும் ஸ்திரீ சந்ததியோர் நிலேப்பில்லாதடைவர் மனக்கிலேச துக்கங்களைப் பின்னனுப விப்பார்களென வறியவேண்டியது.

ஒன்பதாகவரின்

கீர்த்திமூர்த்தி மகிமையுடைய விடமாகும் இராஜ போகப் புகழும் பிரபல செல்வமுஞ் சேரும் அனேகவித லாபம் வரும். முன்னிருந்த தலைமுறை வரையிற் பல கஷ்ட நஷ்டமும் பொருந்தி கடனுல் வருந்திப் பலவித விரயமடை யினும் பின் பல செல்வமுங் கைகூடி யிழந்த பொருளும் பிரபல விருத்தியாகி யாவரும் மெய்க்கப் பூபதிபோல் வாழ் வார்கள் அப்படி ஓர் தலைமுறை சென்றபின் குன்றிக் கடன் முதலிய பல தொந்தரவுகளை யடைவார்கள் பகையும் விவாத வழக்கினுலும் பொருட்போம் குடும்ப மழிந்து மானஹீன மடைவார்கள்.

வடக்கு முகமாகியும்

ஒன்று மிச்சமாகவரின்

சிலதலைமுறை வரையிற் பிரபலதனம் படைக்கினும், அவ்விடம் பாழாகும் பல தனநஷ்டமும் ஆயுட்குடும்பக் குறைவும் நேரும்.

இரண்டு மிச்சமாகவரின்

கொடுங்கோல் பகை கடன் இல்லிடமிழந்து உழலுவர் பலவகை துக்க சோகமும் பலவித கஷ்டநஷ்ட மடைவார்கள்.

மூன்று மிச்சமாகவரின்

பலவகை இராஜபோகஞ் செல்வம்சேரும் குடும்ப விருத்தியுடன் மூன்றுதலை முறைவரை பெரும் பிரபல மடைந்து பின்னிழப்பார்.

நான்கு மிச்சமாகவரின்

அவ்விடங் திரமிராது பகையும் கவலையும் நேரும் பொருட்போம் புத்திரஹானியும் அபகீர்த்தியு முண்டாகும்.

ஐந்தாறு ஒன்பதாகவரின்

நித்தியசஞ்சலம் பிணிவாதை கடன் முதலிய பலவகை மனோ வருத்தமும் பொருட்சேதமும் அனேக இடம்விட்டுப்

பேருதல் குடும்ப ஸ்திரீகட் கரிஷ்டம் சித்தப்பிரமை முதலிய பல துன்பமும் முன் பல தனசெல்வ யோகமுடையவராகி வரவர தலைமுறை ஐந்தினுள் நசித்தும் கடனுற் றனமிழந்தும் ஆயுளற்ப முடையவராவர். ஆறு ஒன்பதாகினும் விதியே பலனுகும்.

ஏழ அல்லது எட்டாகவரின்

மூன்று தலைமுறை குன்றியுடன் தழைத்தோங்கும், செல்வ விருத்தியை செய்விக்கும், மிகவும் யோகமுண்டாகும், பிரபல ஜெயத்துடன் அனேகவித கடன் முதலிய பல தொந்தரவுகளும் நீங்கிச் சுகசௌக்கிய வெற்றியுண்டாகும். இஷ்ட காரியங்கள் சித்தியும், சித்தப்பிரமை முதலிய பலவித கஷ்ட ரோகமும் நீங்கிச் சுகம் பெறுவார்களெனக் காணல் வேண்டும்.

கன்னிகாசக்கர விபரமறிய

சிவதாரத்தில் இலட்சுமிப்பிரதம் இந்தக் கிரகம் கன்னிகா காலசக்கரம் மூன்று லிங்கங் கணக்கெழுதி அதற்குக் குறுக்கே ரேகை நாலுகீறி அடிவரையில் அசுவனி நட்சத்திர முதல் 27-நக்ஷத்திரங்களையும் மூன்று லக்கத்துக்கு மெழுதவும்.

கன்னிகா சக்கரம்

1-ம் பாதம்		மி		சி		அ	
2-ம் பாதம்	ரோ		தி அ		க தி		ச
3-ம் பாதம்	கா		பு உ		வி உ		பூ
4-ம் பாதம்	ப		பூ பூ		அ பூ		உ த்
	அ		ஆம		கேமூ		ரே

இதில் காலற்றநாள் கார்-உத்ரம்-உத்திராடம், உடலற்றநாள், மிருக-சித்-அவிட்டம், தலையற்றநாள் புனர்-விசாகம்-பூரட்டாதி.


இந்தச் சக்கரத்தை எண்ணிப் பார்க்க ஊர்த்தமுகம் எந்த குறுக்கு ரேகையில் சந்திரனிருக்கிறானோ அந்த ரேகையில் சூரியனிருந்தால் அக்கினி பயம், அங்காரகனிருந்தால் மிருத்தியு பயம், புதனிருந்தால் ரோகப்பிரதம், பிரகஸ்பதியிருந்தால் தானியஹானி, சுக்கிரனிருந்தால் கலகம், சனியிருந்தால் சோர பயம், ராகுவிருந்தால் தேகபீடை, கேது இருந்தால் சவம். இந்த கிரகம் கன்னிகா சக்கரத்தை எண்ணிக்கொண்டு வருகிற நக்ஷத்திரத்தில் ஊர்த்தமுகமாயிருக்கிற நக்ஷத்திரத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்தால் உத்தமம். இறங்கி வருகிற நக்ஷத்திரம் அதோமுகமாயிருக்கிற நட்சத்திரத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாகாது. ரோகணி-பூசம்-திருவாதிரை-திருவோணம்-அவிட்டம் - சதயம்-உத்திரம்-உத்திராடம்-உத்திரட்டாதி இந்த 9-ம் ஊர்த்தமுக நட்சத்திரம். ஆகையால் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாம். இதன்றி, துவசம் மெத்தை-பசுத்தொழுவம்-கோபுரம் இவைகள் கட்டலாம்.

திரிமுக நட்சத்திரத்தில் சுவர் வைக்கலாம்; பசு ஆடு மாடு குதிரை இவைகள் வாங்கலாம்.

ரேவதி-அஸ்தம்-புனர்பூசம்-சித்திரை-சுவாதி-அசுவனி-மிருகசிரம்-அனுஷம்-கேட்டை இந்த நட்சத்திரம் 9-ம் சுவர் வைக்கவும்; யானை குதிரை ஆடு மாடு இவைகள் வாங்கவும் உத்தமம்.

அதோமுக நட்சத்திரத்தில் கிணறு-குளம்-ஏரி இவைகள் எடுக்கலாம். விசாகம்-மூலம்-ஆயிலியம் - கார்த்திகை-பூரம்-பூராடம்-பூரட்டாதி-மகம்-பரணி இந்த 9-நட்சத்திரமும் அதோமுகமானதால் கிணறு-குளம்-ஏரிக்கால்-அகழி-சுரங்கம்-கணக்கு-அப்பியாசம்-களஞ்சியம் இவைகள் செய்யலாம். தனம் புதைக்கலாம். சங்கு ஸ்தாபனம் பண்ணலாம். ஸ்தம்பப் பிரதிஷ்டைபண்ண முதற் சாமம் உத்தமம். இரண்டாஞ் சாமம் சந்தோஷம். மூன்றாஞ்சாமம் அதமம். நாலாஞ் சாமம் சந்தியாகாலம். இராக்காலங்களிலும் கூடாது.

தேவதைக ளிருப்பிடம்
அறியும் யந்திரம்



விருத்தம்

இடுமனே யொன்றினுக்கு மெட்டெட்ட மறையைக்கீறில்
நடுவது பிரமஸ்தானம் நான்குமூலேயும் பேயாக்கம்
அடைவிலே யெட்டுந் தேவராகுவர் நாற்பத்தெட்டும்
குடிபலர் காகுமென்று கூறினர்மயனூர் வல்லோர்.

இதில் அவரவர்கட்கு வேண்டிய நாம நக்ஷத்திர எழுத்துக ளடங்கியது

இலக்கம்	நட்சத்திரம்	நான்குபாத எழுத்துகள்			
1	அசுவனி	சு	சே	சோ	லா
2	பரணி	லீ	லு	லே	லோ
3	கார்த்திகை	ஆ	ஈ	ஊ	ஏ
4	ரோகணி	ஒ	வா	வீ	வு
5	மிருகசீரிடம்	வே	வோ	கா	கி
6	திருவாதிரை	கூ	க்க	ஞ	ச
7	புனர்பூசம்	கே	கோ	ஹ	ஹி
8	பூசம்	ஹு	ஹே	ஹோ	ட
9	ஆயிலியம்	டி	டு	டே	டோ
10	மகம்	மா	மீ	மூ	மே
11	பூரம்	மோ	டா	டி	டு
12	உத்திரம்	டே	டோ	பா	பீ
13	அஸ்தம்	பூ	ஷ	ண	ட்டா
14	சித்திரை	பே	போ	ரா	ரி
15	சுவாதி	ரூ	ரே	ரோ	த
16	விசாகம்	தீ	து	தே	தோ
17	அநுஷம்	நா	நீ	நூ	நே
18	கேட்டை	நோ	யா	யி	யூ
19	மூலம்	யே	யோ	ப்பா	ப்பி
20	பூராடம்	ப்பூ	க்த	ப	ட
21	உத்திராடம்	பே	போ	ஜ	ஜி
22	திருவோணம்	ஜு	ஜே	ஜோ	கோ
23	அவிட்டம்	க	கி	கு	கே
24	சதயம்	கோ	ண	ஸி	ஸு
25	பூரட்டாதி	ஸே	ஸோ	த	தி
26	உத்திரட்டாதி	து	ஷ	த்தா	த்தி
27	ரேவதி	தே	தோ	ச்சா	ச்சி

அமிர்த சித்த மரண யோகங்களும் அடங்கியது

ஞாயிறு	திங்கள்	செவ்வா	புதன்	வியாழ	வெள்ளி	சனி
சித்த	சித்த	சித்த	மரண	அமிர்த	அமிர்த	சித்த
மரண	சித்த	சித்த	சித்த	சித்த	சித்த	சித்த
சித்த	மரண	மரண	அமிர்த	மரண	சித்த	அமிர்த
சித்த	அமிர்த	அமிர்த	சித்த	மரண	மரண	சித்த
சித்த	அமிர்த	சித்த	மரண	மரண	சித்த	சித்த
சித்த	சித்த	மரண	சித்த	மரண	சித்த	சித்த
சித்த	அமிர்த	சித்த	சித்த	அமிர்த	சித்த	சித்த
சித்த	மரண	சித்த	சித்த	அமிர்த	மரண	சித்த
சித்த	மரண	சித்த	சித்த	சித்த	மரண	மரண
மரண	மரண	சித்த	சித்த	அமிர்த	மரண	அமிர்த
மரண	சித்த	சித்த	அமிர்த	சித்த	சித்த	சித்த
அமிர்த	சித்த	அமிர்த	அமிர்த	மரண	சித்த	மரண
அமிர்த	சித்த	சித்த	மரண	சித்த	அமிர்த	மரண
சித்த	மரண	சித்த	சித்த	சித்த	சித்த	மரண
சித்த	அமிர்த	சித்த	சித்த	அமிர்த	மரண	அமிர்த
மரண	மரண	மரண	சித்த	சித்த	சித்த	சித்த
மரண	சித்த	மரண	சித்த	சித்த	சித்த	சித்த
மரண	சித்த	மரண	சித்த	மரண	மரண	சித்த
அமிர்த	சித்த	அமிர்த	மரண	மரண	அமிர்த	சித்த
சித்த	மரண	சித்த	அமிர்த	சித்த	மரண	சித்த
அமிர்த	மரண	மரண	அமிர்த	சித்த	சித்த	சித்த
அமிர்த	அமிர்த	சித்த	சித்த	சித்த	மரண	மரண
மரண	சித்த	சித்த	மரண	சித்த	சித்த	மரண
சித்த	சித்த	மரண	சித்த	மரண	சித்த	அமிர்த
சித்த	மரண	மரண	அமிர்த	சித்த	சித்த	மரண
அமிர்த	சித்த	அமிர்த	சித்த	சித்த	சித்த	சித்த
அமிர்த	சித்த	சித்த	மரண	மரண	அமிர்த	மரண

உ

பரமபதி துணை

பின் வரும்

சோடச பொருத்தத்திற்கு பலன்கள்

கெற்பம்

1-வந்தால் நால்வகை ஜாதிகளுக்கும் பொருந்தி நடக்கும்
2-வந்தால் வறுமை மத்திமம்
3-வந்தால் வேடர்களுக்காகும்
4-வந்தால் வறுமை மத்திமம்
5-வந்தால் அரசு சகல காரியமும் ஜெயம்
6-வந்தால் வறுமை நீசர்களுக்கு உத்தமம்
7-வந்தால் வேள்வி உத்தமம் சுபமுண்டாம்
8-வந்தால் வறுமை இதுகளுடன் மனையும் சீக்கிரத்தில் முடியாது.

ஆதாயம்

1-க்கு விசேஷ பலனுண்டாம்
2-க்கு செல்வமுண்டாம்
3-க்கு கீர்த்தியும் சவுக்கியமும் உண்டாம்
4-க்கு சகல சவுக்கியமும் உண்டாம்
5-க்கு மத்திம பலனுண்டாம்
6-க்கு மத்திம பலனுண்டாம்
7-க்கு சுபமும் ஞானங்களு முண்டாம்
8-க்கு சுபசந்தோஷ முண்டாம்
9-க்கு மிகுந்த போகபாக்கிய முண்டாம்
10-க்கு சகல காரியமும் மத்திம பலனும்
11-க்கு தரும சிந்தையுஞ் செல்வமு முண்டாம்
12-க்கு சமஸ்தமும் உத்தமபலனும் நடக்கும்.

ஆதாயச் சிலவு

1-க்கு சகலமும் குன்றிப் போகும்
2-க்கு வீடு தீப்படும், மாண பயமுண்டாம்

3-க்கு குடும்பம் மிகுந்த சுபமாக விருக்கும்
4-க்கு மத்திமம்
5-க்கு மிகுந்த சுபமும் வீண் செலவுகளும் நேரிடும்
6-க்கு மத்திமம்
7-க்கு மிகுந்த சவுக்கியத்தில் மனஸ்தாப முண்டாம்
8-க்கு இலக்குமி வாசமும், பிணி முதலியதுகளு முண்டாம்
9-க்கு மத்திமம்
10-க்கு மாரண பயமுண்டாம்

யோனி பலனறிவது

சிம்ம யோனி-போகபாக்கியமும், செல்வமும் உண்டாம்.

கரயோனி-மனஸ்தாபம், குடும்ப கலகம், பொருள் நஷ்ட முதலாகியதுகளு முண்டாம்.

துவஜயோனி-தனப்பிராப்தியும், குடும்ப சம்பத்தும், புத்திர சம்பத்தும் உண்டாம்.

சுவானயோனி-தேகத்தில் பிணிகளும், குடும்ப கலகமும், இஷ்ட பந்துக்கள் விரோதமும் உண்டாம்.

கஜயோனி-மிகுந்த செல்வமும், இலட்சுமி லாபமும், பந்துக் கள் நேசமும் உண்டாம்.

புகையோனி-கொலை, களவு, மனவியாகூலம், சத்துருக்கள் நேச முதலாகியது முண்டாம்.

இடபயோனி-அந்த மனையினல் இலட்சுமி கடாட்சமும், பொருள் வரவும், உத்தியோக முதலாகியதுகளும் உண்டாம்.

காகயோனி-அந்த மனையில் நோயும், துக்கமும் எந்நாளும் உண்டாகும்.

வார பலனறிவது

1-க்கு ஆதிவாரம்: குரோதமுண்டு மத்திமம். 2-க்கு சோமவாரம்: நாளுக்குநாள் மிகுந்த நலமுண்டாம். 3-க்கு மங்களவாரம்: பழம்பொருளும் புதப்பொருளும் போவது மன்றி, தன நாசமு முண்டாம். 4-க்கு புதவாரம்: மிகுந்த லட்சுமீகா முண்டாம். 5-க்கு குருவாரம்: புத்திர சம்பத் தும், தனசம்பத்து முண்டாம். 6-க்கு சுக்கிரவாரம்: சகல காரியமும் நன்மையுண்டாம். 7-க்கு சனிவாரம்: சோரபயம்; மத்திமபல னுண்டாம்.

திதிபல னறிவது

1-க்கு பிரதமை: உத்தமத்தில் மத்திமம். 2-க்கு துதியை: இன்பமுண்டாம். 3-க்கு திரிதியை: ஜெயமுண்டாம். 4-க்கு சதுர்த்தி: மத்திம பலன். 5-க்கு பஞ்சமி புத்திர சம்பத்தும், நன்மையுமுண்டாம். 6-க்கு சஷ்டி: மத்திமபலன். 7-க்கு சப்தமி: போகபாக்கியமும், சுபமுமுண்டாம். 8-க்கு அஷ்டமி: சுக்கிலபக்ஷம் சுபம், கிருஷ்ண பக்ஷம் வியாதியுண்டாம். 9-க்கு நவமி: மனை தீபமில்லாமல் பாழாகும். 10-க்கு தசமி: பாக்கியமும், நன்மையு முண்டாம். 11-க்கு ஏகாதசி: சிறுமையுண்டாம், சுக்கிலபக்ஷம் சுபமுண்டாம். 12-க்கு துவாதசி: அன்னவஸ்திர முதலாகியதும் உண்டாவதோடு, கல்வியுமுண்டாம். 13-க்கு திரயோதசி: கல்வி முதலாகிய சம்பத்துகளு முண்டாம். 14-க்கு சதுர்த்தசி: மனை பாழாம். 15-க்கு பூரணை: எல்லாம் உத்தமமாய் நடக்கும், சுபமுண்டாம்.

நட்சத்திர பலனறிவது

1-க்கு அசுவினி: எல்லாம் வசியமாகும், வெற்றியுண்டாம்.
2-க்கு பரணி: வீடு கட்டி முடியுமுன் எஜமானிறந்து போவான்.
3-க்கு கார்த்திகை: அந்த வீடு அக்கினியால் பயமுண்டாம்.
4-க்கு ரோகிணி: ஜெயமுண்டாம்.
5-க்கு மிருகசிரிடம்: மிகுந்த சுபமுண்டாம்.
6-க்கு திருவாதிரை: குறைவில்லாத சவுக்கியமா யிருந்தாலும், மத்திம பலனாகவே நடக்கும்.
7-க்கு புனர்பூசம்: புத்திர பாக்கியமும், செல்வமும் உண்டாம்.
8-க்கு பூசம்: புத்திரவிர்த்தி, சுபவிர்த்தி யுண்டாம்.
9-க்கு ஆயிலியம்: சௌக்கிய மில்லாமல் மரணபயம் உண்டாம்.
10-க்கு மகம்: உத்தமத்தில் மத்திமம்.
11-க்கு பூரம்: உத்தமத்தில் மத்திமம்.
12-க்கு உத்திரம்: நாளுக்குநாள் மிகுந்த சுபகாரமுண்டாம்.
13-க்கு அஸ்தம்: புத்திரவிர்த்தி முதலானது சிலநாளுண்டாயிருக்கும்.
14-க்கு சித்திரை: பிணி முதலாகிய மத்திமபல னுண்டாம்.
15-க்கு சுவாதி மிகுந்த சுகமுண்டாம்.
16-க்கு விசாகம்: துன்பமாகிய சஷ்டாஷ்டகம் உண்டாம்.
17-க்கு அனுஷம்: சகல சவுக்கியமும், கல்வித் திறமையும் உண்டாம்.

18-க்கு கேட்டை: அசுபகரமாகிய குடும்ப விரோதம், பகை முதலாகியதும் உண்டாம்.

19-க்கு மூலம்: எஜமானுக்கு நோய் முதலாகிய மத்திம பலன்க ளுண்டாம்.

20-க்கு பூராடம்: மனை பாழடைந்து போவதுமன்றி, நோய் முதலாகிய துன்பமுண்டாம்.

21-க்கு உத்திராடம், மிகுந்த சுபகர முண்டாம்.

22-க்கு திருவோணம்: புத்திரவிருத்தி முதலாகிய துண்டா யிருந்தபோதிலும், சுபங்கள் மத்திம பலனாக நடக்கும்.

23-க்கு அவிட்டம்: கட்டினவர் சிலகாலம் அனுபவித்து மற்றவர்கள் அனுபவிப்பார்கள்.

24-க்கு சதயம்: இலட்சுமி வாசம் பண்ணுவதும், சகல வெற் றியு முண்டாம்.

25-க்கு பூரட்டாதி: சந்ததி யில்லாமல் மத்திம பலனாய் நடக்கும்.

26-க்கு உத்திரட்டாதி: போகபாக்கிய மிகுந்த சுபகர முத லாகியதும் உண்டாம்.

27-க்கு ரேவதி: அந்த மனையில் வாசம் பண்ணுபவர்களுக்கு எந்நாளும் பிணிக ளுண்டாம்.

இராசி பலனறிவது

1-க்கு மேஷம்: குடும்பம் விருத்தியா யிருந்தபோதிலும் பல பிணிகளும் உண்டாம்.

2-க்கு விருஷபம்: மகிக்கத்தகுந்த பெருமையும், புண்ணிய விர்த்தியு முண்டாம்.

3-க்கு மிதுனம்: தன முதலாகிய துண்டாயிருந்த போதி லும், மத்திம பலனாய் நடக்கும்.

4-க்கு கடகம்: சுப ஜெயங்களும், பூரணாயுளும் உண்டாம்.

5-க்கு சிங்கம்: வசீகரம், செல்வம் இதுகளுண்டாம்.

6-க்கு கன்னி: ஞானமும், ஆயுள் விருத்தியும் உண்டாம்.

7-க்கு துலாம்: போக பாக்கியமும், செல்வமும் உண்டாம்.

8-க்கு விருச்சிகம்: சகல நன்மையும், ஒன்றுக்கொன்று பொருந்தாமலே நடக்கும்.

9-க்கு தனுசு: சுபகரமும், செல்வமும் சமமாக நடக்கும்.

10-க்கு மகரம்: நாளுக்குநாள் பொருள் சவுக்கியமும், புத்திர விருத்தியும் உண்டாம்.

11-க்கு கும்பம்: செல்வமும், துன்பமும் இரண்டுங் கலந்து நடக்கும்.

12-க்கு மீனம்: ஜெயமுண்டாயிருந்தபோதிலும், தாமதமாய் நடக்கும்.

அம்ச பலனறிவது

1-க்கு தான்யாம்சம்: நன்மை முதலாகிய சுபகரங்களுண்டாம்.

2-க்கு நிதனும்சம்: வறுமை முதலான பிணிகளுண்டாம்.

3-க்கு சத்தியாம்சம்: சுபகரங்களும், சுபசோபனுதிகளுமுண்டாம்.

4-க்கு நிர்ப்பிதியம்சம்: சுக சம்பத்துண்டாம்.

5-க்கு புத்தியம்சம்: நல்லறிவு, கல்வித்திறமை, காவிய லக்ஷணங்களுண்டாம்.

6-க்கு கிலீபாம்சம்: கலகம், குடும்ப அபிவிர்த்தி முதலாகியதுண்டாம்.

7-க்கு தஸ்காரம்சம்: வறுமை, தீமை முதலாகியதுண்டாம்.

8-க்கு நரபதியம்சம்: வெற்றி ஜெயப்பிரதாபம் உண்டாம்.

9-க்கு பிரஜாம்சம்: புத்திரவிருத்தி, குடும்பவிருத்தி முதலாகிய சுபங்களுண்டாம்.

வம்ச பலனறிவது

1-க்கு பிரமவம்சம்: மிகுந்த சுபகரமுண்டாம்,

2-க்கு க்ஷத்திரியவம்சம்: ஜெயமும் வெற்றியுமுண்டாம்.

3-க்கு வைசியவம்சம்: தனமும், செல்வமுமுண்டாம்.

4-க்கு சூத்திரவம்சம்: தானிய பலன் மத்திபமாக நடக்கும்.

நேத்திர பலனறிவது

ஒருகண்—சமபலனுக நடக்கும்.

இருகண்—மிகுந்த சுபமுண்டாம்.

குருட்டுக்கண்—அதமம்; கூடாது.

சூத்திர பலனறிவது

1-க்கு பாலசூத்திரம்: உத்தமபலனாய் நடக்கும்.
2-க்கு குமாரசூத்திரம்: சுபகாமுண்டாம்.
3-க்கு அரசசூத்திரம்: நன்மையுண்டாம்.
4-க்கு விருத்தசூத்திரம்: மத்திமபலனாய் நடக்கும்.
5-க்கு மாணசூத்திரம்: தீமையாகிய பலன்களுண்டாம்.

யோக பலனறிவது

அமிர்தயோகம்: சித்தயோகம்: சுபபலனுண்டாம்.
மாணயோகம்: எல்லா விஷயங்களுக்கும் கூடாவாம்.

கண பலனறிவது

கணங்கள் ஒன்றாகில் நலமுண்டாம். தேவகணமும் மனித கணமும் வந்தால் உத்தம பலனுண்டாம். தேவ கணமும் இராக்ஷத கணமும் வந்தால் பகையும், சத்துருக்கள் விருத்தியும் உண்டாம். இராக்ஷச கணமும் மனிதகணமாகில் மரணமும் தீதும் உண்டாம்.

குண பலனறிவது

சாத்விதகுணம்: உத்தம பலமாம். இராசத குணம்: மத்திம பலமாம். தாமதகுணம்: அதம பலனும்.

பஞ்சக பலனறிவது

1-க்கு மிருத்தியுபஞ்சகம், 2-க்கு அக்கினி பஞ்சகம், 4-க்கு இராஜபஞ்சகம், 6-க்கு சோரபஞ்சகம், 8-க்கு ரோக பஞ்சகம், 3-5-7 இவை நிஷ்பஞ்சகமாம், இதை எல்லா சுபங்களுக்கும் வைத்திருக்கின்றது.

தாரா பலனறிவது

3-5-7-வருமானால் கொலை, பிணி, வறுமை முதலாகி யதுமுண்டாம். 1-2-4-6-வந்தால் செல்வம், புத்திர விருத்தி, வாழ்வு, மகிழ்ச்சி முதலாகிய சிறப்புகளுமுண்டாம்.

சந்திர பலனறிவது

1-3-6-7-10-11-வந்தால் சுபகாமுண்டாம். பூர்வ பக்ஷம் 2-5-9-வந்தால் சுபம். அமரபக்ஷத்தில் 1-2-3-8-வந் தால் சுபம். மற்றவை தீது.

அசுவனி நட்சத்திரம்

ஜெனனதினம் சு-சே-சோ-லா-அசுவனி நக்ஷத்திரத்தை யுடையவருக்கு ரோகினி நட்சத்திரம் உத்தமம். அதன்

விபரம்: தாரா பலன் 4-க்கு க்ஷேமம். அதிபதி குருவாகனம் யானை நாமதேய பலன் க்ஷேமகரம். அதிபதிபலன் தைரியம். வாகன பலன் லட்சுமி லாபம். சந்திர பலன் 2-க்கு சுக்கில பக்ஷம் உத்தமம், வாரத்தில் சோமவாரமானால் அமிர்த யோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் வர்த்தமான யோகம் இதன் பலன் அதிகலாபம். கௌரி பஞ்சாங்க காலத்தில் 2-நாழிகைக்குள்ளாக அமிர்த வேளையில் சந்திரன் தினகால வோரையிலும், 7½-நாழிகைக்குமேல் 10-நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும், குருதின கால வோரையிலும் 12½-நாழிகைக்குமேல் 15-நாழிகைக்குள்ளாக லாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் மனைமுகூர்த்தஞ் செய்ய உத்தமம்.

ஷை ரோகினி நட்சத்திரம் புதவாரமானால் சித்த யோகம் ஆநந்தாதி யோகத்தில் சுபயோகபலன் சுபப்பிரதம் கௌரி பஞ்சாங்கயோகம் 3¾-நாழிகைக்குமேல் 5-நாழிகைக் குள்ளாக அமிர்த வேளையிலும் சந்திரன் தினகால வோரையிலும் 7½-நாழிகைக்குமேல் 10-நாழிகைக்குள் சுபவேளையிலும் குருதின கால வோரையிலும் செய்ய உத்தமம்.

பரணி நட்சத்திரம்

ஜெனனதினம் லி-லு-லே-லோ பரணி நட்சத்திரமாக உடையவருக்கு ரேவதி நட்சத்திரம் உத்தமம். அதன் விபரம்: தாராபலன் 8-க்கு மைத்திரம் அசுபதி சுக்கிரன் வாகனம் கருடவாகனபலன் சுகவிருத்தி சந்திரபலன் 12-க்கு கிருஷ்ணபக்ஷம் உத்தமம். வாரத்தில் ஆதிவாரமானால் அமிர்த யோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் வர்த்தமான யோகம் இதன்பலன் அதிக லாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் உதயமுதல் 2½-நாழிகைக்கு மேல் 5-நாழிகைக்குள்ளாக உத்தியோக வேளை அல்லது லாபவேளையில் சுக்கிரன் தினகால வோரையிலும் மனை முகூர்த்தஞ் செய்வதோடு மற்ற சுபங்களையும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் சோமவாரமானால் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மாதங்கயோகம் பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்கவேளை இரண்டரை நாழிகைக்குள்ளாக அமிர்த வேளையிலும் சந்திரன் தினகால வோரை

யிலும் அல்லது 5-நாழிகைக்குமேல் 7½-நாழிகைக்குள் உத்தி யோக வேளையிலும் குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் குருவாரமானல் சித்த யோகம்-ஆனந்தாதி யோகத்தில் மித்திரயோகி பலன் இராச்சியலாபம். கௌரி பஞ்சாங்க வேளை 2½ நாழிகைக்குள்ளாக உத்தியோக வேளையிலும் குருதின காலவோரையிலும் அல்லது 12½ நாழிகைக்கு மேல் 15-நாழிகைக்குள்ளாக லாபவேளையிலும் சந்திரன் தினகால வோரையிலும் மேலே சொல்லிய சுபங்களைச் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் சுக்கிரவாரமானல் அமிர்த யோகம். ஆனந்தாதியோகத்தில் ஸ்ரீவர்ச்ச யோகம். பலன் லட்சுமி லாபம். கௌரி பஞ்சாங்க வேளையில் 10-நாழிகைக்கு மேல் 11¼-நாழிகைக்குள் அமிர்த வேளையிலும் குரு தினகால வோரையிலும் 17½-நாழிகைக்கு மேல் 18¾- நாழிகைக்குள்ளாக லாப வேளையிலும் சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

கார்த்திகை நட்சத்திரம்

ஜெனனதினம் அ-இ-உ-எ கார்த்திகை நட்சத்திரமாக உடையவருக்கு பூசநட்சத்திரம் உத்தமம். இதன் விபரம்: தாராபலன் ஆறுக்கு சாதனம் அதிபதி சந்திரன் வாகனம் ஜம்புகம் நாமதேயபலன் காரியசாதனம் அதிபதி பலன் கீர்த்தி வாகன பலன் சவுக்கியம். முதற்பாகத்துக்குள் ஜனித்தவர்களுக்கு மூன்றுஞ் சந்திரன் உத்தமம். வாரத்தில் சோமவாரமானல் சித்த யோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் பிரஜாபதியோகம். இதன் பலன் இஷ்ட சித்தி. கௌரி பஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக அமிர்த வேளையிலும் சந்திரன் தினகால வோரையிலும் அல்லது பனிரண்டரை நாழிகைக்குமேல் பதினைந்து நாழிகைக்குள்ளாக லாப வேளையிலும் சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை பூசநட்சத்திரம் குருவாரமானல் அமிர்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் சுபயோகம். இதன் பலன்: சுபப்பிரதம். கௌரிபஞ்சாங்கம் இரண்டரை நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும் குருதினகால வோரையிலும் அல்லது பனிரண்டரை நாழிகைக்குமேல் பதினைந்து நாழிகைக்குள்ளாக லாப வேளையிலும் சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ரோகணி நட்சத்திரம்

ஜெனனதினம் ஒ-வ-சி-வு ரோகணி நட்சத்திரமாக உடையவருக்கு ரேவதி நட்சத்திரம் உத்தமம். இந்த விபரம்: தாராபலன் ஆறுக்கு சாதனம் அதிபதி சந்திரன் வாகனம் ஜம்புகம் நாமதேய பலன் காரியசாதனம் அதிபதி பலன் கீர்த்தி வாகன பலன் சவுக்கியம் சந்திரபலன் பதினோராஞ் சந்திரன் உத்தமம். வாரத்தில் சோமவாரமானல் சித்தயோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் வர்த்தமான யோகம். இதன்பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்க வேளை இரண்டரை நாழிகைக்குள்ளாக அமிர்த வேளையிலும் சந்திரன் தினகால வோரையிலும் மனை முதலாகிய சுபம் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் குருவாரமானல் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மித்திரயோகம் பலன் இராச்சிய லாபம். கௌரி பஞ்சாங்க வேளையில் இரண்டரை நாழிகைக் குள்ளாக உத்தியோக வேளையிலும் குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் சுக்கிரவாரமானல் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் ஸ்ரீவர்ச்ச யோகம். இதன்பலன் இலட்சுமி லாபம். கௌரி பஞ்சாங்க வேளை பத்துநாழிகைக்கு மேல் ஒண்ணேகால் நாழிகைக்குள்ளாக அமிர்த வேளையிலும் குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

மிருகசிர நட்சத்திரம்

ஜெனனதினம் வே-வோ-க-கி மிருகசிர நட்சத்திரமாக உடையவருக்கு பூசநட்சத்திரம் உத்தமம். அதன் விபரம் தாராபலன் நாலுக்கு க்ஷேமம், அதிபதி குரு வாகனம் யானை நாமதேய பலன் தைரியம் வாகனபலன் இலட்சுமி லாபம். சந்திரபலன் முதல் இரண்டு பாதத்துக்குள் ஜனித்தவர்களுக்கு மூன்றுஞ் சந்திரன்பலன் திரவிய லாபம் உத்தமம். மூன்றும்பாதம் நான்காம்பாதம் ஜனித்தவர்களுக்கு இரண்டாஞ் சந்திரன் சுக்கிலபட்சம் உத்தமம். வாரத்தில் சோமவாரமானல் சித்தயோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் பிரஜாபத்தி யோகம்; இதன்பலன் இஷ்ட சித்தி. கௌரி பஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் அமிர்த வேளையிலும் சந்திரன் தினகால வோரையிலும் அல்லது பனிரெண்டரை நாழி

கைக்குமேல் பதினைந்து நாழிகைக்குள்ளாக லாபவேளையி லும் சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை பூச நட்சத்திரம் குருவாரமானல் அமிர்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் சுபயோகம். இதன் பலன் சுபப் பிரதம். கௌரி பஞ்சாங்கம் இரண்டரை நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும் குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

திருவாதிரை நட்சத்திரம்

ஜெனன தினம் கூ-க்-க-ஞ-ச-திருவாதிரை நட்சத்திர மாக உடையவருக்கு அஸ்த நட்சத்திரம் உத்தமம். இதன் விபரம்: தாராபலன் எட்டுக்கு மைத்திரம் அதிபதி சுக்கிரன் வாகனம் கருடன் நாமதேய பலன் சிநேகம் அதிபதி பலன் சந்தோஷம் வாகனபலன் சுகவிருத்தி சந்திரபலன் நாலாஞ் சந்திரன் பலன் மத்திபம் கிருஷ்ணபக்ஷம் உத்தமம் வாரத் தில் சுக்கிரவாரமானல் அமிர்தயோகம் கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் அமிர்தயோகம் அதன் பலன் வஸ்திர லாபம். கௌரி பஞ்சாங்க காலத்தில் பதி னேழரை நாழிகைக்குமேல் ஒண்ணேகால் நாழிகைக்குள் ளாக சுகவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

புனர்பூச நட்சத்திரம்

ஜெனன தினம் கே-கோ-ஹ-ஹி புனர்பூசம் சென்ம நட்சத்திரமாக உடையவருக்கு உத்திரட்டாதி நட்சத்திரம் உத்தமம். அதன் விபரம்: தாராபலன் இரண்டுக்கு சம் பத்து அதிபதி புதன் வாகனம் குதிரை நாமதேய பலன் சம் பத்கரம் அதிபதி பலன் காந்தி வாகனபலன் அர்த்தலாபம் சந்திர பலன்; முதல் மூன்று பாதத்துக்குள் ஜெனித்தவர்க ளுக்கு பத்தாஞ் சந்திரன் உத்தியோக விருத்தி உத்தமம். நாலாம் பாதத்தில் ஜெனித்தவர்களுக்கு ஒன்பதாஞ்சந்திரன் சுக்கிலபக்ஷம் உத்தமம். வாரத்தில் சோமவாரமானல் சித்த யோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத் தில் கதாயோகம்; இதன்பலன்: மத்திமம். கௌரி பஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக அமிர்த வேளை யிலும் சந்திரன் தினகால வோரையிலும் அல்லது பனிரெண் டரை நாழிகைக்குமேல் பதினைந்து நாழிகைக்குள்ளாக லாப வேளையிலும் சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை உத்திரட்டாதி நட்சத்திரம் புதவாரமானல் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் லம்பயோகம் இதன் பலன்

போஜனலாபம்; கௌரிபஞ்சாங்கம் ஏழரை நாழிகைக்குமேல் பத்து நாழிகைக்குள் சுபவேளையிலும் குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை உத்திரட்டாதி நட்சத்திரம் குருவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் சந்திர யோகம் பலன் சுபமுண்டாகும். கௌரிபஞ்சாங்க காலத்தில் காலை இரண்டரை நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும் குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை உத்திரட்டாதி நட்சத்திரம் சுக்கிரவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் துவசயோகம் இதன்பலன் வஸ்து லாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்குமேல் பதினெட்டேமுக்கால் நாழிகைக்குள் லாபசுக வேளையிலும் சுக்கிரன் தினகால வோரையிலும் மனைமுகூர்த்தஞ் செய்ய உத்தமம்.

பூச நட்சத்திரம்

ஜெனனதினம் ஹூ-ஹே-ஹோ-ட-பூச நட்சத்திரமாக உடையவருக்கு ரேவதி நட்சத்திரம் உத்தமம். இதன் விபரம் தாராபலன் இரண்டுக்கு சம்பத்துதாரை அதிபதி புதன் வாகனம் குதிரை நாமதேயபலன் சம்பத்காம் அதிபதி பலன் காந்தி வாகனபலன் அர்த்தலாபம்; சந்திரபலன் ஒன்பதாஞ்சந்திரன் சுக்கிலபட்சம் உத்தமம்; வாரத்தில் சோம வாரமானால் சித்தயோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் மாதங்கயோகம் பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் அமிர்தவேளையிலும், சந்திரதின காலவோரையிலும் அல்லது 12½-நாழிக்குமேல் பதினைந்து நாழிக்குள் லாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் குருவாரமானால் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மித்திரயோகம் பலன் இராச்சிய லாபம்; கௌரி பஞ்சாங்ககாலத்தில் இரண்டரை நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும் குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் சுக்கிர வாரமானால் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் ஸ்ரீவர்ச்சயோகம் இதன் பலன் இலட்சுமி லாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் 17½-நாழிகைக்குமேல் பதினெட்டேமுக்காற் நாழிகைக்குள் லாப வேளையிலும் சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஆயிலிய நட்சத்திரம்

ஜெனனதினம் டி-டு-டே-டோ ஆயிலிய நட்சத்திரமாக உடையவருக்கு அசுவினி நட்சத்திரம் உத்தமம். இதன் விபரம் தாராபலன் இரண்டுக்கு சம்பத்து அதிபதி புதன் வாகனம் குதிரை நாமதேயபலன் சம்பத்காம் அதிபதிபலன் சாந்திவாகனபலன் அர்த்தலாபம் சந்திரபலன் பத்துக்கு உத்தியோக விருத்தி உத்தமம்; வாரத்தில் சோமவாரமானல் சித்தயோகம். கதம்பேசமகாரிஷி சொல்லிய ஆனந்தாதியோகத்தில் இராக்ஷசயோகம் இதன்பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் அமிர்தவேளையிலும் சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அசுவனிநட்சத்திரம் குருவாரமானல் அமிர்த யோகம்-ஆனந்தாதியோகத்தில் மானசயோகம்-இதன்பலன் இராஜ சன்மானம் கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும் குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அசுவனி நட்சத்திரம் சுக்கிரவாரமானல் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் வச்சிரயோகம்; இதன் பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்குமேல் பதினெட்டேமுக்கால் நாழிகைக்குள் லாப வேளையிலும் சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

மக நட்சத்திரம்

ஜெனனதினம் மா-மீ-மூ-மே-மகம் ஜென்ம நட்சத்திரமாக உடையவருக்கு அஸ்தநட்சத்திரம் உத்தமம். இதன் விபரம் தாராபலன் நாலுக்குக்ஷேமம்; அதிபதி குருவாகனம் யானை நாமதேயபலன் க்ஷேமகாம்; அதிபதிபலன் தைரியம் வாகன பலன் இலட்சுமிலாபம்; சந்திரபலன் இரண்டுக்கு சுக்கிலபட்சம் உத்தமம். வாரத்தில் சோமவாரமானல் சித்தயோகம். கதம்பேசமகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் வச்சிரயோகம் இதன்பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக அமிர்த வேளையிலும் சந்திரன் தினகாலவோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை மகநட்சத்திரம் சுக்கிரவாரமானல் அமிர்த யோகம். கதம்பேசமகாரிஷி சொல்லிய ஆனந்தாதியோகத்தில் அமிர்தயோகம். இதன்பலன் வஸ்திரலாபம் கௌரி பஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்குமேல் பதி

னெட்டே முக்கால் நாழிகைக்குள் லாபசுகவேளையிலும் சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

பூர நட்சத்திரம்

ஜெனனதினம் மோ - யா - டி - டு - பூரநட்சத்திரமாக உடையவருக்கு ரேவதி நட்சத்திரம் உத்தமம். அதன்விபரம் தாராபலன் எட்டுக்குமாத்திரம் அதிபதி சுக்கிரன் வாகனம் கருடன் நாமதேயபலன் சினேகம் அதிபதிபலன் சந்தோஷம் வாகனபலன் சுகவிருத்தி சந்திரபலன் எட்டுக்கு கிருஷ்ணபக்ஷம் உத்தமம்; வாரத்தில் ஆதிவாரமானால் அமிர்தயோகம். கதம்பேசமகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் வர்த்தமான யோகம் பலன் அதிகலாபம். கௌரி பஞ்சாங்க காலத்தில் இரண்டரைநாழிகைக்கு மேல் ஐந்து நாழிகைக் குள்ளாக உத்தியோக வேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதிநட்சத்திரம் சோமவாரமானால் சித்த யோகம். ஆனந்தாதியோகத்தில் மாதங்கயோகம் பலன் சொற்பகஷ்டம். கௌரிபஞ்சாங்க காலத்தில் பனிரெண்டரை நாழிகைக்குமேல் பதினைந்து நாழிகைக்குள்ளாக லாப வேளையிலும், சுக்கிரன் தினகாலவோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் குருவாரமானால் சித்த யோகம். ஆனந்தாதியோகத்தில் கெதாயோகம்; பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக உத்தியோகவேளையிலும் குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் சுக்கிரவாரமானால் சித்த யோகம். ஆனந்தாதியோகத்தில் சித்தயோகத்தில்பலன் சகலசித்தி கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்குமேல் $18\frac{3}{4}$-நாழிகைக்குள் லாபவேளையிலும் சுக்கிரன் தினகாலவோரையிலும் செய்யஉத்தமம்.

உத்திர நட்சத்திரம்

ஜெனனதினம் டே-டோ-ப-பி-உத்திர நட்சத்திரமாக உடையவருக்கு அசுவனி நட்சத்திரம் உத்தமம். அதன் விபரம் தாராபலன் எட்டுக்கு மைத்திரம்; அதிபதிசுக்கிரன் வாகனம் கருடன் நாமதேயபலன் சினேகம் அதிபதிபலன் சந்தோஷம் வாகனபலன் சுகவிருத்தி சந்திரபலன் முதற் பாத முடையவருக்கு ஒன்பதாஞ்சந்திரன் உத்தமம். இரண்டாம்பாதம் மூன்றும்பாதம் நான்காம்பாத முடையவருக்கு எட்டாஞ் சந்திரன் சுக்கிலபட்சம் உத்தமம். வாரத்தில்

சோமவாரமானல் அமிர்தயோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதியோகத்தில் இராட்சத யோகம் பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிக்குள்ளாக அமிர்தவேளையிலும் சந்திரன் தினகால வோரையிலுஞ் செய்ய உத்தமம்.

ஷை அசுவனி நட்சத்திரம் குருவாரமானல் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மானச யோகம்; பலன் இராஜ சன்மானம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக உத்தியோக வேளையிலும் குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அசுவனி நட்சத்திரம் சுக்கிரவாரமானல் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் வச்சிரயோகம்; இதன் பலன் கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்கு மேல் பதினெட்டேமுக்கால் நாழிகைக்குள்ளாக லாபசுக வேளையிலும் சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

அஸ்த நட்சத்திரம்

ஜெனனதினம் பு-ஷ-ண-ட-அஸ்த நட்சத்திரமாக உடையவருக்கு ரேவதி நட்சத்திரம் உத்தமம். அதன் விபரம் தாரா பலன் ஆறுக்கு சாதனதாரை அதிபதி சந்திரன் வாகனம் ஜம்புகம் நாமதேயபலன் காரியசாதனம் அதிபதிபலன் கீர்த்திவாகனபலன் சவுக்கியம் சந்திரபலன் ஏழுக்கு உத்தமம். வாரத்தில் சோமவாரமானல் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மாதங்க யோகம்; இதன் பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்கத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக அமிர்த வேளையிலும், சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம் அல்லது பதினேந்து நாழிகைக்குள் லாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் குருவாரமானல் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மித்திரயோகம். பலன் ராச்சிய லாபம் கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும், குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம். அல்லது பதினேழரை நாழிகைக்குமேல் பதினெட்டேமுக்கால் நாழிக்குள்ளாக அமிர்த வேளையிலும் குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் சுக்கிரவாரமானல் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் ஸ்ரீ வர்ச்சயோகம் பலன்

இலட்சுமி லாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் ஏழரை நாழிக்கு மேல் பதினொன்றேகால் நாழிகைக்குள் அமிர்த வேளையிலும் குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

சித்திரை நட்சத்திரம்

ஜெனனதினப் பே-போ-ரா-ரி-சித்திரை நட்சத்திரமாக உடையவருக்கு உத்திரட்டாதி நட்சத்திரம் உத்தமம். அதன் விபரம் தாராபலன் நாலுக்கு க்ஷேமம். அதிபதி குரு வாகனம் யானை நாமதேயபலன் க்ஷேமகரம் அதிபதி பலன் தைரியம் வாகனபலன் இலட்சுமி லாபம். சந்திரபலன் முதல் இரண்டு பாதத்துக்குள் ஜெனித்தவர்களுக்கு ஏழாஞ் சந்திரன் உத்தமம்; மூன்றும்பாதம் நாலாம்பாதம் உடைய வர்களுக்கு ஆறுஞ் சந்திரன் உத்தமம். வாரத்தில் சோம வாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் கதா யோகம் இதன்பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் அமிர்த வேளையிலும், சந்திரன் தினகால வோரையிலும் அல்லது பனிரெண்டரை நாழி கைக்குமேல் பதினைந்து நாழிகைக்குள்ளாக லாபவேளை யிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் மனைமுகூர்த்தஞ் செய்ய உத்தமம்.

ஷை உத்திரட்டாதி நட்சத்திரம் புதவாரமானால் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் லம்பயோகம். பலன் போஜன லாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் ஏழரை நாழிகைக்குமேல் பத்து நாழிகைக்குள் சுபவேளையிலும், குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை உத்திரட்டாதி நட்சத்திரம் குருவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் சந்திரயோகம் பலன் சுபமுண்டாம். கௌரிபஞ்சாங்க காலத்தில் காலை இரண்டரை நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும், குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை உத்திரட்டாதி நட்சத்திரம் சுக்கிரவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் துவஜயோகம் பலன் வஸ்துலாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்குமேல் பதினெட்டேமுக்கால் நாழிகைக்குள் லாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் மனை முகூர்த்தஞ் செய்ய உத்தமம்.

சுவாதி நட்சத்திரம்

ஜெனனதினம் ரூ-ரே-ரோ-த-சுவாதி நட்சத்திரமாக உடையவருக்கு அந்த நட்சத்திரம் உத்தமம். அதன் விபரம்

தாராபலன் எட்டுக்கு மைத்திரம் அதிபதி சுக்கிரன் வாகனம் கருடன் நாமதேய பலன் சிநேகம் அதிபதிபலன் சந்தோஷம் வாகனபலன் சுகவிருத்தி சந்திரபலன் பனிரெண்டுக்கு மத்திமம்; வாரத்தில் ஆதிவாரமானால் அமிர்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம். இராஜ சன்மானம் கௌரி பஞ்சாங்ககாலத்தில் இரண்டரை நாழிகைக்குமேல் ஐந்து நாழிகைக்குள்ளாக லாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அஸ்த நட்சத்திரம் சோமவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் வச்சிரயோகம் பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் அமிர்தவேளையிலும், சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அஸ்த நட்சத்திரம் குருவாரமானால் சித்தயோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் இராக்ஷச யோகம். பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிக்குள் உத்தியோக வேளையிலும், குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அஸ்த நக்ஷத்திரம் சுக்கிரவாரமானால் அமிர்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் அமிர்தயோகம். பலன் வஸ்திர லாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்குமேல் பதினெட்டேமுக்கால் நாழிகைக்குள்ளாக லாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

விசாக நட்சத்திரம்

ஜெனன தினம் தீ-து-தே-தோ விசாக நட்சத்திரமாக உடையவருக்கு உத்திரட்டாதி நக்ஷத்திரம் உத்தமம். அதன் விபரம் தாராபலன் இரண்டுக்கு சம்பத்து அதிபதி புதன் வாகனம் குதிரை நாமதேய பலன் சம்பத்கரம் அதிபதிபலன் சாந்தி வாகனபலன் அர்த்தலாபம். சந்திரபலன் மூன்று பாதத்துக்குள் ஜெனித்தவருக்கு ஆறுஞ்சந்திரன் உத்தமம். பலன் சத்துருநாசம்; நாலாம்பாதத்தில் செனித்தவருக்கு ஐந்தாஞ்சந்திரன் நிஷ்பலன் வாரத்தில் ஆதிவாரமானால் அமிர்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் ஸ்திரயோகம்; தீர்த்தசித்தி. கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குமேல் ஐந்து நாழிகைக்குள்ளாக லாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை உத்திரட்டாதி நட்சத்திரம் சோமவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் கதாயோகம். கௌரி

பஞ்சாங்க காலத்தில் 2½-நாழிகைக்குள்ளாக அமிர்தவேளையி லும், சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை உத்திரட்டாதி நட்சத்திரம் புதவாரமானல் சித்த யோகம் ஆனந்தாதி யோகத்தில் லம்பயோகம் பலன் போஜன லாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் ஏழரை நாழிகைக்கு மேல் பத்து நாழிகைக்குள் சுபவேளையிலும், குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை உத்திரட்டாதி நட்சத்திரம் குருவாரமானல் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் சந்திரயோகம் பலன் சுப முண்டாம். கௌரிபஞ்சாங்க காலத்தில் 2½-நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும், குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

அனுஷ நட்சத்திரம்

ஜெனன தினம் ந-நி-நு-நெ அனுஷ நட்சத்திரமாக உடையவருக்கு திருவோண நட்சத்திரம் உத்தமம். அதன் விபரம் தாராபலன் ஆறுக்கு சாதனம் அதிபதி சந்திரன் வாகனம் ஜம்புகம் நாமதேய பலன் காரியசாதனம் அதிபதி பலன் கீர்த்தி வாகனபலன் சவுக்கியம் சந்திரபலன் மூன் றுக்கு உத்தமம் பலன் திரவிய லாபம்; வாரத்தில் சோமவார மானல் அமிர்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் சித்த யோகம்; பலன் சகலசித்தி. கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் அமிர்தவேளையிலும், சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை திருவோண நட்சத்திரம் புதவாரமானல் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் சந்திரயோகம் பலன் சுப முண்டாம். கௌரிபஞ்சாங்க காலத்தில் ஏழரை நாழிகைக்கு மேல் பத்து நாழிகைக்குள்ளாக சுபவேளையிலும், குருதின காலவோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை திருவோண நக்ஷத்திரம் குருவாரமானல் சித்த யோகம் ஆனந்தாதி யோகத்தில் துவஜயோகம் பலன் வஸ்து லாபம், கௌரிபஞ்சாங்க காலத்தில் உதயமுதல் இரண்டரை நாழிகைக்குள்ளாக உத்தியோக வேளையிலும், குருதின கால வோரையிலும் செய்ய உத்தமம்.

கேட்டை நட்சத்திரம்

ஜெனன தினம் நோ-ய-யி-யு கேட்டை நட்சத்திரமாக உடையவருக்கு அசுவனி நட்சத்திரம் உத்தமம். அதன் விப ரம் தாராபலன் இரண்டுக்கு சம்பத்து அதிபதி புதன் வாக

னம் குதிரை நாமதேயபலன் சம்பத்காம் அதிபதி பலன் காந்தி வாகனபலன் அர்த்தலாபம் சந்திரபலன் ஆறுக்கு உத்தமம்; பலன் சத்துருநாசம் வாரத்தில் சோமவார மானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் இராக்ஷச யோகம்; பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்க காலத்தில் உதயமுதல் இரண்டரை நாழிகைக் குள்ளாக அமிர்த வேளை யிலும், சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அசுவனி நட்சத்திரம் குருவாரமானால் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம் பலன் இராஜ சன்மானம். கௌரி பஞ்சாங்க வேளையில் இரண் டரை நாழிகைக்குள்ளாக உத்தியோக வேளையிலும், குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அசுவனி நக்ஷத்திரம் சுக்கிரவாரமானால் அமிர்த யோகம், ஆனந்தாதி யோகத்தில் வச்சிர யோகம் பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்க வேளையில் பதினேழரை நாழிகைக்கு மேல் பதினெட்டேமுக்கால் நாழிகைக்குள்ளாக லாப வேளையிலும், சுபவேளையிலும் சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

மூல நட்சத்திரம்

ஜெனனதினம்-யே-யோ-ப-பி-மூலநக்ஷத்திரமாக உடை யவருக்கு திருவோண நக்ஷத்திரம் உத்தமம். அதன் விபரம் தாராபலன் நான்கிற்கு க்ஷேமம், அதிபதி குருவாகனம் யானை நாமதேய பலன் க்ஷேமகாம் அதிபதி பலன் தைரியம் வாகன பலன் இலட்சுமி லாபம் சந்திர பலன் இரண்டுக்கு சுக்கிலபட்சம் உத்தமம்; வாரத்தில் சோமவாரமானால் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் சித்தயோகம் பலன் சகல சித்தி. கௌரி பஞ்சாங்க காலத்தில் பதினைந்து நாழிகைக்குமேல் லாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை திருவோண நக்ஷத்திரம் புதவாரமானால் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் க்ஷத்திரயோகம் பலன் சுபமுண்டாம். கௌரி பஞ்சாங்க காலத்தில் ஏழரை நாழி கைக்குமேல் பதினொன்றேகால் நாழிகைக்குள்ளாக சுப வேளையிலும் குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை திருவோண நட்சத்திரம் குருவாரமானால் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் துவஜயோகம் பலன் வஸ்து லாபம். கௌரி பஞ்சாங்க வேளையில் இரண்டரை

நாழிகைக்குள்ளாக உத்தியோக வேளையிலும், குருதின கால வோரையிலும் செய்ய உத்தமம்.

பூராட நட்சத்திரம்

ஜெனனதினம்-பு-த-ப-ட-பூராட நட்சத்திரமாக உடையவருக்கு ரேவதி நட்சத்திரம் உத்தமம். அதன் விபரம் தாராபலன் எட்டுக்கு மைத்திரம் அதிபதி சுக்கிரன் வாகனம் கருடன் நாமதேய பலன் சினேகம் அதிபதி பலன் சந்தோஷம் வாகனபலன் சுகவிருத்தி சந்திரபலன் நாலுக்கு ரோகபயம். சுக்கிலபட்சம் உத்தமம்; வாரத்தில் ஆதிவார மானால் அமிர்தயோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் வர்த்தமான யோகம் இதன்பலன் அதிக லாபம். கௌரி பஞ்சாங்க காலத்தில் மூணேமுக் கால் நாழிகைக்குமேல் ஒண்ணேகால் நாழிகைக்குள் லாப வேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் சோமவாரமானல் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மாதங்க யோகம் பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழி கைக்குள்ளாக அமிர்த வேளையிலும், சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் குருவாரமானல் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மத்திரயோகம் பலன் இராச்சிய லாபம். கௌரி பஞ்சாங்க காலத்தில் 2½-நாழி கைக்குள்ளாக உத்தியோக வேளையிலும், குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் சுக்கிரவாரமானல் அமிர்த யோகம் ஆனந்தாதி யோகத்தில் ஸ்ரீவர்ச்ச யோகம் பலன் லட்சுமி லாபம். கௌரி பஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்குமேல் பதினெட்டே முக்கால் நாழிகைக்குள்ளாக சுபசுக வேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

உத்திராட நட்சத்திரம்

ஜெனன தினம்-பே-போ-ஜ-ஜி-உத்திராட நட்சத்திரமாக உடையவருக்கு சதய நட்சத்திரம் உத்தமம். இதன் விபரம் தாராபலன் நான்கிற்கு க்ஷேமம் அதிபதி பலன் தைரியம் வாகன பலன் இலட்சுமி லாபம் சந்திர பலன் உத்திராட நட்சத்திரம் முதற்பாதமாக வுடையவருக்கு மூன்றுஞ் சந்தி ரன் பலன் திரவியலாபம் உத்தமம்; இரண்டாம்பாத முதல் நாலாம்பாத வரையிலும் இடையவருக்கு இரண்டாஞ்

சந்திரன் பலன் தனஹானி; சுக்கிலபக்ஷம் உத்தமம்; வாரத்தில் சோமவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் அமிர்தயோகம் பலன் ஸ்திரலாபம். கௌரிபஞ்சாங்க வேளையில் பனிரண்டரை நாழிகைக்குமேல் பதினைந்து நாழிகைக்குள்ளாக லாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை சதய நக்ஷத்திரம் புதவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம் பலன் இராஜ சன்மானம். கௌரிபஞ்சாங்க வேளையில் மூணேமுக்கால் நாழிகைக்குமேல் ஒண்ணேகால் நாழிகைக்குள்ளாக அமிர்த வேளையிலும், சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை சதய நட்சத்திரம் சுக்கிரவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் சௌமியயோகம் இதன் பலன் அர்த்தலாபம். கௌரிபஞ்சாங்கம் பதினேழரை நாழிகைக்குமேல் பதினெட்டேமுக்கால் நாழிகைக்குள்ளாக லாப வேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

திருவோண நட்சத்திரம்

ஜெனனதினம்-ஜூ-ஜெ-ஜோ-கா-திருவோண நட்சத்திரமாக உடையவருக்கு ரேவதி நட்சத்திரம் உத்தமம். அதன் விபரம் தாராபலன் ஆறுக்கு சாதனம் அதிபதி சந்திரன் வாகனம் ஜம்புகம். நாமதேயபலன் காரியசாதனம் அதிபதி பலன் கீர்த்தி வாகனபலன் சவுக்கியம் சந்திர பலன் மூன்றுக்கு திரவியலாபம் உத்தமம்; வாரத்தில் ஆதிவாரமானால் அமிர்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் வர்த்தமானயோகம் அதிகலாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குமேல் ஐந்து நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும், செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் சோமவாரமானால் சித்தயோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் மாதங்கயோகம்; பலன் மத்திமம். கௌரி பஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக அமிர்த வேளையிலும், சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் குருவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் அமிர்தயோகம் பலன் இராச்சியலாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக உத்தியோக வேளையிலும், குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை ரேவதி நட்சத்திரம் சுக்கிரவாரமானுல் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் ஸ்ரீவர்ச்சயோகம் பலன் இலட்சுமிலாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்கு மேல் பதினெட்டே முக்கால் நாழிகைக்குள்ளாக லாபசுக வேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

அவிட்ட நட்சத்திரம்

ஜெனனதினம் க-கி-கூ-கே-அவிட்ட நட்சத்திரமாக உடையவருக்கு அசுவினி நட்சத்திரம் உத்தமம். இதன் விபரம் தாராபலன் ஆறுக்கு சாதனம் அதிபதி சந்திரன் வாகனம் ஜம்புகம் நாமதேயபலன் காரியசாதனம் அதிபதி பலன் தீர்த்த சவுக்கியம் சந்திரபலன் முதற்பாதம் இரண்டாம்பாதம் உடையவருக்கு நாலாஞ்சந்திரன் பலன் மத்திமம்; மூன்றும்பாதம் நான்காம்பாதம் ஜனித்தவர்களுக்கு மூன்றுஞ்சந்திரன் பலன் உத்தமம்; திரவியலாபம்; வாரத்தில் சோமவாரமானுல் சித்தயோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் ராக்ஷச யோகம் பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் 2½-நாழிகைக்குள்ளாக உத்தியோக வேளையிலும், சந்திரன் தினகால வேளையிலும் செய்ய உத்தமம்.

ஷை அசுவனி நட்சத்திரம் குருவாரமானுல் அமிர்த யோகம். கதம்பேச மகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம் பலன் இராஜ சன்மானம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக உத்தியோக வேளையிலும் குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அசுவனி நட்சத்திரம் சுக்கிரவாரமானுல் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் வச்சிரயோகம் பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்குமேல் 18¾-நாழிகைக்குள்ளாக லாபசுகவேளையிலும், சுக்கிரன் தினகாலவோரையிலும் செய்ய உத்தமம்.

சதய நட்சத்திரம்

ஜெனனதினம் - கோ-ஸ-ஸி-ஸு - சதய நட்சத்திரமாக உடையவருக்கு ரோகணி நக்ஷத்திரம் உத்தமம். அதன் விபரம் தாரை எட்டுக்கு மைத்திரம் அதிபதி சுக்கிரன் வாகனம் கருடன் நாமதேயபலன் சிநேகம் அதிபதிபலன் சந்தோஷம் வாகனபலன் சுகவிருத்தி சந்திரபலன் நான் காஞ்சந்திரன் மத்திமம் வாரத்தில் சோமவாரமானுல்

அமிர்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் வர்த்தமான யோகம் பலன் அதிகலாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் அமிர்தவேளையிலும், சந்திரன் தினகால வோரையிலுஞ்செய்ய உத்தமம்.

ஷை ரோகணி நட்சத்திரம் புதவாரமானால் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் சுபயோகம் பலன் சுபப் பிரதம். கௌரிபஞ்சாங்கவேளை ஏழரை நாழிகைக்குமேல் இரண்டரை நாழிகைக்குள்ளாக சுபயோகத்திலும், குரு தினகாலவோரையிலும் செய்ய உத்தமம்.

பூரட்டாதி நட்சத்திரம்

ஜெனனதினம்-ஸே-ஸோ-தா-தி-பூரட்டாதி நட்சத்திரமாக உடையவருக்கு அசுவனிநட்சத்திரம் உத்தமம். அதன் விபரம் தாரை நாலுக்குக்ஷேமம் அதிபதி குரு வாகனம் யானை நாமதேயபலன் க்ஷேமகரம் அதிபதிபலன் தைரியம் வாகனபலன் இலட்சுமிலாபம் சந்திரபலன் மூன்றும்பாதம் வரையில் இடையவருக்கு மூன்றுஞ்சந்திரன் இதற்குப்பலன் திரவியலாபம் உத்தமம்; நாலாம்பாதம் உடையவருக்கு இரண்டாஞ்சந்திரபலன் சுக்கிலபட்சம் உத்தமம்; வாரத்தில் சோமவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் இராக்ஷசயோகம்; பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக அமிர்தவேளையிலும், சந்திரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அசுவனிநட்சத்திரம் குருவாரமானால் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம் பலன் இராஜசன்மானம் கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் உத்தியோகவேளையிலும், குருதினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷை அசுவனி நட்சத்திரம் சுக்கிரவாரமானால் அமிர்த யோகம், ஆனந்தாதி யோகத்தில் வச்சிரயோகம் பலன் மத்திமம் கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரைநாழிகைக்கு மேல் 18¾-நாழிகைக்குள்ளாக சுபலாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

உத்திரட்டாதி நட்சத்திரம்

ஜெனனதினம் து-ஜ-ஞ-த-உத்திரட்டாதி நக்ஷத்திரமாக உடையவருக்கு அஸ்தநட்சத்திரம் உத்தமம். அதன் விப

ரம் தாராபலன் 6-க்கு சாதனம் அதிபதி சந்திரன் வாகனம் ஜம்புகம் நாமதேயபலன் காரியசாதனம். அதிபதி பலன் கீர்த்திவாகனபலன் சவுக்கியம் சந்திரபலன் ஏழுக்கு சவுக்கியம் கதம்பேசமகாரிஷி சொல்லிய ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம் பலன் இராஜசன்மானம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குமேல் ஐந்துநாழிகைக்குள்ளாக உத்தியோகலாபவேளையிலும், சுக்கிரன் தினகால ஹோரையிலும் செய்ய உத்தமம்.

ஷ அஸ்த நக்ஷத்திரம் சோமவாரமானால் சித்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் வச்சிரயோகம் பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக அமிர்தவேளையிலும், சந்திரன் தினகால ஹோரையிலும் செய்ய உத்தமம்.

ஷ அஸ்த நக்ஷத்திரம் குருவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் இராக்ஷசயோகம் பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள்ளாக உத்தியோக வேளையிலும், குரு தினகால ஹோரையிலும் செய்ய உத்தமம்.

ஷ அஸ்தநக்ஷத்திரம் சுக்கிரவாரமானால் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் அமிர்தயோகம் பலன் ஸ்திரலாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்குமேல் இருபதுநாழிகைக்குள் லாபவேளையிலும், சுக்கிரன் தினகால ஹோரையிலும் செய்ய உத்தமம்.

ரேவதி நட்சத்திரம்

ஜெனனதினம் - தே - தோ-ச-சி-ரேவதி நக்ஷத்திரமாக உடையவருக்கு அசுவனிநக்ஷத்திரம் உத்தமம் இதன் விபரம் தாராபலன் இரண்டுக்கு சம்பத்து அதிபதி புதன் வாகனம் குதிரை நாமதேயபலன் சம்பத்காம் அதிபதிபலன் காந்தி வாகன பலன் அர்த்தலாபம் சந்திரபலன் இரண்டுக்கு சுக்கில பட்சம் உத்தமம்; வாரத்தில் ஆதிவாரமானால் சித்தயோகம். ஆனந்தாதி யோகத்தில் ஆனந்தயோகம் பலன் திரவிய லாபம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குமேல் ஐந்துநாழிகைக்குள் உத்தியோகலாபவேளையிலும், சுக்கிரன் தினகால ஹோரையிலும் செய்ய உத்தமம்.

ஷ ரேவதி நக்ஷத்திரம் குருவாரமானால் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் மானசயோகம் பலன் இராஜசன்மானம். கௌரிபஞ்சாங்க காலத்தில் இரண்டரை நாழிகைக்குள் உத்தியோக வேளையிலும், குரு தினகால வோரையிலும் செய்ய உத்தமம்.

ஷ ரேவதி நட்சத்திரம் சுக்கிரவாரமானால் அமிர்த யோகம். ஆனந்தாதி யோகத்தில் வச்சிரயோகம் பலன் மத்திமம். கௌரிபஞ்சாங்க காலத்தில் பதினேழரை நாழிகைக்குமேல் இருபது நாழிகைக்குள்ளாக லாபவேளையிலும், சுக்கிரன் தினகால வோரையிலும் வீடு மனை சுபமுகூர்த்தம் இதுகள் அனைத்தையும் செய்யலாம்; உத்தமம்.

பொருத்தங்களின் விபரம்

அவரவர்களுக்கு வேண்டிய நாம நட்சத்திரம், ஜெனன நட்சத்திரம் இதுகளைக்கொண்டு பொருத்தம்வைத்த போதிலும், லக்கினம் தெரியவேண்டில் அந்தந்தகாலத்தில் தெரிந்துக்கொண்டு வைத்துக்கொள்ளவும், மேலும், இதில் சொல்லாத சுப நட்சத்திரங்கள் ஜெனனநாளுக்கு பொருந்தியிருந்தாலும் பார்த்துக் கொள்ளலாம். எல்லாமெழுத அடங்காது. இதுகளன்றியும், மனைமுகூர்த்தங்களுக்கு மாத்திரமல்ல. மற்ற சுபமுகூர்த்தங்களுக்கும் செய்ய உத்தமம் சுபம்.

சப்த கிரகங்களின் சாரம்

சூரிய சாரம்

பரணி பிற்பாதி-இரண்டுபாதமும், கார்த்திகை - நாலு பாதமும், ரோகணி முதற்பாதமும், இந்த ஏழுபாதத்திலும் சூரியனிருக்க வீடுகட்டினால் அக்கினி பயமுண்டாம்.

அங்காரக சாரம்

கார்த்திகை, பூசம், மகம், பூரம், அஸ்தம், மூலம், ரேவதி இந்த நட்சத்திரம் ஏழிலும், அங்காரகன் இருக்க வீடுகட்டினால் அக்கினிபயம், புத்திர ஆனி இதுகளுண்டாம். இதேபிரகாரம் மீனம், கடகம், மகரம், சம்பூரண ஜலராசி, கும்பம், ரிஷபம், அர்த்தஜலம், விருச்சிகம், துலாம், பாதிஜலராசி, கன்னி, மிதுனம், தனுசு, நிர்ச்சலராசி இதில் சம்பூர்ணசலராசிக்கு உத்தமமான நட்சத்திரத்தில் சந்திரன்; குரு சுக்கிரன் பார்வையில் வீடுகட்ட எத்தனஞ் செய்தால் அங்காரகதோஷம் தேவையில்லை; சுபந்தரும்.

புத சாரம்

அசுவனி, மிருகசிரம், அஸ்தம், சித்திரை, ரோகணி, உத்திரம் இந்த ஆறுநட்சத்திரத்திலும் புதனிருந்தாலும் அல்லது லக்கினத்திலாவது உச்சத்திலாவது புதனிருந்தாலும் வீடு கட்ட ஆரம்பஞ்செய்தால், புத்திரசம்பத்துடனே சுகமே இருப்பார்கள்.

குரு சாரம்

திருவோணம், உத்திராடம், உத்திரட்டாதி, பூராடம், மிருகசீரிடம், ஆயிலியம், ரோகணி, பூசம் இந்த ஒன்பது நட்சத்திரங்களிலும் குரு இருந்தாலும் லக்கினத்திலாவது உச்சத்திலாவது இருக்க வீடுகட்ட ஆரம்பஞ்செய்தால், சகல சம்பத்து முண்டாயிருப்பார்கள்.

சுக்கிர சாரம்

கேட்டை, புனர்பூசம், சித்திரை, அசுவனி, பூராடம், அவிட்டம், அனுஷம், விசாகம் திருவாதிரை, சதையம் இந்த பத்து நட்சத்திரங்களிலும் சுக்கிரன் இருக்க வீடுகட்ட ஆரம்பஞ்செய்தால், எஜமானனுக்கு சுப்பிரதம் உண்டாம்.

சனி சாரம்

சதையம், பூரட்டாதி, சுவாதி, உத்திரட்டாதி, பரணி, அவிட்டம், அனுஷம், கேட்டை இந்த எட்டு நட்சத்திரங்களிலும் சனியிருக்க வீடுகட்ட ஆரம்பஞ்செய்தால், பட்சிகள், இராட்சதர், பசாசு இதுகள் வந்துசேரும்.

ஓராகு சாரம்

இராகு இருந்த லக்கினத்துக்கு மூன்றும் நட்சத்திரமும் பதினாலாம் நட்சத்திரமும் மிருத்துவுகார பலனுனபடியினாலே அந்த சாரத்தில் வீடுகட்ட ஆரம்பஞ் செய்யலாகாது.

சோடச மனை பொருத்தம்

தழி 9-இ—பொருத்தம்

கருப்பம்	1
ஆதாயம்	12
விரையம்	1
யோனி	சிம்மயோனி
வாரம்	புதவாரம்
திதி	பூர்வபட்ச சஷ்டி
நக்ஷத்திரம்	கேட்டை
இலக்கினம்	மிதுனலக்கினம்
அமிசம்	பிரஜாம்சம்
வமிசம்	பிரமவம்சம்
நேத்திரம்	ஏகநேத்திரம்
சூத்திரம்	குமாரசூத்திரம்
வயது	43
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	ராஜபஞ்சகம்

தாராபலமெனவறிக.

தழி 10-இ—பொருத்தம்

கருப்பம்	2
ஆதாயம்	8
விரையம்	10
யோனி	கரயோனி
வாரம்	சுக்கிரவாரம்
திதி	பூர்வபட்சதசமி
நக்ஷத்திரம்	உத்திரட்டாதி
இலக்கினம்	மகரலக்கினம்
அமிசம்	தான்யாம்சம்
வமிசம்	அரசவம்சம்
நேத்திரம்	ஏகநேத்திரம்
சூத்திரம்	மரணசூத்திரம்
வயது	70
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

தழி 11-இ—பொருத்தம்

கருப்பம்	3
ஆதாயம்	4
விரையம்	9
யோனி	த்வஜயோனி
வாரம்	ஆதிவாரம்
திதி	பூர்வபட்சசதுர்த்தசி
நக்ஷத்திரம்	புனர்பூசம்
இலக்கினம்	சிம்மலக்கினம்
அமிசம்	நிதனும்சம்
வமிசம்	வசியவம்சம்
நேத்திரம்	ஏகநேத்திரம்
சூத்திரம்	அரசசூத்திரம்
வயது	97
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

தழி 12-இ—பொருத்தம்

கருப்பம்	4
ஆதாயம்	12
விரையம்	8
யோனி	சுவானயோனி
வாரம்	மங்களவாரம்

திதி அமரபட்சதிரிதியை
நக்ஷத்திரம் சுவாதி
இலக்கினம் மீனலக்கினம்
அமிசம் சத்தியம்சம்
வமிசம் சூத்திரவம்சம்
நேத்திரம் ஏகநேத்திரம்
சூத்திரம் பாலசூத்திரம்
வயது 24
யோகம் சித்தயோகம்
பஞ்சகம் நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

குழி 13-இ—பொருத்தம்

கருப்பம் 5
ஆதாயம் 8
விரையம் 7
யோனி கஜயோனி
வாரம் குருவாரம்
திதி அமரபட்சசப்தமி
நக்ஷத்திரம் அவிட்டம்
இலக்கினம் துலாலக்கினம்
அமிசம் நிர்பீதியம்சம்
வமிசம் பிரமவம்சம்
நேத்திரம் ஏகநேத்திரம்
சூத்திரம் விருத்தசூத்திரம்
வயது 51
யோகம் சித்தயோகம்
பஞ்சகம் சோரபஞ்சகம்

தாராபலமெனவறிக.

குழி 14-இ—பொருத்தம்

கருப்பம் 6
ஆதாயம் 4
விரையம் 6
யோனி புகையோனி
வாரம் சனிவாரம்
திதி அமரபட்சஏகாதசி
நக்ஷத்திரம் உரோகணி
இலக்கினம் விருஷபலக்கினம்
அமிசம் புத்தியம்சம்
வமிசம் அரசவம்சம்
நேத்திரம் உபயநேத்திரம்
சூத்திரம் குமாரசூத்திரம்
வயது 78
யோகம் அமிர்தயோகம்
பஞ்சகம் சோரபஞ்சகம்

தாராபலமெனவறிக.

குழி 15-இ—பொருத்தம்

கருப்பம் 7
ஆதாயம் 12
விரையம் 5
யோனி விருஷபயோனி
வாரம் சோமவாரம்
திதி அமாவாசை
நக்ஷத்திரம் உத்திரம்
இலக்கினம் தநுர்லக்கினம்
அமிசம் திலுபாம்சம்
வமிசம் வசியவம்சம்
நேத்திரம் ஏகநேத்திரம்
சூத்திரம் பரணசூத்திரம்
வயது 5
யோகம் சித்தயோகம்
பஞ்சகம் நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

குழி 16-இ—பொருத்தம்

கருப்பம் 8
ஆதாயம் 8
விரையம் 4
யோனி காகயோனி
வாரம் புதவாரம்
திதி பூர்வபட்சசதுர்த்தி
நக்ஷத்திரம் பூராடம்
இலக்கினம் கடகலக்கினம்
அமிசம் தஸ்கராம்சம்
வமிசம் சூத்திரவம்சம்
நேத்திரம் ஏகநேத்திரம்
சூத்திரம் அரசசூத்திரம்
வயது 32
யோகம் அமிர்தயோகம்
பஞ்சகம் நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 17-இ—பொருத்தம்

கருப்பம்	1
ஆதாயம்	4
விரையம்	3
யோனி	சிம்மயோனி
வாரம்	சுக்கிரவாரம்
திதி	பூர்வபட்சஅஷ்டமி
நக்ஷத்திரம்	அச்சுவினி
இலக்கினம்	கும்பலக்கினம்
அமிசம்	நரபதியம்சம்
வமிசம்	பிரமவம்சம்
நேத்திரம்	உபயநேத்திரம்
சூத்திரம்	பாலசூத்திரம்
வயது	59
யோகம்	அமிர்தயோகம்
பஞ்சகம்	ரோகபஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 18-இ—பொருத்தம்

கருப்பம்	2
ஆதாயம்	12
விரையம்	2
யோனி	கரயோனி
வாரம்	ஆதிவாரம்
திதி	பூர்வபட்சத்வாதசி
நக்ஷத்திரம்	ஆயிலியம்
இலக்கினம்	கன்யாலக்கினம்
அமிசம்	பிரஜாம்சம்
வமிசம்	ஆசவம்சம்
நேத்திரம்	ஏகநேத்திரம்
சூத்திரம்	விருத்தசூத்திரம்
வயது	86
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	மிருத்யுபஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 19-இ—பொருத்தம்

கருப்பம்	3
ஆதாயம்	8
விரையம்	1
யோனி	த்வஜயோனி
வாரம்	மங்களவாரம்
திதி	அமரபட்சபிரதமை
நக்ஷத்திரம்	அநுஷம்
இலக்கினம்	மேஷலக்கினம்
அமிசம்	தான்யாம்சம்
வமிசம்	வசியவம்சம்
நேத்திரம்	ஏகநேத்திரம்
சூத்திரம்	குமாரசூத்திரம்
வயது	13
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	இராஜபஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 20-இ—பொருத்தம்

கருப்பம்	4
ஆதாயம்	4
விரையம்	10
யோனி	சுவானயோனி
வாரம்	குருவாரம்
திதி	அமரபட்சபஞ்சமி
நக்ஷத்திரம்	பூரட்டாதி
இலக்கினம்	விருச்சிகலக்கினம்
அமிசம்	நிதனம்சம்
வமிசம்	சூத்திரவம்சம்
நேத்திரம்	உபயநேத்திரம்
சூத்திரம்	மாரணசூத்திரம்
வயது	40
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 21-இ—பொருத்தம்

கருப்பம்	5
ஆதாயம்	12
விரையம்	9
யோனி	கஜயோனி
வாரம்	சனிவாரம்
திதி	அமரபட்சநவமி
நக்ஷத்திரம்	திருவாதிரை

இலக்கினம்	மிதுனலக்கினம்
அமிசம்	சத்தியம்சம்
வமிசம்	பிரமவம்சம்
நேத்திரம்	உபயநேத்திரம்
சூத்திரம்	அரசசூத்திரம்
வயது	67
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக

துழி 22-இ—பொருத்தம்

கருப்பம்	6
ஆதாயம்	8
விரையம்	8
யோனி	புகையோனி
வாரம்	சோமவாரம்
திதி	அமரபட்சதிரயோதசி
நக்ஷத்திரம்	சித்திரை
இலக்கினம்	மகரலக்கினம்
அமிசம்	நிர்பூதியம்சம்
வமிசம்	அரசவம்சம்
நேத்திரம்	ஏகநேத்திரம்
சூத்திரம்	பாலசூத்திரம்
வயது	94
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 23-இ—பொருத்தம்

கருப்பம்	7
ஆதாயம்	4
விரையம்	7
யோனி	விருஷபயோனி
வாரம்	புதவாரம்
திதி	பூர்வபட்சதுதியை
நக்ஷத்திரம்	திருவோணம்
இலக்கினம்	சிம்மலக்கினம்
அமிசம்	புத்தியம்சம்
வமிசம்	வசியவம்சம்
நேத்திரம்	உபயநேத்திரம்
சூத்திரம்	விருத்தசூத்திரம்
வயது	21
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	சோரபஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 24-இ—பொருத்தம்

கருப்பம்	8
ஆதாயம்	12
விரையம்	6
யோனி	கரயோனி
வாரம்	சுக்கிரவாரம்
திதி	பூர்வபட்சசஷ்டி
நக்ஷத்திரம்	கார்த்திகை
இலக்கினம்	மீனலக்கினம்
அமிசம்	திலுபாம்சம்
வமிசம்	சூத்திரவம்சம்
நேத்திரம்	உபயநேத்திரம்
சூத்திரம்	குமாரசூத்திரம்
வயது	48
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 25-இ—பொருத்தம்

கருப்பம்	1
ஆதாயம்	8
விரையம்	5
யோனி	சிம்மயோனி
வாரம்	ஆதிவாரம்
திதி	பூர்வபட்சதசமி
நக்ஷத்திரம்	பூரம்
இலக்கினம்	துலாலக்கினம்
அமிசம்	தஸ்கராம்சம்
வமிசம்	பிரமவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்திரம்
சூத்திரம்	மரணசூத்திரம்
வயது	89
யோகம்	அமிர்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 1008-இ—பொருத்தம்

கருப்பம்	8
ஆதாயம்	12
விரையம்	2
யோனி	காகயோனி
வாரம்	சனிவாரம்
திதி	பூர்வபட்சத்வாதசி
நக்ஷத்திரம்	கேட்டை
இலக்கினம்	மீனலக்கினம்
அமிசம்	பிரஜாம்சம்
வமிசம்	சூத்திரவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்திரம்
சூத்திரம்	அரசசூத்திரம்
வயது	16
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 1009-இ—பொருத்தம்

கருப்பம்	1
ஆதாயம்	8
விரையம்	1
யோனி	சிம்மயோனி
வாரம்	சோமவாரம்
திதி	அமாபட்சபிரதமை
நக்ஷத்திரம்	உத்திரட்டாதி
இலக்கினம்	துலாலக்கினம்
அமிசம்	தான்யாம்சம்
வமிசம்	பிரமவம்சம்
நேத்திரம்	உபயநேத்திரம்
சூத்திரம்	பாலசூத்திரம்
வயது	43
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 1010-இ—பொருத்தம்

கருப்பம்	2
ஆதாயம்	4
விரையம்	10
யோனி	கரயோனி
வாரம்	புதவாரம்
திதி	அமாபட்சபஞ்சமி
நக்ஷத்திரம்	புனர்பூசம்
இலக்கினம்	விருஷபலக்கினம்
அமிசம்	நிதனம்சம்
வமிசம்	அரசவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்திரம்
சூத்திரம்	குமாரசூத்திரம்
வயது	70
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

துழி 1011-இ—பொருத்தம்

கருப்பம்	3
ஆதாயம்	12
விரையம்	9
யோனி	த்வஜயோனி
வாரம்	சுக்கிரவாரம்
திதி	அமாபட்சநவமி
நக்ஷத்திரம்	சுவாதி
இலக்கினம்	தநுசுலக்கினம்
அமிசம்	சத்தியம்சம்
வமிசம்	வசியவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்திரம்
சூத்திரம்	மரணசூத்திரம்
வயது	97
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

குழி 1012-இ—பொருத்தம்

கருப்பம்	4
ஆதாயம்	8
விரையம்	8
யோனி	சுவானயோனி
வாரம்	ஆதிவாரம்
திதி	அமாபட்சதிரயோதசி
நக்ஷத்திரம்	அவிட்டம்
இலக்கினம்	கடகலக்கினம
அமிசம்	நிர்பீதியம்சம்
வமிசம்	சூத்திரவம்சம்
நேத்திரம்	உபயநேத்திரம்
சூத்திரம்	அரசசூத்திரம்
வயது	24
யோகம்	மரணயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

குழி 1013-இ—பொருத்தம்

கருப்பம்	5
ஆதாயம்	4
விரையம்	7
யோனி	கஜயோனி
வாரம்	மங்களவாரம்
திதி	பூர்வபட்சதுதியை
நக்ஷத்திரம்	உரோகணி
இலக்கினம்	கும்பலக்கினம்
அமிசம்	புத்தியம்சம்
வமிசம்	பிரமவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்திரம்
சூத்திரம்	விருத்தசூத்திரம்
வயது	51
யோகம்	அமிர்தயோகம்
பஞ்சகம்	அக்னிபஞ்சகம்

தாராபலமெனவறிக.

குழி 1014-ஓ—பொருத்தம்

கருப்பம்	6
ஆதாயம்	12
விரையம்	9
யோனி	புகையோனி
வாரம்	குருவாரம்
திதி	பூர்வபட்சசஷ்டி
நக்ஷத்திரம்	உத்திரம்
இலக்கினம்	கன்யாலக்கினம்
அமிசம்	கிலுபாம்சம்
வமிசம்	அரசவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்திரம்
சூத்திரம்	குமாரசூத்திரம்
வயது	73
யோகம்	மரணயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

குழி 1015-இ—பொருத்தம்

கருப்பம்	7
ஆதாயம்	8
விரையம்	6
யோனி	விருஷபயோனி
வாரம்	சனிவாரம்
திதி	பூர்வபட்சதசமி
நக்ஷத்திரம்	பூராடம்
இலக்கினம்	மேஷலக்கினம்
அமிசம்	தஸ்கராம்சம்
வமிசம்	வசியவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்திரம்
சூத்திரம்	மரணசூத்திரம்
வயது	5
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	அக்னிபஞ்சகம்

தாராபலமெனவறிக.

குழி 1016-இ—பொருத்தம்

கருப்பம்	8
ஆதாயம்	4
விரையம்	4
யோனி	காகயோனி
வாரம்	சோமவாரம்
திதி	பூர்வபட்சசதுர்த்தசி
நக்ஷத்திரம்	அசுவனி
இலக்கினம்	விருச்சிகலக்கினம்
அமிசம்	நரப்தியம்சம்
வமிசம்	சூத்திரவம்சம்
நேத்திரம்	குருட்டுநேத்திரம்
சூத்திரம்	பாலசூத்திரம்
வயது	32
யோகம்	சித்தயோகம்
பஞ்சகம்	நிஷ்பஞ்சகம்

தாராபலமெனவறிக.

மனை பொருத்தம் பார்க்கவேண்டிய விபரம்

இப்போது நமது நாட்டை யாண்டுவரும் ஆங்கிலேய துரைத்தனத்தாருடைய கணக்குப்படி 12-அங்குலம் கொண்டது ஒரு ஜாதி அடி. அந்த அடி 3-கொண்டது ஒரு கோல். அந்தக்கோலினால் அகல நிகளங்களை மாறிய தொகைக்கு குழியென்றும் பெயர். அந்தக் குழியின் விபரம் 9-முதல் 1016-வரையிலும், மேலே கண்டிருப்பதால் அந்தப் பொருத்தங்கள் அவரவர்கள் மனையாயத்திற்குச் சரிப்படாவிட்டால் பின்னால் வரும் சரியான பொருத்தங்களைப் பார்த்துச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டியது.

மனை அகலம் வைக்கவேண்டிய அடிகளின் பலன்

6-க்கு நன்மை
7-க்கு மத்திமம்
8-க்கு இராச்சியம்பண்ணும்
9-க்கு திருகெடும்
10-க்கு பாலுஞ் சோறும் உண்டு
11-க்கு புத்திர சம்பத்துண்டு
12-க்கு பிள்ளையில்லாமல் போம்
13-க்கு வியாதியுண்டாம்
14-க்கு நித்தம் பகை
15-க்கு ஸ்திதி வாங்கும்
16-க்கு செல்வ முண்டாம்
17-க்கு நாளுக்குநாள் ஆக்கம்
18-க்கு நஷ்டங்காட்டும்
19-க்கு புத்திர வியாகூலம்
20-க்கு இனஞ்சேரும்
21-க்கு இருப்பு குலைந்துபோம்
22-க்கு எதிரி அஞ்சுவான்
23-க்கு அடுத்தடுத்து நோயுண்டாகும்
24-க்கு மனையாள் சாவாள்
25-க்கு திருவாழு
26-க்கு சம்பத்துண்டாம்
27-க்கு அரசாளும் ஆதாயமுண்டு
28-க்கு ஐஸ்வரிய முண்டாம்
29-க்கு சுற்றம் பெருகும்
30-க்கு நோயுண்டாம்
31-க்கு மனையாள் சாவாள்
32-க்கு இழந்தபொருளெய்தும்

33-க்கு பதியிரண்டுண்டாம்
34-க்கு குடியோட்டும்
35-க்கு ஜீவனமுண்டாம்
36-க்கு சுகமுண்டாம்
37-க்கு கன்றுகாறி விர்த்தியாகும்
38-க்கு நினைத்தகாரியம் கூடாது
39-க்கு ஆக்கமுண்டாம்
40-க்கு எதிரிகளா லெங்கோமும் தீமை
41-க்கு குபேர சம்பத்துண்டாம்
42-க்கு லட்சுமி குடிகொண்டிருப்பாள்
43-க்கு நன்மை கொடாது
44-க்கு கண் மறைவாய்க்காட்டும்
45-க்கு சற்புத்திரனைப் பெறுவர்
46-க்கு வீடுவிட்டோட்டும்.

விடுகட்ட ஆகாத நக்ஷத்திரம் அசுவனி, ரேவதி, மகம், பூரம் இவைகளாம்.

சூரியன் சாயலைக்கொண்டு அடியளந்து நாழிகை அறிவது

முற்பகலில் பார்ப்பது.		பிற்பகலில் பார்ப்பது.	
அடி.	நாழிகை.	அடி.	நாழிகை.
78	1	1	16
44	2	2	17
24	3	3	18
16	4	4	19
13	5	5	20
11	6	6	21
9	7	7	22
8	8	8	23
7	9	9	24
6	10	11	25
5	11	13	26
4	12	16	27
3	13	24	28
2	14	44	29
1	15	78	30

பூமிசல்லியம்

அசுவனி	பரணி	கார்த்திகை	உரோகணி	மிருகசீரிடம்	விசாகம்	அனுஷம்
ரேவதி	ஆயிலியம்	பூசம்	புனர்பூசம்	திருவாதிரை	சுவாதி	கேட்டை
உத்திரட்டாதி	மகம்	பூரம்	உத்திரம்	அஸ்தம்	சித்திரை	மூலம்
பூரட்டாதி	சதையம்	அவிட்டம்	திருவோணம்	அபிஜித்து	உத்திராடம்	பூராடம்

கட்டளைக்கலிப்பா

வினவும் போதிலடியை யளந்துமே
மிக்கநா லேழுங்கூட்டி யதனுடன்
தனியும்போதி லுதிக்கின்ற ராசியுந்
தானுஞ் சேர்த்து ஈராறிற் பெருக்கியே
கனிவதாகத் தொகைபதி னாறினிற்
காண வியந்துதான் கண்டதோர்சேடத்தை
தனிவு கண்டதோர் வீமேசர் பாதத்தைச்
சார்ந்து தானும் பலன்கண் டுரைப்பதே.

யாவரேனும் சல்லியம் கேட்கும்போது அடியளந்து அவச்சாயை பாதச்சாயை நீக்கி நின்ற அடித்தொகையுடனே 28-ஒரு தொகையும் மேஷம் முதல் உதயலக்கினம் வரையிலும் ஆகிய தொகை ஒன்றும் சேர்த்து 12-ல் பெருக்கி 16-க்கு ஈந்துகின்ற சேஷத்தைக்கொண்டும் சேஷம் நில்லாதவிடத்து பெறுவானுய்கின்ற 16-யே கொண்டும் சல்லியம் சொல்லலாம்.

சல்லியம் 16-வரைக்கும் விபரமறிய.

தலைமண்டை, எலும்பு, செங்கல், ஓடு, அடுப்பு, விக்கிரகம், சாம்பல், கரி, பிணம், தானியம், பொன், கல், தேரை, விலங்கின்கொம்பு, நாய், ஜாடி இவைகள் சல்லியமாம்.

சல்லியத்திலே நன்மைதீமை அறியும்வகை

முற்கூறிய சல்லிய கணிதத்தினலே சேஷம் என்றும், சேஷம் நில்லாதவிடத்து பெறுவானுய் நின்ற 16-என்றும், எடுக்கப்பெற்ற 1-முதல் 16-வரையிலும் ஆகிய தொகையின் முறையே பிற்கூறிடும் தலைமண்டை முதல் ஜாடிவரையிலும் ஆகிய சல்லியம் 16-யும் வைத்து எண்ணிக்கண்ட சல்லியம் எதுவோ அதுவே கேட்பவர்க்குச் சொல்லவேண்டிய சல்லியமாம். அச்சல்லியமானது தானியம், பொன், விலங்கின் கொம்பு இம்மூன்றுனுள் ஒன்றுகாணில் நல்லனவாம். மற்றுமுள்ள 13-ல் ஒன்றுகாணில் தீயனவாம். வாலாறு: 1-வது தலைமண்டை, 2-எலும்பு, 3-செங்கல், 4-ஓடு, 5-அடுப்பு, 6-விக்கிரகம், 7-சாம்பல், 8-கரி, 9-பிணம், 10-தான்யம், 11-பொன், 12-கல், 13-தேரை, 14-விலங்கின்கொம்பு, 15-நாய், 16-ஜாடி என்பதற்கு சல்லியம் அங்கிலத்தில் இல்லையென்றும் பொருளமைத்துக் கொள்க.

சல்லியம் வினவினமனையின் அநுபவமென்றறிய

கண்டங்களிலே நின்ற சுபக்கோட்களை பாவக்கோட்கள் கூடிநிற்கினும் நோக்கினும் சல்லியம் வினவின மனையையுடையவனுக்கு நினைத்த கருமம் முடியாது. அந்த மனையின் ஆக்ஷியுமில்லாமல் போம்; அவன் வறுமையிலே துன்பப்படுவான். கண்டங்களிலே சுபக்கோட்களின்றிப் பாபக்கோட்கள் நிற்கினும் அவற்றை நோக்கினும் தீமையுண்டாம். கண்டங்களிலே பாபக் கோட்களின்றிச் சுபக்கோட்கள் நிற்கினும் அவற்றை நோக்கிலும் நன்மையுண்டாம்.

மேற்கூறியவற்றுள்ளே நன்மைப்பலனை மென்மேலாக விவரிக்கின்றதென்றறிக

கண்டங்களிலே பாபக்கோட்களின்றிச் சுபக்கோட்கள் நிற்கினும் அவற்றை நோக்கினும் மனைவளப்பமும், செல்வமும் அதிகரிக்கும்; மனையின் ஆக்ஷியுமுண்டாம்.

மேற்கூறிய நன்மை தீமைகள் என்னும் அனுபவத்தை வேருெருவகையா லறிக

உச்சிகண்டத்திலே சுபக்கோட்கள் நிற்கினும் அதனை நோக்கினும் அம்மனையைத் தானே அனுபவிப்பன்; பாவக்கோட்கள் நிற்கினும் அதனை நோக்கினும் பிறர் அனுபவிப்பர்; அல்லது தெய்வம் பசாசம் இராக்ஷசம் இவைகள் அனுபவிக்கும்.

சல்லிய விருப்பிடத்தைக் கிருத்திகையைக்கொண்டு கூறுவதேபோல் மற்றெல்லா நாட்களையுங் கொண்டு கூறுவதென்றறிய

கிருத்திகை முதலாகக்கொண்டு அடைத்த முற்பகற் சக்காத்திற் சந்திரன்நின்ற நாளறையிலே சல்லியம் இருப் பனபோல அக்கிருத்திகையும் மற்றைய 27-நாட்களும் ஒரு நாழிகைக்கு ஒவ்வொன்றாக உதிக்கும் இயல்பிற்றாதலால், அங்ஙனம் உதித்த ரோகணி முதலிய 6-நாட்கள் முதலாகக் கொண்டு அடைக்கவேண்டிய முற்பகற் சக்காத்திலும், மகம் முதலிய 7-நாட்கள் முதலாகக்கொண்டு அடைக்கவேண்டிய பிற்பகற் சக்காத்திலும், அனுஷம் முதலிய 7-நாட்கள் முத லாகக்கொண்டு அடைக்கவேண்டிய முன்னிரவு சக்காத்தி லும், அவிட்டம் முதலிய 7-நாட்கள் முதலாகக்கொண்டு அடைக்கவேண்டிய பின்னிரவு சக்காத்திலும், சந்திரன் நின்றநாள் அறையிலே சல்லியம் இருப்பனவாகத் தெரிந்து கொள்ளப்படும்.

சல்லிய சக்காமும், சல்லிய விருப்பிடமும், சல்லிய வடைப்பும் நான்முகற் குறிப்புமென்றறிய

கிழக்கு மேற்கு 4-அறையும், தெற்கு வடக்கு 7- அறையுமாக வரையப்படாநின்ற சல்லிய சக்காத்தின் அறை இருபத்தெட்டினுள்ளும் சந்திரன்நின்ற நாளறையிலே சல்லி யம் இருப்பனவாம். ஆதலால், அச்சந்திரன்நின்ற நாள றையை அறிவதற்கு கிருத்திகை முதலாகக்கொண்டு அடைத்து வழங்கிவருகிற சல்லிய சக்காத்தைச் சாங்கோ பாங்கமாகத் தானே தெரிந்துகொள்ளப்படும். அபிசித்து சேர்த்தெண்ணவே நாட்கள் 28-ஆம்.

சல்லிய விருப்பிடத்தை மேலே தன்னுதய நாட் களையுங்கொண்டு கூறியதேபோல் இராசி உதய நாட்களையுங்கொண்டு கூறலா மென்றறிய

இராசி ஒன்றிற்கு மும்மூன்று நாட்கள் உடைத்தாத லால், உதித்த இராசியினிடமாக உதித்தநாளை முற்பகற் சக்காத்திலே கிருத்திகையை நிறுத்தி வைத்ததுபோல

நிறுத்தி அதனது அடைப்பினடைவே இதற்குப் பின்னுள்ள மற்ற 27-நாள்களையும் அடைத்து சந்திரன்நின்ற நாளறை யிலே சல்லியம் இருப்பனவாம் என்று சொல்லப்படும்.

சல்லியம் உண்டு இல்லை யென்பது உணர்த்தி ஆட்டினெலும்பு உண்டென்றறிய

கண்டங்களிலே நின்ற சுபக்கோட்களைப் பாபக்கோட்கள் கூடிநிற்கினும் நோக்கினும், சல்லியம் உண்டென்றும், கூடிநிற்றலும் நோக்கலும் இல்லையாகிற் சல்லியம் இல்லை யென்றும், கண்டங்களிலே நின்ற சந்திரனை அங்காரகன் கூடிநிற்கினும் நோக்கினும் அங்காரகன்நின்ற நாளறையிலே ஆட்டினெலும்பு உண்டென்றும் சொல்லப்படும்.

பாப்பாரெலும்பு பசுவெலும்பு அல்லது செங்கல் பொன் இவற்றுளொன்று உண்டென்றறிக

கண்டங்களிலே நின்ற சந்திரனைக் குரு கூடிநிற்கினும் நோக்கினும் குரு நின்றநாள் அறையிலே பாப்பாரெலும்பு பசுவெலும்பு அல்லது செங்கல் பொன் இவற்றுள் ஒன்று உண்டென்று சொல்லலாம்.

விக்கிரகம் எருமையெலும்பு உண்டென்றறிக

கண்டங்களிலேநின்ற சந்திரனைச் சூரியன் கூடிநிற்கினும் நோக்கினும் சூரியன்நின்ற நாளறையிலே விக்கிரகம் உண்டென்றும் சனி கூடிநிற்கினும் நோக்கினும் சனிநின்ற நாளறையிலே எருமையெலும்பு உண்டென்றும் சொல்லலாம்.

பாம்பாதல் புற்றாதல் ஷை எலும்பாதல் என்றறிக

கண்டங்களிலே நின்ற சந்திரனை பாம்புகூடி நிற்கினும் நோக்கினும் பாம்புநின்ற நாளறையிலே பாம்பாதல் புற்றாதல் பாம்பினெலும்பாதல் உண்டென்று சொல்லப்படும்.

நாய் எலும்பு உண்டென்றறிய

கண்டங்களிலே நின்ற சந்திரனை புதன்கூடி நிற்கினும் நோக்கினும் புதன் நின்றநாள் அறையிலே நாயெலும்பு உண்டென்றும், சுக்கிரன் கூடிநிற்கினும் நோக்கினும் சுக்கிரன் நின்ற நாளறையிலே வெள்ளி யுண்டென்றும் சொல்லப்படும்.

சல்லியசக்கரத்தின் யடைப்புவிதியும் முற்பகல் பிற்பகல் முன்னிரவு பின்னிரவு ஆகிய இவற்றின் அடைப்பு நாட்களும் நாட்களின் நாழிகைகளும் இருந்து பார்க்கும் திசையுமென்றறிய

கீழறை 7-னுள் முதலிலே இரண்டறைவிட்டு மூன்றும் அறைமுதல் தெற்குநோக்கி மூன்று அறையும் அதற்குமேல் அறைமுதல் வடக்குநோக்கி நான்கறையும் அதற்குமேலறை முதல் தெற்குநோக்கி ஐந்தறையும் அதற்கு கீழறைமுதல் கிழக்குநோக்கி ரெண்டறையும் உடனே வலம்சுழலத் தென் கீழறைமுதல் 14-அறையுமாக எண்ணி முறையே முற்பகற் குக் கிருத்திகை முதலாகக்கொண்டு அடைப்பதாம். பிற் பகற்கு மகமும் முன்னிரவுக்கு அனுஷமும் பின்னிரவுக்கு அவிட்டமும் முதலாகக்கொண்டு அடைப்பதென்றும் ஒவ் வொரு நாட்கு நாழிகை ரெண்டே அரைக்கால் என்றும், சூரி யன் வலமுற்றிருப்பதே இருந்துபார்க்கும் திசையென்றும் அறியப்படும். முற்பகற்குமேற்குமுகமும், பிற்பகற்கு கிழக்கு முகமும், முன்னிரவுக்கு வடக்குமுகமும், பின்னிரவுக்குத் தெற்கு முகமும், இருந்து பார்க்குந் திசையாம். பிற்பகற்கு வடக்கு முகமும், முன்னிரவுக்குக் கிழக்குமுகமும் இப்படி பட்சாந்திரங்களிலே சொல்லப்படுவனவும் சிலருளர்.

சல்லியம் இருத்தலின் ஆழக்குறி யென்றறிய

சல்லியம் எவ்வெவ்கோட்களால் நியமிக்கப்பட்டனவோ அவ்வவ்கோட்களின் கதிர் எத்தனை யுண்டோ அத்தனையும், காணுதலால் சாண் 2-கொண்டது முழமாம் என்கிற வகை யிலே எண்ணியவட்டம் முழமாகவும் சேஷித்து நின்றது. உள்ளபடியே சாணாகவும்கொண்டு நட்பாக்ஷி யுச்சம் பகை நீசத்திலே ஏறுவன குறைவன அறிந்து இத்தனைமுழம் இத் தனைச்சாண் ஆழத்திலே இருக்கிறது என்று சல்லியம் இருத் தலின் ஆழம் குறிக்கப்படுஞ் சல்லியம் வினவின மனையின் அகல நிகளங்களைத் தனித்தனியே சிறுகோலால் அளந்து அத்தொகை இரண்டினையும் ஒன்றிலே ஒன்றாகப்பெருக்கி 28-க்கு ஈந்தவட்டமுழமாம், மீந்தசேஷத்தை 12-ற்பெருக்கு 28-க்கு ஈந்தவட்டம் சாணும், மீந்தசேஷத்தை 4-ற் பெருக்கி 28-க்கு ஈந்தவட்டம் அங்குலமாம், இவ்வகையைக்கொண்டு முழமும் சாணும் அங்குலமும் எத்தனையாம் என்று அறிந்தி இத்தனைமுழம் இத்தனைசாண் இத்தனை அங்குலமென்று சல்லியம் இருத்தலின் ஆழம் குறிக்கப்படும்.

கூபச்சக்கர பலன்

விருத்தம்

நீர்காட்டுங் தலமதனைப் பன்னிருகூருக்கி
நிகழ்த்துகின்ற ராசிதனைப் பிரமமேல்வைத்து
வார்காட்டும் வனமூலையாய் வலமிடமாயெண்ணி
மதிவெள்ளி யெவ்விடமோ வவ்விடத்தில் நீராம்
பார்காட்டும் பாம்பாகிற் பழங்கிணரு மென்க
பரிதிசனி செவ்வாயேல் நீரில்லையென்க
சீர்காட்டும் புதனுகிற் கல்லென்று சொல்க
செம்பொன்னே லற்பசல மென்கமட மயிலே.

நீர் உண்டென்பது பொதுவிதியாக உணர்த்தி உடனே மடங்காநீர் உண்டென்றும் கீழ்நீர் உண்டென்றும் பிரித்து உணர்த்து மென்றறிய

உதயம், ஆரூடம், நீர்க்கீழ், ஆனவை, ரிஷபம், கடகம், துலாம், விருச்சிகம், மகாம், கும்பம், மீனம் இவைகளாகில் நீர்உண்டென்றும் அவற்றிற் சந்திரன் சுக்கிரன் இவர்கள் நிற்கினும் அவற்றை நோக்கினும் மடங்காநீர் உண்டென்றும் புதன் குரு இவர்கள் நிற்கினும் அவற்றை நோக்கினும், கீழ் நீர் உண்டென்றும் சொல்லப்படும்.

மேல்உணர்த்திய மடங்காநீரை வேருெரு வகையினுல் எடுத்துணர்த்தி நீரின்மையும் கீழூற்று மேலூற்றுகளையுடன் உணர்த்து மென்றறிய

உதயம் ஆரூடம் நீர்க்கீழ் இராசிகளிற் பாம்பு நிற்கினும் அவற்றை நோக்கினும், மடங்காநீருண் டென்றும், சூரியன் அங்காரகன் சனி இவர்கள் நிற்கினும் அவற்றை நோக்கினும் நீர் இல்லையென்றும் நீர்க்கோட்கள் ஆரூடத்தில்நின்று நீரில் லாதகோட்கள் கவிப்பில்நிற்கில் கீழூற்றென்றும், நீர்க்கோட் கள் கவிப்பில்நின்று நீரில்லாதகோட்கள் ஆரூடத்தில் நிற் கில் மேலூற்றென்றும் சொல்லப்படும்.

மேலுணர்த்திய கீழூற்று மேலூற்றுகள் மாறு படாமாறு உணர்த்துமென்றறிய

பாம்பு உதயத்தில் நின்றவிடத்து நீர்க்கோட்கள் ஆரூடத்தில் நின்று நீரில்லாத கோட்கள் கவிப்பில் நிற்கில் மேலூற்றென்றும் நீர்க்கோட்கள் கவிப்பில்நின்று நீரில்லாத கோட்கள் ஆரூடத்தில் நிற்கில் கீழூற்றென்றும், இங்ஙனம் மாறுபடுத்திச் சொல்லப்படுவனவாம்.

ஊற்றுகட்கு புறகடை உணர்த்துமென்றறிய

உதயம் ஆரூடம் நீர்க்கீழ் ஆனவை நீர்ராசிகளாய் அவற்றில் நீர்க்கோட்கள் நிற்கில் மேலூற்றென்றும், நீரில் லாத கோட்கள் நிற்கில் கீழூற்றென்றுஞ் சொல்லப்படும்.

மடங்கா நீர் கீழ்நீர் உணர்த்துமென்றறிய

கண்டங்களிலே நின்ற சந்திரனே குரு கூடி நிற்கினும் நோக்கினும் மடங்காநீர் உண்டென்றும் சுக்கிரன்கூடி நிற்கி னும் நோக்கினும் கீழ்நீர் உண்டென்றும் சொல்லப்படும்.

மேல்உணர்த்திய மடங்கா நீரை வேறொரு வகையால் எடுத்துணர்த்தி உடனே பழங்கிணறு உணர்த்துமென்றறிய

கண்டங்களிலே நின்ற சந்திரனே பரிவேடங்கூடி நிற்கி னும் நோக்கினும், மடங்காநீர் உண்டென்றும் புதன் குரு கூடிநிற்கினும் நோக்கினும், பழங்கிணறுண்டென்றுஞ் சொல்லப்படும்.

மேல்உணர்த்திய மடங்கா நீரை வேறொருவகை யால் எடுத்துணர்த்தி பழங்குழிகளும் ஓடையும் உணர்த்துமென்றறிய

கண்டங்களிலே சந்திரனாவது சுக்கிரனாவது நிற்கினும் அவற்றை நோக்கினும், மடங்காநீர் உண்டென்றும், இந்திர தனுசு, பரிவேடம், தூமம், நுட்பம், இவர்கள் நிற்கினும், அவற்றை நோக்கினும், பழம் குழிகளாதல், ஓடையாதல், உண்டென்று சொல்லப்படும்.

உப்புவரி கரைவலிவு நீர்த்தெளிவு இவைகளென்

கண்டங்களிலே சூரியன் நிற்கினும் நோக்கினும் உப்பு வரியென்றும், பரிவேடம் நிற்கினும் நோக்கினும் கரைவலிவு

என்றும், சந்திரன் சுக்கிரன் இவைகள் நிற்கினும் நோக்கினும் நீர்த்தெளிவு என்றும், சந்திரன் சுக்கிரன் அல்லாத மற்றைய கோட்கள் நிற்கினும் நோக்கினும் நீர்த்தெளிவு இன்மை யென்றுஞ் சொல்லப்படும்.

வெள்ளுவரி கரையழிவு இடையூற்றகீழ் மோளை இவைகளென்றறிய

கண்டங்களிலே அங்காரகன் நிற்கினும் நோக்கினும் வேள் உவரியென்றும், புதன் நிற்கினும் நோக்கினும் கரை யழிவு என்றும் அக்கண்டம் மிதுனம் கன்னி சிம்மம் இவைகளாகில் இடையூற்று என்றும் கீழ்மோளை யென்றுஞ் சொல்லப்படும்.

பெருநீர் மோளை கல் எலும்பு இவைக ளென்றறிய

கண்டங்களிலே சனிபாம்பு இவைகள் நிற்கினும் நோக்கினும் பெருநீர் மோளையென்றும், குரு நிற்கினும் நோக்கினும் எலும்பு உண்டென்றுஞ் சொல்லப்படும்.

கிணற்றின் ஆழக்குறியின் முதற்பங்கில் நீரும் நடு புங்கில் நீரும் கடைப்பங்கில் நீரும் உணர்த்தி எட்டுமுழத்திலே நீரும் பாறையடியில் நீரும் திப்பையடியில் நீரும் ஆகிய இவைகளென்றறிய

கிணற்றின் ஆழக்குறிப்பின் சந்திரனுக்கு முதற்பங்கில் நீரும் சந்திரனுக்கு புதனுமல்லாத கோட்களுக்கு நடுப்பங் கில் நீரும், புதனுக்கு கடைப்பங்கில் நீரும், சூரியனுக்கு 8-முழத்தில் நீரும், கன்னியில் நின்ற பாம்பிற்கு பாறை யடியில் நீரும், சனிக்கு திப்பையடியில் நீரும் சொல்லப் படும்.

கிணற்றின் ஆழக்குறிப்பறிய

கீழ்நீரை எவ்வெவ் கோட்களால் நியமிக்கப்பட்டவோ அவ்வவ் கோட்களின் கதிர்களும் மேற்படி கோட்கள் நின்றுள்ளவை எந்த விராசிகளோ அந்தந்த இராசிகளின் கதிர்களும் எத்தனையோ அத்தனையும் சாண்களாதலால் சாண்களை முழமாக்கி நின்றதை சாணாகக்கொண்டு இத்தனை முழம் இத்தனை சாண்யென்று கிணற்றினழ வத்தாட்சி களையும் குறிக்கப்படும்.

கீழ்நீர்வினவின் நிலத்தின்கண் உணர்த்துமென

சூரியனுக்கு காடாம், அங்காரகன் சனி இவர்கட்கு முட்களாம், பாம்பிற்குத் தாழைபுதல் புற்று இவைகளாம், சந்திரனுக்கு வாழையாம், புதனுக்கு பலாவாம், குருவுக்கு தென்னை பனை கமுகு மா இவைகளாம், சுக்கிரனுக்கு கொடிகளாம்.

கிணற்றின் அனுபவம் அறிவது

கீழ்நீர்க்காக இதுவரையிற் கூறிய இடங்களிற் சுப கோட்கள் நட்பாக்ஷி உச்சக் கோட்களாக நிற்கினும் நோக்கினும் கிணற்றையுடையான் அனுபவிப்பன், பாவக்கோட்கள் பகை நீச்சக் கோளாய் நிற்கினும் அவற்றை நோக்கினும் பிறர் அனுபவிப்பர், மேல் உணர்த்திய இடங்கள் சரவிராசிகளும் உபயவிராசிகளுமாக நிற்கினும் அவற்றை நற்பாக்ஷி உச்சம்பெற்ற சுபக்கோட்களது நோக்கம் உள்ளவிடத்து உடையான் நன்மை அடைகுவன் என்றும், கிணற்றைத் தானே அனுபவிப்பன் என்றும், நோக்கமில்லாத விடத்து தீமை அடைகுவன் என்றும், கிணற்றைப் பிறர் அனுபவிப்பர் என்றும் சொல்லப்படும்.

கிணறிருக்கும் திசையின் பலனை அறிவது

உடையவன் இருக்கும் ஊருக்கும் மனைக்கும் கிணறானது கிழக்கு தென்கிழக்கு தெற்காகில் மக்களழிவாம், தென்மேற்காகில் அடிமைகளுண்டாம், மேற்காகில் பயிர்கள் நோய் கொள்ளும், வடமேற்காகில் குடும்பவிர்த்தியாம், வடக்காகில் தானியவிருத்தியாம், வடகிழக்காகில் தனப்பிராப்தி யுண்டாம், பிரமத்தானமாகில் லட்சுமி கடாக்ஷமுண்டாம்.

வினவினன் நிலம் கீறுதலின் பலன்

கீழ்நீர் வினவினனை அந்நிலத்தைக் கீறிக் காட்டென்றளவிற் சிறு விரலாற்கீறிற் பெண்பேறு உண்டாம், அணிவிரலாற் கீறில் சம்பத்துண்டாம், நடுவிரலாற் கீறில் தேசசஞ்சாரம் வரும், சுட்டுவிரல் பெருவிரல்களாற் கீறில் பொல்லாங்கு விளையும்.

கிணறுவெட்டத் தொடங்கும் மாதங்களின் பலன்

கிணறெடுக்க மாதங்கள் சித்திரை, வைகாசி, ஆனி இவைகளாகிற் பெருநீருண்டாம் உத்தமமாம். ஆடி, ஆவணி

இவைகளாகில் அற்ப நீருண்டாம் மத்திமமாம், மற்றைய மாதங்களாகில் நீரின்மையாம் அதமமாம், இப்படியே கோட்களின் அமைவும் உண்டாகுதல் கண்டு உறுதி சொல்லப்படும்.

வீட்டின்சாலை விவரமறிய

ஏற்றுகின்ற ஊரையும், எடுக்கின்ற மனையையும் 64-அரையாக்கி நடு நாலரை பிரஸ்தானம் நாலுமூலை நாலரையும் பேய்காக்கும் இந்த நான்கில் எட்டரையும் தேவர்கள் காவல் நின்ற 48-அரையும் கிழக்கு முதல் ஈசான்ய ஈறாய் கிழக்கே சமயல்கட்டு, தென்கிழக்கே பசுத்தொழுவம், தெற்கே குப்பைதொட்டி, தென்மேற்கு தோப்பு, மேற்கு எருமை தொழுவம், வடமேற்கு நெல்குதிர், வடக்கு போஜனசாலை, வடகிழக்கு நீர்ச்சாலை கிணறு, இப்படி மனைகளைக் கட்டினால் நற்பூவையாகிய மகாலட்சுமி பொருந்தி யிருக்கும்படியான மனைகளா யிருக்கும்.

அவரவர்கள் ஜெனித்த ராசிக்கு வாசற் பொருத்தம்

இடபம், மிதுனம், கடகவிராசியிற் ஜெனன மானவர்களுக்கு வடக்குவாயில் வீடும், சிங்கம், கன்னி, துலாம் இந்த ராசிகளில் ஜெனன மானவர்களுக்கு கிழக்கு வாயில் தெற்கு வாயில் வீடும், விருச்சிகம், தனுசு, மகரம் இந்த ராசிகளில் ஜெனனமானவர்களுக்கு தெற்கு வாயில் வீடும், கும்பம், மீனம், மேஷம், இந்த விராசிகளிற் ஜெனன மானவர்களுக்கு தெற்கு வாயில் வீடும், கட்டினால் சுபங்கள் விசேஷமாக நடக்கும்.

வீட்டுக்குத் தூண் நிறுத்த விவரமறிய

அவரவர்களுக்குண்டாகிய மனையின் நீளத்தை ஒன்பது பாகஞ் செய்து நடுபாகத்தை மூன்றுகூறு செய்து இதில் இரண்டுகூறு தெற்கே நீக்கி நின்ற ஒரு கூறில் வாஸ்துநாபியென்று தெரிந்து கம்பம்நாட்ட உத்தமம்.

வீட்டுக்கு வாயில்வகுத்த விவரமறிய

மனையின் அகலத்தை 9-பாகஞ் செய்து இடது பாகத்தில் 3-கூறும், வலது பாகத்தில் 5-கூறுஞ் செய்து நின்றகூறு ஒன்றில் வாயில்வைக்க உத்தமம்.

கதவு நிலைநிறுத்த விவரமறிய

வீடுகட்ட குறித்த முகூர்த்தங்களிலே சித்திரை வைகாசியிலே வடக்குவாயிலும், ஆடி ஆவணியிலே கிழக்கு வாயிலும், ஐப்பசி கார்த்திகையிலே தெற்குவாயிலும், தை மாசியிலே மேற்குவாயிலும், நல்ல சுபமுகூர்த்தங்களிலே நான்கு வாயில்களுக்கும் நிலைநிறுத்த உத்தமம்.

கதவிேைைச விவரமறிய

தாள் 1-3-5-மரம் கதவுநிற்க பின்னும் கதவிேைைச எக்காளம்போலும், கழுதையின் ஓசைபோலும், செக்கிேைைசபோலும், சப்திக்குமாகில் புத்திரபாக்கியமில்லை மனையாள் மரணமடைவாள் தீமையைத்தரும். அல்லது தாளத்தின் ஓசைபோலும் யானையின் வோசைபோலும் சப்திக்குமாகில் உத்தமம். கரும்பாலையின் வோசைபோலும் சப்திக்குமாகில் புத்திரவிரோதம், பெண்பழி கொள்ளும் என்பதாம்.

இதுவுமது

திறந்தகதவு தானே மூடிக்கொண்டால் அந்த வீட்டுக்குடையவனுக்கு பிராணபயமுண்டாம் அல்லது சப்தத்தோடு மூடிக்கொண்டால் வாசஞ்செய்ய மனிதரற்று மனைபாழாகும் திறந்த கதவு அசையாமல் நிலையில் நிற்கில் வீட்டிற்குடையவன் குடும்பத்துடன் வாழ்வான் என்பதாம்.

வீட்டின்பக்கத்தில் நிற்கக்கூடிய மரங்கள்

தெங்கு-பலா-வாழை-கமுகு-மாதுளை-திராட்சி-வேம்பு-எலுமிச்சம்-முல்லை-மல்லிகை - தாதுமாதுளை-துளசி - கொன்றை-நாவல் - பவளமல்லிகை - மா - நாரத்தை-பன்னீர்ச் செடி இவைகள் முதலாகிய மரங்கள் வீட்டின்பக்கத்தில் நிற்பது சுபம் என்பதாம்.

வீட்டின்பக்கத்தில் நிற்கக்கூடாத மரங்கள்

புளியமரம்-அகத்திமரம்-நெல்லிமரம்-மிளகுமரம்-கூளாமரம்-இலுப்பைமரம்-வில்வமரம்-அலரிமாம்-முருங்கைமரம்-வாகைமரம் - எரண்டமரம் - மருதமரம் - பருத்திமரம் - பனைமரம்-எட்டிமரம்-நாவல்மாம்-எருக்குமரம் இவைகள் மனையில் இருக்குமாகில் தாமரைமலரிலே வீற்றிருக்கும்படியான

இலட்சுமிதேவி வாசஞ் செய்யாமல் மூதேவியானவள் வாசஞ்செய்து அந்த மனையைக் கெடுக்கும் என்பதாம்.

மாடு முதலானவை கொள்ளல் அல்லது கொடுத்தல்

திங்கள் - புதன்-வியாழன்-சனிவாரங்களும் துவிதியை திருதியை - பஞ்சமி-சஷ்டி-சப்தமி-தசமி-ஏகாதசி-துவாதசி - திரயோதசி திதிகளும், அசுவனி-புனர்பூசம்-அஸ்தம்-சுவாதி-விசாகம்-கேட்டை-அவிட்டம்-சதையம்-ரேவதி இந்த நக்ஷத்திரங்களும், மேஷம் - மிதுனம்-சிங்கம்-கன்னி-விருச்சிகம்-தனுசு-மகரம்-மீனங்களும், மாடு-ஆடு முதலானவைகள் கொள்ள கொடுக்க பட்டிகூட்ட இது முதலாகிய கருமங்களுக்கு உத்தமம்.

இதுவுமது

இன்னும் அசுவனி உத்திரட்டாதிகளிற் குதிரையும், பூராடம் உத்திராடம் , சதையம் இதுகளில் யானையும், அஸ்தம் சுவாதியிற் பசுவும் எருமையும், திருவாதிரையில் உழவுமாடும் கார்த்திகை பூசத்தில் மேஷ லக்கினத்தில் ஆடும் கொள்ளவும் கொடுக்கவும் உத்தமம்.

சுவர் பிளப்பு அல்லது புத்து விவரமறிய

கிழக்கில் சுவர் பிளக்கில் அவ்விட்டில் வாழ்கின்றவர் நாசமடைவார், தேயுவில் அல்லல் உறுவர், தெற்கில் மரணமடைவார், நிருதியில் அழகு பெறுவர், மேற்கு அர்த்த ஆனி, வடமேற்கில் சாவு, வடக்கில் அர்த்த லாபம், ஈசானியம் ஸ்திரீ மரணமென்று எட்டு திக்குகளுக்கும் பலனறிவது.

இன்னம் புத்தெடுக்கில் அகத்தில் நடு, பிரமஸ்தானம் சாவு, கிழக்கு செல்வம், அக்கினி மனை பீடிக்கும், எமன் துக்கம், நிருதி இலட்சுமிகரம், வருணன் புத்திரலாபம், வாயு சத்துரு உண்டாகும், குபேரன் நன்மை, ஈசான்யம் வியாதி யென்று சொல்லப்படும்.

ஜென்ம நக்ஷத்திர மரங்களின் விவரமறிய

அசுவனி-காஞ்சிரம், பரணி-நெல்லி, கார்த்திகை-ஆத்தி, ரோகணி-நாவல், மிருகசிரம்-கருங்காலி, திருவாதிரை-சண்பகம், புனர்பூசம்-புன்னை, பூசம்-ஆல், ஆயிலியம்-பாகை, மகம்-அரசு, பூரம்-விளா, உத்திரம்-பலா, அஸ்தம்-எருக்கு, சித்திரை - மாதளை, சுவாதி - வில்வம், விசாகம்-மருது, அனுஷம் - தாழை, கேட்டை - மகிழ், மூலம்-மூங்கில்,

பூராடம்-தேமா, உத்திராடம்-வஞ்சி, திருவோணம்-பலாசு, அவிட்டம்-வன்னி, சதயம்-கடம்பு, பூரட்டாதி-புளி, உத்திரட்டாதி-வேம்பு, ரேவதி-இலுப்பை, இந்த இருபத்தேழு நாளின் பேரானபடியால் தன் நக்ஷத்திர மரங்களை தான் வெட்டச் சொல்லக் கூடாது. அப்படி அல்லவென்று வெட்டினால் தன்னை வெட்டினதுபோலாகும், தன் நக்ஷத்திரங்களை வெட்டாமல் பூசைபண்ணிக் கொண்டு வரவும் சுபம்.

காலற்றநாள், தலையற்றநாள், இடையற்றநாள், முழுநாள் இவைகளின் பலனறிய

கார்த்திகை உத்திரம் உத்திராடம் காலற்றநாள், மிருகசீரிஷம் சித்திரை அவிட்டம் உடலற்றநாள், புனர்பூசம் விசாகம் பூரட்டாதி தலையற்றநாள், இந்நாட்களில் மனைகோலினும் வழிநடக்கினும் மரணமாகும்; விவாகஞ் செய்யில் அந்த பெண் விதவையாவாள்; இந்த நாட்களைக் குறித்து கற்றுணர்ந்த பெரியோர்கள் இனி எந்த நூலிலாவது இதற்குச் சமாதானமாகச் சொல்லி இந்த விதியை தவிழ்ந்து நடத்துவராயின் நலமில்லையென மூதோர் சொல்லுவர். ஆதலால் இந்த நாட்களை நீக்கி மற்ற பரணி-அசுவனி-ரோகணி-திருவாதிரை - பூசம் - ஆயிலியம்-மகம்-அஸ்தம்-சோதி-அனுஷம்-கேட்டை-மூலம்-பூராடம்-திருவோணம்-சதயம் -உத்திரட்டாதி-ரேவதி இப்பதினெட்டு நாளும் முழுநாளாதலால், இந்நாட்களில் மனைகோலல் முதலிய சுபகாரியஞ் செய்ய உத்தமம்.

மேல்நோக்குநாள் விபரமறிய

மேல் நோக்கு நாளென்னும் ஊர்த்தமுக நட்சத்திரங்களாகிய ரோகணி-திருவாதிரை-பூசம்-உத்திரம்-உத்திராடம்-திருவோணம் - அவிட்டம் - சதையம் - உத்திரட்டாதி ஆகிய இவ்வொன்பது நட்சத்திரங்களிலும் பட்டாபிஷேகம் உத்தியோகம், இராஜ தெரிசனம் வியாபாரம் கிரைய விக்கிரையம், ஆபரணம், வாசக்கால், தூண், துவசம், தோப்பு முதலியவைகள் செய்ய விர்த்தியாகும் உத்தம பலன்.

பக்கநோக்குநாள் விபரமறிய

பக்கநோக்குநா ளென்னும் திரியங்கமுக நக்ஷத்திரங்களாகிய அசுவனி - மிருகசீரிஷம் - புனர்பூசம் - அஸ்தம்-சித்திரை-சுவாதி-அனுஷம்-கேட்டை-ரேவதியாகிய இவ்வொன்

பது நக்ஷத்திரங்களிலும் பயிர்வைக்க, பசு-எருது-எருமை-குதிரை-ஒட்டை-யானை முதலியதுகள் வாங்கவும், விதை விதைக்கவும், யாத்திரை முதலியவைகள் செய்ய விர்த்தியாகும் உத்தம பலன்.

கீழ்நோக்குநாள் விவரமறிய

கீழ்நோக்கு நாளென்னும் அதோமுக நக்ஷத்திரங்களாகிய பரணி-கார்த்திகை-ஆயிலியம்-மகம்-பூரம்-விசாகம்-மூலம்-பூராடம்-பூரட்டாதியாகிய இவ்வொன்பது நக்ஷத்திரங்களிலும் கணக்கு அப்பியாசிக்கவும், கிணறு-குளம்-அகழி-ஓடை-களஞ்சியஞ் செய்விக்கவும், புதையல் போடவும், கிழங்கு முதலானவைகள் நடவும், விர்த்தியாகும் உத்தம பலன்.

குளிகன் அறிய விவரம்

எந்தக் கிழமையில் குளிகைகாலம் பார்க்க வேண்டுமோ அந்தக் கிழமை முதலாக சனிக்கிழமை வரையிலும் கணக்கெண்ணி தொகை வந்ததை மூன்றே முக்காலிற் பெருக்கிக் கண்ட தொகையை குளிகை காலமாக்கிக்கொண்டு மனை கோல, ஊர் குடியேற்ற, முகூர்த்தக்கால்நாட்ட, வாகனங்களேற, தானியங்கள், இருப்புக்கட்ட மெத்தவும் உத்தமமாகும் என்பதாம்.

ஒரை முகூர்த்தம்வைத்து சோமவாரத்தி னுதயத்தில் கால்நாட்டி புதவார முதயத்தில் கைவளையல்கள் முதலானதுகளைப் பூட்டி வெள்ளிக்கிழமை யுதயத்தில் ஓடுமாத்தி வியாழக்கிழமை உதயத்தில் குடிபுகுந்தால் சத்துருக்களாலே நெருப்பிட்டுக் கொளுத்தினலும் அந்த வீடு வெந்து போகாது. அந்த வீட்டில் குடியிருப்பவர்கள் இந்திரனைப் போல சகல போக்கியங்களையும் அடைவார்கள் என்பதாம்.

லக்கினத் தியாச்சிய விவரமறிய

மேஷம்-ரிஷபம்-கன்னி-தனுசு முதலில் அரை நாழிகையும், கடகம்-விருச்சிகம்-மகரம்-மீனம் அந்தத்தில் அரை நாழிகையும், மிதுனம்-சிங்கம்-துலாம்-கும்பம் மத்தியில் அரைநாழிகையும் தியாச்சியமாம், அந்த தியாச்சியவேளையில் யாதொரு சுபகாரியமும் செய்யலாகாது என்பதாம்.

தேவாலயச் சிற்பம்

திவ்விய தளவிமானஞ் செய்கிறதற்கு கௌவடியங்கொள்ள விவரம்

கிராமத்துக்கும் பிரபுவுக்கும் ஆயாதியில் பொருந்தின பிரஸ்தாரகக் காலப்பிரவாய் அகலத்தை ஆறுகூறுசெய்து கனங்கூடுபங்கு-1, அகாரைப்பங்கு-4, கர்னக்கூடுபங்கு-1 ஆக பங்கு 6-ம் சரி.

அகலம் கண்டமீளம் வானமுதல் பிரகாரமட்ட வுயரங் கொள்வது, கல்காரவுயரத்தைப் பனிரண்டு கூறுசெய்து அதிஷ்டானங்கூறு-3, கால உயரங்கூறு-6, பிரஸ்தாரங் கூறு-3 ஆக கூறு 12-ம் சரி.

அதிஷ்டான உயரத்தை இருபத்திநான்கு கூறுசெய்து செகதிகூறு-8, குமுதங்கூறு-8, பட்டியல்கூறு-8 ஆக கூறு 24-ம் சரி.

காலுயரத்தை யெடுத்து ஏழு கூறுசெய்து ஒருபங்கு வேதியனுயரங் கொள்வது.

காலுயரத்தை மூன்றுகூறுசெய்து இருகூறு பெருங்கால் சமன்மட்டம், மேலொருகூறு தாடிகுடம் பலகை விரல் கண்டபோதியல்மட்டம் இந்த ஒருகூறையும் இருபத்து நான்கு கூறுசெய்து தாடிகூறு-2, வயிறங்கம் கூறு-1, குடம் கூறு-4, வயிறங்கம்கூறு-1, பலகைகூறு-6, வீரகண்டம் கூறு-5, போதியல்கூறு-5 ஆக கூறு 24-ம் சரி.

சிறுகால் அகாரச்சாலை அந்திரைக்கால்கள் விபரம்

காலுயரத்தை இருபங்குபண்ணி ஒரு பங்கு சிறுகால் காய் சமன்மட்டம், மேலொரு பங்கை இருபத்து மூன்று கூறு செய்து தாடி குடம் பலகை கூறு-7, வீரகண்டம் கூறு-4, சித்து உத்தாம்கூறு-1, கபோதகம்கூறு-4, வியாளம் வேதியல் கழுத்துகூறு-7 ஆக கூறு 23-ம் சரி.

பிரஸ்தாரம் இருபத்தொருகூறு செய்து உத்திரம் எழுதகம்கூறு-8, கபோதகம்கூறு-7, வியாளம்கூறு-6 ஆக கூறு 21-ம் சரி.

செங்கல்வேலைக்கு கால்பிரவாய் அகலத்தை யெடுத்து ஒன்றுக்கு ஒன்றரையுயரங் கொள்வது. இந்த வுயரத்தை பதினாறுகூறு செய்து கர்னக்கூறு மட்டம்கூறு-5, பிரஸ்தாரங்கூறு-2, வேதியல்கூறு-1, கழுத்துக்கூறு-2, பண்டிகைக் கூறு-4½, ஸ்தூபி-1½ ஆக கூறு 16-ம் சரி.

கர்னக்கூடு உயரத்தை ஒன்பது கூறு செய்து வேதியல் கூறு-1, காலுயரங்கூறு-1½, தாடி குடம் பலகை வீரகண்டம் கூறு-1, உத்திரம் கபோதகர வியாளம்கூறு-1½, வேதியல் கழுத்து சித்து உத்திரம் கூறு-1¼; தூக்கோடு பண்டிகை பலகை கூறு-2¾ ஆக கூறு 9-ம் சரி.

பிரஸ்தாரவுயரத்தை இருபத்தொரு கூறுசெய்து உத்திரம்கூறு-8, கபோதகம்கூறு-7, வியாளம்கூறு-6 ஆக கூறு 21-ம் சரி.

வேதியலுயரத்தை எழு கூறுசெய்து ரண்டம்கூறு-3, கம்புகூறு-1, எழுதகம்கூறு-1, தலைபிடைகூறு-1, மேற்கம்பு கூறு-1 ஆக கூறு 7-ம் சரி.

கழுத்துயரத்தை யெடுத்து இருகூறு செய்து ஒருகூறு காலுயரம், ஒருகூறு உத்திரம் கம்பு தலைமேல் மட்டம் சரி.

பண்டிகை யுயரத்தைப் பத்து கூறுசெய்து தூக்கோடு கூறு-1, கையுருளிக்கூறு-½, ரவுந்தபற்பம்கூறு-½, பண்டிகை கூறு-5, மாலைக்கட்டுகூறு-¼, பலகை கூறு-¾, மகாபற்பம் கூறு-2 ஆக கூறு 10-ம் சரி.

விக்கிரகச் சிற்பம்

பால கணபதிக்கு

தேங்காய் ஒருகை, மாம்பழம் ஒருகை, வாழைப்பழம் ஒருகை, பலாப்பழம் ஒருகை, கரும்பு ஒருகை, மோதகம் ஒருகை, ஆக கை-6 பாலசூரியனைப்போல் வர்னம்.

தனுர் கணபதிக்கு

இடதுகைகளில் ஒருகை பாசம், ஒருகை விளாம்பழம், ஒருகை நாவற்பழம், வலது கைகளில் அங்குசம் ஒருகை, எள்ளுருண்டை ஒருகை, மோதகம் ஒருகை, ஆக கை-6, இரத்த வர்னம்.

பக்தி கணபதிக்கு

இடதுகை வாழைப்பழம்-பரமானம், வலதுகை தேங்காய்-வெல்லம், துதிக்கையில் மாம்பழம், வெள்ளை வர்னம்.

வீர கணபதிக்கு

வலதுமேற்கை அங்கிசம்-கத்தி-வேதாளம், ஸ்தூல கணபதிக்கு மோதகமும், இடது கையில் கமண்டலமும், வலது மேற்கையில் ருத்திராக்க மாலையும் தண்டும் வெள்ளை வர்னம்.

பிங்கள கண்பதிக்கு

வலதுகை மேற்கையில் பரசு, கீழ்க்கையில் கொம்பு, இடதுகை மேற்கையில் கருப்பந்தடி, கீழ்க்கையில் மாம்பழம், துதிக்கையில் மோதகம் குங்கும வர்னம்.

உச்சிட்ட கணபதிக்கு

வலதுகை மேற்கையில் பானு, கீழ்க்கையில் ருத்திராக்கம், இடதுகை மேற்கையில் வில்லும், கீழ்க்கையில் நெற்கதிரும், துதிக்கையை யோனிக்குள் வைத்து வல்லபையை மடியில் வைத்து இருப்பது வல்லபைக்கு வலதுகையில் தாமரைப் புஷ்பம் எடுத்துத் தொடையில் போட்டது, [விக்கினேஸ்பரனுக்கு] வலதுகையில் அங்குசம்-தர்தம், இடதுகையில் பாசம் வாள் இரத்தவர்னம்.

க்ஷிபரே கணபதிக்கு

வலதுகை மேற்கை அங்குசம், கீழ்க்கை தந்தம், இடது கை மேற்கை பாசம், கீழ்க்கை கடகம், துதிக்கையில் கலசம், குங்கும வர்னம்.

ஏராபாச கணபதிக்கு

ஐந்துமுகம் வலது கைகளில் அங்குசம் அட்சமாலை பாசம் கொம்பு அபயம், இடதுகைகளில் பாசம் ரத்தின கலசம் திரிசூலம் தாமரைப்பூ வரதம் ஏந்தினது சிங்க வாகனம் பத்துக் கைகள் வெள்ளை வர்னம்.

லட்சுமி கணபதிக்கு

வலது மேற்கையில் அங்குசம் மாதுளம்பழம் பாணம் சூலம் அம்மனை யணைத்தகையொன்று, இடது மேற்கையில் பாசம் இரத்தின கலசம் தாமரைப்பூ வில் வல்லபையை மடியில் வைத்து அணைத்த கையொன்று, ஆக கைகள்-10. வலதுபுரம் இலட்சுமி ஒருகை தாமரைப் பூவும் ஒருகை வரதமும், இடதுபுரம் வல்லபை ஒருகை அபயமேந்தினதும் இரத்தின வர்னம்.

மகா கணபதிக்கு

வலதுகை மேற்கையில் அங்குசம் அம்பு தண்டு சக்கரம் மாதுளம்பழம் கொம்பு இடது மேற்கையில் பாசம் வில் தாமரைப்பூ இரத்தின கலசம் நெற்கதிர் வல்லபையை அணைத்த கையொன்று துதிக்கையுடன் 13-கைகள், வெள்ளை வர்னம்.

புவன கணபதிக்கு

வலதுமேற்கை சக்கரம் புஷ்பபாணம் அங்குசம் கொம்பு, இடதுமேற்கை சங்கு கரும்பு வில்லு பாசம் கண்ட கோடாலி, இரத்தின வர்னம்.

நிர்த்தன கணபதிக்கு

வலதுகையில் அங்குசமும் தந்தமும் இடது கையில் பாசமும் கோடாலியும் துதிக்கையில் பணியாரம்.

ஞானசத்திதராருக்கு

வலதுகையில் சத்தி இடதுகையில் வச்சிராயுதம், முகம் ஒன்று இரத்தின வர்னம்.

தண்டாயுதபாணிக்கு

வலதுகை தடியூன்றி நிற்றல் இடதுகை தொங்கவிட்டுத் தொடையைத் தொடப்பட்டது, உச்சிதமாய் நின்றவர் கோவணங்கட்டல் ருத்திராக்கமாலை இரத்தினவர்னம்.

சேனாதிபதி ஆறுமுகத்துக்கு

விசித்திரமான ரத்தினவர்னம் வலது மேற்கையில் சத்தி கத்தி அங்குசம் பாணம் தண்டு அபயமும் இடது மேற்கையில் வச்சிராயுதம் கேடகம் பாசம் சேவற்கொடி தாமரைப்பூ வரதமும் ஏந்தினது.

சுப்பிரமணியருக்கு

ஒருமுகம் நாலுகை தங்கவர்னமுடையவர் அதில் வாகனம்-2, நேத்திரமும் வலது மேற்கையில் சத்தி தனதுகையில் அபயம் இடது மேற்கையில் சேவற்கொடி தனது கையில் வரதமேந்தினது, குங்குமவர்னம்.

சரவணோற்பவருக்கு

ஆறுமுகமும் பன்னிருகரமும் பன்னிருகண்ணுமுடையவர் வலதுமேற்கை சத்தி பாணம் சேவற்கொடி தண்டு கத்தி அபயமேந்தினது இடதுமேற்கை வச்சிராயுதம் வில்லு மணி தாமரைப்பூ கேடயம் வரதமேந்தினது.

குமாரருக்கு

வலதுமேற்கை கத்தி தாமரைப்பூ, இடதுமேற்கை கேடயம் சேவற்கொடி.

சண்முகனுக்கு

வலதுமேற்கையில் சத்தி பாணம் சேவற்கொடி தண்டு கத்தி அபயம் இடதுமேற்கையில் வச்சிராயுதம் வில்லு தாமரைப்பூ சூலாயுதம் கேடயம் வரதம் வடக்குமுகமாக வாகனம் மயில் இரத்தவர்னம்.

தாருகாரியானுக்கு

ஆறுமுகமும் பன்னிருகரமுமுடையவர் வலதுமேற்கையில் பாணம் அங்குசம் சேவற்கொடி கத்தி உலக்கை அபயமும் இடதுமேற்கையில் வில்லு பாசம் தாமரைப்பூ கேடயம் சத்திவரதமுமேந்தியது,

பத்திரகாளிக்கு

காலுகையும் மூன்று நேத்திரமும் பாம்பினுலே ஆபரணமும் சிரசி லக்கினிச் சுவாலையும் மகிடாசூரனைக் காலிலே போட்டு உதைத்துச் சூலத்தினற் குத்தின பாவனையாகவும் வலது கையிற் சூலமும் பக்கக்கையிற் பாசமும், இடது கையிற் கபாலமும் பக்கக்கையில் டமரகமுமேந்தியது.

விக்கிரகஞ் செய்ய லக்ஷணம்

சிலாவினுலும் தாம்பிரத்தினுலும் சுதையினுலும் சித்திரத்தினுலும் தந்தத்தினுலும் மரத்தினுலும் விக்கிரகஞ் செய்யப்பட்ட லட்சணத்தைச் சொல்லுகிறேம்.

பாதாதி யுச்சிபரியந்தம் பொருந்திய வுயரத்தை 120-கூறுசெய்து அடியிற்கண்டவாறு பங்கிட்டுக் கொள்ளவும்.

லாடங்	கூறு	4	மெட்டிரங்	கூறு	13
முகங்	,,	13	உள்ளன்	,,	26
கண்டங்	,,	4	சரணங்	,,	4
இருதயங்	,,	13	சங்கங்	,,	26
நாபி	,,	13	நாவிகை	,,	4

ஆக கூறு 120-ம் சரி.

முகப்பரப்பு கூறு-12, கழுத்துப்பரப்பு கூறு-10, வாகு பரப்பு கூறு $39\frac{1}{2}$, தேயப்பரப்பு கூறு-20, வயிறுபரப்புகூறு-13, கடிகை பரப்பு கூறு-26, உறப்பரப்பு கூறு-13, சானு பரப்பு கூறு-7, சங்கைபரப்பு கூறு-6, கொண்டைப்பரப்பு கூறு-4.

விக்கிரத்தினுடைய அங்கமானங்கண்டதை 124-பங்கு பண்ணி யதில் ஒருபங்கு அங்குலமென்றறியவும், அந்த அங்குலத்தை எட்டுபங்கு பண்ணில் ஒருபங்கு ஒருயவை யென்றறியவும், இந்த அங்குலத்தினுலும் யவையினுலும், விக்கிரத்தினுடைய உயரத்தையும், அகலத்தையும் சுற்றளவையுஞ் சொல்லுகிறேம்.

லாடம் பங்கு-4, யவை பங்கு-3, லாடத்தைப் பற்றி நெற்றிப் பிறையேந்தி மட்டாக்கி பங்கு-4, யவை பங்கு-3, நெற்றிப் பிறை யந்தத்தைப்பற்றி புடாந்தனம் அளவு பங்கு-1, யவை பங்கு-3, புடாந்தகத்தில் நின்று அனலாந்தம் மட்டாக்கி பங்கு - 4, யவை - 3, அனலாந்தத்தைப்பற்றிக் கீழ்ப்புடை பங்கு-1, கழுத்துப்பங்கு-3,

யவை பங்கு-7, இரக்காசூத்திரத்தில் நின்று இருதயம் மட்டாக்கி பங்கு-13, யவை-3, இருதயத்தில் நின்று நாமம் மட்டாக்கி, பங்கு-13, யவை-3, மேஷ்டிர மூலத்தைப்பற்றித் தொடை நீளம் பங்கு-27, முழங்கால் பங்கு-4, முழங்காலைப் பற்றிக் கணைக்கால்வரை பங்கு-27, பாதம்பங்கு-4, இது விக்கிரகத்தினுடைய அங்கமான வுயரத்துக்குச் சொன்னோம்.

அங்குஷ்டபாணி பரியந்தம் நீளம் பங்கு-17, இரக்காசூஸ்திரத்தைப்பற்றி முழங்கை மட்டாக்கி பங்கு-27, முழங்கை பங்கு-2, முழங்கையில் நின்று மணிப்பந்தம் மட்டாக்கி பங்கு-21, மணிப்பந்தத்தில் நின்று மத்திபமங்குலி அங்குச மட்டாக்கி கைத்தலங்கீழ்ப்பங்கு-13½, முகத்தில் விஸ்தாரம் பங்கு-12, கழுத்து விஸ்தாரம் பங்கு-9, இரண்டு வாகுநடு விஸ்தாரம் பங்கு-41, இரண்டு ஸ்தன்னியத்துக்குக் கீழ் விஸ்தாரம் பங்கு-21, அதன்கீழ் மத்திய வுதரவிஸ்தாரம் பங்கு-16, நாபி அருகுக்கு விஸ்தாரம் பங்கு-21, அதன்கீழ் ரோணிவிஸ்தாரம் பங்கு-13½, தொடை நடுவிஸ்தாரம் பங்கு-12, சிறு தொடை விஸ்தாரம் பங்கு-8, முழங்காலுக் கீழ் விஸ்தாரம் பங்கு-6½, நடுக்கைவிஸ்தாரம் பங்கு-4½, காட்டு விஸ்தாரம் பங்கு-5, பெருவிரல் நீளம் பங்கு-4, பாதம் பங்கு-4½, காட்டு விஸ்தாரம் பங்கு-5, விசாலவிஸ்தாரப் பரப்பு பங்கு-6½, காட்டில் அருகுபொத்த விஸ்தாரம் பங்கு-2, யவை-1, நகவிஸ்தாரம் பங்கு-1, நகத்தில் ஆயாமம் பங்கு-1, யவை-1, நீண்ட விருத்தமாகப் பண்ணுவான் காவிற் பாதச்சனி விரல் நீளம் பங்கு-4, யவை-3, மத்திபமங்குலி விரல்நீளம் கடிகைவிஸ்தாரம் பங்கு-21, அடித்தொடரம் பங்கு-3, யவை-8, அனுமி கைவிரல்நீளம் பங்கு-3, யவை-1, கனிஷ்டிகை விரல் நீளம் பங்கு-2½, நகவிஸ்தாரம் பங்கு முன்சொன்னபடியே அந்த விரல் விஸ்தாரத்தைப் பற்றியது வாகு மத்திபத்தில் விஸ்தாரம் பங்கு-8½, முழங்கை விஸ்தாரம் பங்கு-7, முழங்கைக்குக்கீழ், முழங்கை விஸ்தாரம் பங்கு-6, மணிப்பந்தம் விஸ்தாரம் பங்கு-4½, மணிப்பந்தத்தின் மேல் உள்ளங்கை நீளம் பங்கு-7, நடுவிரல் நீளம் பங்கு-6½, தற்சனிவிரல் நீளம் பங்கு-6, அனுமிகைவிரல் நீளம் பங்கு-6, கனிஷ்டிகை விரல் நீளம் பங்கு-4, அங்குஷ்டவிரல் நீளம் பங்கு-4.

கையில் பெருவிரல் விஸ்தாரம் பங்கு-1, யவை-2, தற்சனி விரல் விஸ்தாரம் பங்கு-1, அனுமிகைவிரல் விஸ்தாரம் பங்கு-1, கனிஷ்டிகை விரல் விஸ்தாரம் யவை-6, விரல் உயரத்தை ஆறு கூறுசெய்து அதில் ஒருகூறு நகஞ்செய்வான், இந்தக் கைவிரல் உயரம் 4-செய்யவும், மொழிக்குப் பங்கு-2 யவை-5, கனிஷ்டிகை விரல்மொழிக்கு மேல் பங்கு-2, யவை-3, முதல் மொழிக்கும் மணிபந்தத்துக்கும் நடுவாக மொழி செய்யவும்.

உள்ளங்கை அடிவிஸ்தாரம் பங்கு-6½, அங்குஷ்டவிரலுக்கும் தற்சனிவிரலுக்கும் நடுவெளி நீளம் பங்கு-3½, அங்குஷ்ட அடி விரலுக்கும் மணிப்பந்தத்துக்கும் நடுவெளிக் குளிமாறுபோலே பங்கு-4, மணிப்பந்தத்துக்கும் அஸ்ததலம் பங்கு-2½, கனிஷ்டிகை நீளம் பங்கு-1, விரலடியிலே மாங்கிஷம் பூராவாய்-2 பங்கு காணச்செய்வான், பெருவிரல் குளிமாறுபோலே இருக்கிறயிடம் பங்கு-2, [உள்ளங்கையிலே சங்குபோலவும், சக்கரம்போலவும், திரிசூலம்போலவும், பதுமம்போலவும், குசலத்தொடர்போலவும் கையிலே சூடரேகையராய் அஸ்தம் செய்வான்.] காதுக்குப் பங்கு-32, இரண்டு காதுக்குமுன் விருத்தம் முன்பங்கு-22, இரண்டு காதுக்குப் பின் விருத்தம் பங்கு-12, காதுக்கு விஸ்தாரம் பங்கு-2.

நேத்திராந்தத்தில் காணந்தம் பங்கு-1, நடுநெற்றியிலிருந்து காதுக்குப் பங்கு-9, கேசாந்தத்துக்கும் நேத்திராந்தத்துக்கும் புருவஞ் செய்யவும், புருவமட்டத்திற் காது செய்யவும், புருவமட்டத்துக்கும் காது அரைப்பங்கு ஏத்தியும் குறைத்தும் செய்யலாம். புருவணி விஸ்தாரம் அளவு-1, புருவம் சிங்காரம் போலவும், இளம்பிறை போலவும் செய்யலாம். அடிப்புருவம் விஸ்தாரம் பங்கு-½, கண்புருவம் நீளம்-5, கண்ணுக்குள்ளே சுவேத மண்டலம் பாரிசம் பங்கு-1, யவை-1, கிருஷ்ண மண்டலம் யவை-6, சோதி மண்டலம் யவை-1, ஒரு யவையைப் பங்குபண்ணி அதிலொருபங்கு சூடமண்டலஞ் செய்யலாம்; கண்ணின் நீளம் பங்கு-3, கண்விஸ்தாரம் யவை-6, கண்ணுக்குள் இரத்த மண்டலம் யவை-1½, கண்ணுக்குமேல் நீளம் யவை-1½,

கண்ணிமைக்கும் புருவத்துக்கும் பங்கு யவை-6, மூக்கு யவைபாரிசம் கழுத்துப்பங்கு-2, யவை பங்கு-2, முகபடாங் தத்தைப்பற்றி நடுமூக்கு விஸ்தாரஞ் செய்யவும். நடுமூக் கைப்பற்றி யடிமூக்குச் செய்யவும். கோசு மூலத்தி லிருந்து மூக்குசரம் பங்கு-2, மூக்குரந்திரம் விஸ்தாரம் யவை-7½, ரந்திரத்தின் இரண்டு விஸ்தாரம் யவை-5, மூக் கின் அகலம் எள்ளுப்பூப்போலே செய்யலாம்; மூக்குப் படர்ந்தும் எள்ளுப்பூவில் மாச்சக்கொட்டைப் பிளந்து ஒட்டினுப்போலே யிருக்கவும்; மூக்குப்பிடை உயரம் பங்கு-1, மூக்குநுனி விஸ்தாரம் யவை-2, மூக்குநுனி யவை-1, தலம்பிதமாகச் செய்வான்.

ரோசிநீளம் யவை-4½, ரோசியுயரத்தில் பாதிரோசி விஸ்தாரமேல் வாயுதடு நீளம் பங்கு-4, யவை-2, மேலுதடு விஸ்தாரம் யவை-10, நுனியவை-6, நுனிவாயாய்ப் பண்ணு வான்.

உதடு வுயரம் யவை-10, உதடுக்குள்ளே யவை-2, உத டுக்குள்ளே தாழ்த்திய யவை-3, முன்மேல் வாய்ப்பரப்பு பங்கு-3, விஸ்தாரம் செய்யலாம்; விஸ்தாரம் பங்கு-1, கண் ணிலிருந்து காதுக்கு நடுவணி பங்கு-7, காது நீளம் பங்கு-7 யென்பது.

விமானம் செய்கிறதற்கு விபரம்

கிராமத்துக்கும் சுவாமிக்கும் பிரபுவுக்கும் ஆயாதியில் பொருந்தின பிரஸ்தாரத்தை யிரட்டித்து இருபத்தெட்டுப் பாகஞ்செய்து அதிஷ்டானம் கூறு-3, பாதவர்க்கம் கூறு-6, பிரஸ்தாரம் கூறு-3, கர்னக்கூறு-5, பிரஸ்தாரம் கூறு-2, கழுத்துக்கூறு-3, பண்டிகைகூறு-1½, ஸ்தூபிகூறு-1½, ஆக பாகம் 28-ம் சரி.

அதிஷ்டான முயரமெடுத்து இருபது கூறுசெய்து பாத வர்க்கக்கூறு-5, செகதி கூறு-5, குமுதம் கூறு-5, பட்டியல் கூறு-5, ஆக கூறு 20-ம் சரி.

பாதவர்க்கம் உன்னிதமெடுத்து ஏழுபங்கு செய்து கனதைக்கூறு-2, கம்பிக்கூறு-½, முனைக்கூறு-1½, மாரக்கூறு-2, மேற்கம்பிக்கூறு-1, ஆக கூறு 7-ம் சரி.

செகதியுன்னித மெடுத்து ஏழு கூறு செய்து செகதி கூறு-5, பிள்ளைபற்பம் கூறு-1, மேல்கம்புக்கூறு-1, ஆக கூறு 7-ம் சரி.

குமுதகம் உன்னிதமெடுத்து பதினொரு கூறு செய்து கீழ்க்கம்பு கூறு-1, பற்பம் கூறு-1, குமுதகம் கூறு-7, மேல் பற்பம் கூறு-1, கம்பு கூறு-1, ஆக கூறு 11-ம் சரி.

பட்டியல் உன்னிதமெடுத்து ஒன்பதுகூறு செய்து கண்டங்கூறு-4, கம்பு கூறு-1, மழை கூறு-3, கம்பு கூறு-1, ஆக கூறு 9-ம் சரி.

பாதவர்க்கம் உன்னிதமெடுத்து ஏழுகூறு செய்து வேதியல் கூறு-1, வேதியல் உன்னிதமெடுத்து ஒன்பது கூறு செய்து ரண்டக்கூறு-4, கீழ்க்கம்புக்கூறு-1, மார் கூறு-1½, தலையிடை கூறு-1½, மேற்கம்பு கூறு-1, ஆக கூறு 9-ம் சரி.

பாதவர்க்கம் உன்னிதமெடுத்து மூன்றுகூறு செய்து காலுயரம் கூறு-2, அடுக்குசாம் கூறு-1, ஆக கூறு 3-ம் சரி.

அடுக்கு உன்னிதமெடுத்துப் பத்தொன்பதுகூறுசெய்து தாடி கூறு-2, குடங்கூறு-4, பலகை கூறு-5, வீரகண்டங் கூறு-3, போதியல் கூறு-5, ஆக கூறு 19-ம் சரி.

தாடியுன்னிதமெடுத்து ஐந்துபங்கு செய்து கீழ்க்கம்பு பங்கு-1, மார்பங்கு-2, தலையிடைப்பங்கு-2, ஆக பங்கு 5-ம் சரி.

குடம் உன்னிதமெடுத்து ஏழுபங்கு செய்து கீழ்க்கம்பு பங்கு-1, குடம் பங்கு-6, ஆக பங்கு 7-ம் சரி.

பலகையுன்னித மெடுத்து நான்குபங்கு செய்து மார் பங்கு-1½, மழை பங்கு-½, தலையிடைப்பங்கு-2, ஆக பங்கு 4-ம் சரி.

வீரற்கண்டம்போதியல் உன்னிதமெடுத்து எட்டுபங்கு செய்து போதியல் பங்கு-5, வீரகண்டம் பங்கு-3, ஆக பங்கு 8-ம் சரி.

பிரஸ்தானம் உன்னிதமெடுத்து இருபத்து மூன்று பங்கு செய்து உத்தாம் பங்கு-4, எழுதகம் பங்கு-5, கபோதகம் பங்கு-10, யாளளம் பங்கு-4 ஆக பங்கு 23-ம் சரி.

உத்தாம் எழுதகம் உன்னிதமெடுத்து ஐந்துபங்கு செய்து கம்பு பங்கு-1, மார் பங்கு-2, தலையிடைப் பங்கு-2 ஆக பங்கு 5-ம் சரி.

கபோதகம் உன்னிதமெடுத்துப் பதினொருபங்கு செய்து அடித்தொங்கல் பங்கு-2, அனுக்கம்பி பங்கு-1, கபோதகம் பங்கு-8 ஆக பங்கு 11-ம் சரி.

யாளம் உன்னிதமெடுத்து ஒன்பதுபங்கு செய்து வேதியல் கால்சரம் பங்கு-4, பிரஸ்தாரம் பங்கு-1, கழுத்துப் பங்கு-½, பண்டிகை பங்கு-2, பற்பம் பங்கு-1, ஸ்தூபி பங்கு-½, ஆக பங்கு 9-ம் சரி.

கெற்பகிரகத்தின் விபரம்

ஒருமுழம் முதல் ஐந்துமுழம் வரையில் ஏகதள விமான கெற்பகிரகம், கிராமத்துக்கும் - சுவாமிக்கும் - பிரபுவுக்கும்- ராஜாவுக்கும் - கர்த்தாவுக்கும் பொருந்தின ஆயாதிப் பிரமாணஞ் செய்யவும்.

நேமுகமான முழம் மூலப்பிரசாத மென்றுபோம்; ஆயாதிப்பொருத்தம் வானப்பிரவாய்ச் சுற்று முழத்தைக் குழிமாறிக் கண்ட துகையை ஆயாதி பொருந்தும்படியாய் ஒரு நிதானமாக இத்தனை முழமென்றறிந்து அதற்கு வானப் பிரவாய்க்குக் கால்பிரவாய் பாரிசத்துக்குக் கால்முழம் சாண் கழிவுபோட்டு கால்பிரவாய்க் கலத்தையிரட்டித்து முழத்தை யெட்டுப் பங்காக்கி அதிலொருபங்கு குறடாம்; இரண்டு பங்கு காலுயரம், ஒருபங்கு பிரஸ்தானம், உத்தாம் முதல் யாளமட்டப் பங்கு-1, அதன்மேல் ஏகதளவிமான வேதியல் பங்கு-1, அதன்மேல் உத்தாம் முதல் தூக்கோடுபண்டிகை பளிகை பற்பமட்டம் வரைக்கும் பங்கு-2, அதன்மேல் அடுக்குச்சாம் பங்கு-1 இது பெரும்பங்கு சரி.

கழுத்து உன்னிதமெடுத்து ஐந்துபாகஞ்செய்து அதை யேழுபாகஞ் செய்து வேதியல் பங்கு கூறு-1, மேல்நின்ற வுன்னிதமெடுத்து மேல்நின்ற கழுத்துப்பங்கு செய்கிறது.

வேதிய வுன்னிதமெடுத்து ஒன்பதுபங்கு செய்து கண்டம் பங்கு-4, கிழ்க்கம்பு பங்கு-1, பற்பம் பங்கு-1½, தலையிடை பங்கு-1½, மேற்கம்பு பங்கு-1 ஆக பங்கு 9-ம் சரி.

பண்டிகை யுன்னிதமெடுத்து ஐந்துபங்கு செய்து பிரஸ்தாரம் பங்கு-1, பண்டிகை பங்கு-3, மேல் மார்க்கட்டு சந்திரனில் பலிகை பற்பம் பங்கு-1 ஆக பங்கு 5-ம் சரி.

பிரஸ்தாரம் உன்னிதமெடுத்து இருபத்தொரு பங்கு செய்து உத்தரம் பங்கு-4, எழுதகம் பங்கு-5, தூக்கோடு பங்கு-8, கௌந்தபற்பம் பங்கு-4, ஆக பங்கு 21-ம் சரி.

பண்டிகைக்குமேல் மாலைமுதல் பலிகைமட்டம் வரைக்கும் உன்னிதமெடுத்து 15-பங்கு செய்து மாலைக்கட்டுப் பங்கு-2, சந்திரனிலை பங்கு-2, பலிகைபற்பம் பங்கு-11 ஆக பங்கு 15-ம் சரி.

விமானத்தின் உன்னிதமெடுத்து 29-பாகம் செய்து மனைப்பங்கு-2¾, முனைப்பங்கு-1, மார் பங்கு-2, மேல்கம்பு பங்கு-1, கீழ்ப்பங்கு-1, ஆரூடாம் பங்கு-3, கீழ்க்கம்புப் பங்கு-¾, புடம் பங்கு-10¼, ஆடே பங்கு-2½, கீழ் பங்கு-¾, ஸ்தூபி பங்கு-4 ஆக பங்கு 29-ம் சரி.

அனுஷ்டானம் உன்னிதமெடுத்து மூன்றுபங்கு செய்து காலப்பிரவாயைத் தொட்டு பஸ்தமமான வரைக்கும் பங்கு-1, இந்த ஒரு பங்கையும் 6-பங்கு செய்து செகதிமுன் வாய்ப் பங்கு-3, காலபற்பம் பங்கு-3, செகதி யொழுங்கில் எழுதகஞ் செய்கிறது; பலகை யொழுங்கில் பலகை செய்கிறது; பற்ப வொழுங்கில் எழுதகஞ் செய்கிறது; பஸ்தமம் ஙமம் பூமுனை யொழுங்கில் கபோதகஞ் செய்கிறது.

உத்தர வொழுங்கில் சொருகுசாலைப் பங்கு-½, அகாரை பங்கு-1 கர்னப்பங்கு 1-ம் சரி.

கெற்ப கிரகம்

அர்த்தமண்டபம், அந்திராள் மண்டபம், மகாமண்டபம், சோபன மண்டபம், ருத்திரகோபுர மண்டபம், அநுமணி மண்டபம், அநுமணியென்று பெயர்.

மட்டவேலைக்கு சரண்களத்தி விபரம்

ஒருகால் பரப்பு வைத்துக்கொள்கிறது.

கெற்பகிரகம் எவ்வளவோ அதை ஒரு திண்டாக வைத்து கோண அர்த்தமண்டபம் $\frac{1}{2}$, $\frac{3}{4}$ சாண் வைத்துக் கொள்கிறது.

மகா மண்டபம் 1, $1\frac{1}{2}$, 2 வைத்துச் செய்யவும்.

யாளி மகாமண்டபம் 1, $1\frac{1}{2}$, 2 வைத்துச் செய்யவும்.

மகாமண்டபம் அகலம்போல் சரிசெய்யவும், அல்லது ஒருகால் இரண்டுகால் நீளங் கூட்டியுள்ள காலும் விட்டுச் செய்யவும்.

கெற்பகிரகத்தை மூன்றுபத்தி ஆறுபத்தியாவது செய்யலாம்; அர்த்தமண்டபமும் அப்படிச் செய்யலாம். மகா மண்டபத்தை மூன்றுபத்தி ஆறுபத்தி பனிரெண்டு பத்தியாகவும் செய்யலாம்; சாலைமஞ்சம் விட்டுச் செய்யலாம்; விமானம் கெற்பக் கிரகம் எவ்வளவோ அந்த வயாத்துக்கு ஒன்றுக்கொன்று ஏகதளஞ் செய்யவும்.

திவ்வியதளம் ஒன்றுக்கொன்றரை செய்யவும்; நீராடி மண்டபம் திண்டு 1, $1\frac{1}{2}$ செய்யவும். கெற்பக் கிரகம் அகலங் கண்டதைப்போலவே உயரஞ் சரிசெய்யவும், அல்லது ஒரு காலுயரங்கூட்டிச் செய்யவும். அர்த்தமண்டபம் அந்திராள் மண்டபம் கெற்பக் கிரகம் போலவே சரிமண்டபம் மட்டாகச் செய்கிறது; மகாமண்டபம் குமுதகமட்டங் தளவரிசை செய்யவும்; மகாமண்டபம் முதல் தளவரிசை மட்டமாகச் சோபன மணிமண்டபம் தளவரிசைக் குறடுவிட்டுச் செய்ய

வும். அது முன்னாலே மண்டபஞ் செய்தால் கெற்பக்கிரக வானமட்டம் தளவரிசை செய்யவும். கெற்பகிரக படதான வொழுங்கில் வானம் மகாமண்டபம் இரண்டுகால் பாப்புச் செய்யவும்.

பஞ்சவர்னவேலை மட்டவேலை விபரம்

குமுதகம் சூத்திரம் மூன்றுகால், மூன்றரைக்கால் பாப்பு வைத்துச் செய்யவும்; உள்படக்கனத்தைக் கால்முழம் ½-முழம் சேர்த்துச் செய்யவும்; படக்கனநீளம் உள்படச் சேர்த்துச் செய்யவும்.

துய்யசமயம் உயரங்கொள்ள விபரம்

கெற்பக் கிரகம் ஒரு திண்டாக வைத்து திண்டு 1, 1½, 2, 3 சரியாக வைத்துச் செய்யவும்; திவ்வியகுறடு அகலம் ஸ்வாமி லாடஞ் செய்யவும்; சபைக்குறடு கெற்பக் கிரக அகலத்தை 3-ல் 1-ல் 4-ல் 1-ல் வைத்துச் செய்யவும். வாசல் கெற்பகிரகத்தை ஒரு திண்டாக வைத்து ரிஷபக் குறடு திண்டு-5, திண்டு-7, திண்டு-9, திண்டு-11 இந்தப்படி செய்யவும். அகலத்துக்கு உள்ளு ¾, 1, 1¼ அப்பாய்ச் செய்யவும். ருத்திரகோபுரஞ் செய்யத் திண்டு 4, 7, 8, 14, 16, 18, 20, 22, 24, 26, 28, 30, 32 இந்தப்படிக்குச் செய்யவும்.

முற்றுப்பெற்றது.

திருமகள் விலாச அச்சு நிலையம், சென்னை:—1941.